
கல்கி



KALKI 10.5.1970 40 காசு



ரெக்ஸ் பற்றிய மிகவும் திருப்தியளிக்கும் இரண்டு அம்சங்கள்.


ஒன்று, இதன் உன்னத தரம் — இப்போது, இதன் விலைநயம்.

ஒவ்வொருவர் சுவைக்கும் ஏற்ற
ஸ்க்வாஷ்கள் மற்றும் ஸிரப்களின் வகைகள்.

ரெக்ஸ் ஸ்க்வாஷுகள் மற்றும் ஸிரப்கள்— அதாவது, இனிமையான, இன்சுவையுள்ள, சாறு செறிந்த பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உன்னத பானங்கள் இவை. கவனமுடன் தேர்ந்தெடுத்த நேர்த்தியான பழங்களுடன் தூய கரும்பஞ் சாற்றுப் பாகும், விசேஷமான இதர சரக்குகளும் சேர்த்துத் தயாரிக்கப்படுகின்றன. சுவைத் தணியாத புத்துணர்ச்சி தரும் பானங்கள் இவை. இப்போது ரெக்ஸ் பானங்கள் சகாய விலையில் கிடைக்கின்றன. ரெக்ஸ் பானங்களை விட அதிக திருப்தியளிக்கும் பானங்கள் வேறென்ன இருக்க முடியும்?

- ஆரஞ்சு ஸ்க்வாஷ்
- ஆரஞ்சு கிரஷ்
- லெமன் ஸ்க்வாஷ்
- லெமன் பார்லி
- லைம் ஜூஸ் கார்டியல்
- மாங்கோ ஸ்க்வாஷ்
- கோலா கான்ஸன்ட்ரேட் ஃப்ருட் ஸிரப்
- ராஸ்பெர்ரி ஸிரப்
- ஸ்ட்ராபெர்ரி ஸிரப்
- பைனாப்பிள் ஸிரப்
- ரோஸ் ஸிரப்

கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி
(இந்தியா) பிரை. லிட். பம்பாய்-1.



Which other medium fulfils so many needs and requirements of millions like him at so little cost?

The first place to look for a job is in the columns of a Newspaper. Even if he is saving on other purchases, his daily paper for him is a must.

Men and women of the 26-35 age group today form the largest body of newspaper readers in this country*. And 68% of men, 67% of women who are undermatriculates form the highest reading group*

Young men and women are busy building a better life for themselves. The goods and services advertised in Newspapers and Magazines form the substratum of that brighter future.

There is a newspaper or magazine to reach every reader in his language a the lowest cost p thousand.

* (A.S.P. Readership Survey)

Address through the Press – it costs far less

IENS

Inserted in the interest of providing information for better advertising value by
THE INDIAN & EASTERN NEWSPAPER SOCIETY

everest/...


கல்கி

பொருளடக்கம்

சாதாரண, சித்திரை. 27 – 1970, மே 10

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



புது காங்கிரஸ்
என்னிடம் மட்டும் ஒரு துடுப்பு இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
அரசாங்கம்
கட்சி ஸ்தாபனம்
என்னிடம் மட்டும் ஒரு படகு இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
பழைய காங்கிரஸ்
நாம் இஷ்டம் போல் நுழையலாம்
வங்காளம்
காவல் நாய் தூங்குகிறது!
ஜனாதிபதி ஆட்சி
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ❋ இதழ் 41

பிரெஞ்சு சோதனை வெடிகள்

தென் பஸிபிக் பிராந்தியத்தில் அணுகுண்டுச் சோதனைகளை நடத்த பிரான்ஸ் ஏற்பாடு செய்து வருகிறது. இலட்சியத்தை அடைய முடியாததால் செயலற்றுக் கிடக்கும் நல்ல மனிதர்கள் எல்லோரும் விழித்தெழ வேண்டிய தருணம் இது. மனித சமூகத்தை அழிவினின்று காப்பாற்ற விரும்பும் எல்லாருக்கும் இக்கடமை உண்டு. குறிப்பாக, புது தில்லியில் ராஜ கட்டடத்தில் செயலாற்றி வரும் காந்தி நினைவு நிதியும் அதன் துணை அமைப்புக்களும் விழித்தெழ வேண்டும். அணு ஆயுதச் சோதனை பற்றிய உடன்பாடு ஏற்படுவதற்கு 1962ல் பாடுபட்டதுபோல் அவை இப்பொழுது உழைத்தாக வேண்டும். உடன்பாட்டை அடுத்து, அமெரிக்காவும், சோவியத் யூனியனும், பூமிக்கு மேலே சோதனை நடத்துவதை நிறுத்திவிட்டன. கதிரியக்கமுள்ள விஷத்துகள்களை உலகெங்கும் பரப்பிக் காற்றையும் நீரையும் அவை இப்பொழுது அசுத்தப்படுத்துவதில்லை. ஆனால் பிரான்ஸ் வேறுவிதமாகக் கருதுகிறது. 'கண்டங்களையே அடியோடு அழித்து விடுவதற்குப் போதுமான அளவில் ரஷியாவும் அமெரிக்காவும் குண்டுகளை இருப்பில் வைத்துக் கொண்டிருக்கின்றன. தம்மிடம் மட்டும் அவை அப்படியே இருக்க வேண்டும்; ஆனால் மற்ற நாடுகள் ஹைட்ரஜன் குண்டுகளைச் செய்ய முடியாதபடி தடை செய்துவிட வேண்டும் என்று அவை எப்படி எதிர்பார்க்கலாம்?' என்கிறது பிரான்ஸ்.

ஒரு தீமையை நிறுத்துவதற்கான வழி, போட்டா போட்டி ரீதியில் அதே தீமையைப் பெருக்கிக் கொண்டு போவது அல்ல. ஆயுதங்களை இருப்பு வைத்திருக்கும் வல்லரசுகள் அவற்றை அழித்துவிட வேண்டும்; இவ்விதம் அணு ஆயுதங்கள் அனைத்தின் மீதும் முழுத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று தான் பிரான்ஸ் உட்பட உலக நாடுகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிர்ப்பந்திக்க வேண்டும். 1962ல் போல இப்பொழுது ஒரு தூதுகோஷ்டியைப் பிரான்சுக்குக் காந்தி நினைவு நிதியும் மற்ற ஸ்தாபனங்களும் அனுப்பி வைக்க வேண்டும். 1962ல் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியையும் சோவியத் பிரதமர் குருஷேவையும் நமது தூதுகோஷ்டிகள் அணுகி, வானில் அணு ஆயுதச் சோதனைகளை நடத்தாமலிருக்குமாறு வலியுறுத்திக் கோரின. இப்பொழுது செல்லும் நமது தூதுகோஷ்டிகளுக்குப் பேட்டியளித்து அவை சொல்லுவதற்குச் செவி மடுக்குமாறு பிரான்ஸின் அரசை மட்டுமின்றி அந் நாட்டில் உள்ள பொது ஸ்தாபனங்களையும் பிரமுகர்களையும் கேட்க வேண்டும்.

தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் நிலைமையை நோக்கி மனித சமூகத்தை ஏதோ ஒரு சக்தி துரத்தியடிக்கிறது. அது நல்ல சக்தியா தீய சக்தியா என்பதை நாம் அறியோம். இவ்வுலகில் வாழும் பிற உயிரினங்களின் மீது தனக்குள்ள சக்தியை மனிதன் பெருமளவில் துஷ்பிரயோகம் செய்திருக்கிறான். அது பெருங் குற்றம். எனவே, தெய்வ தண்டனையாக இந்தப் பரிபூரணத் தற்கொலை வந்திடுமாயின் நாம் வருத்தப்படுவதற்கு நியாயமே இல்லை. ஆனால் அவ்வாறு நடந்தே தீரும் என்று நாம் வாளாவிருந்துவிட முடியாது. அம்மாதிரி நடவாமல் தடுத்து, மனிதன் சிறப்பாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் நமது சக்திகளை முழு அளவில் உபயோகப்படுத்த வேண்டும். என் யோசனைகளை ஏற்று காந்தி நினைவு நிதி போன்ற ஸ்தாபனங்கள் அவற்றைச் செயல்படுத்த முன்வரும் என்ற எண்ணத்தில் எனது கருத்துக்களைச் சற்று விரிவாகவே கூற விரும்புகிறேன். எனக்கு வயது மிக மிக அதிகமாகி விட்டது; உடல் துர்ப்பலமாகி விட்டது. எனவே, தூதுகோஷ்டியில் செல்ல என்னால் இயலாது. 1962ல் சென்ற தூதுகோஷ்டிக்குத் தலைமை வகித்த ஸ்ரீ ஆர். ஆர். திவாகர் பிரான்ஸுக்குச் செல்லும் இந்தத் தூதுகோஷ்டிக்கும் தலைவராக இருக்கலாம். கேட்டுக் கொண்டால் துணை புரிவதற்கு ஸ்ரீ ஜி. ராமச்சந்திர

னும் ஸ்ரீ பி. சிவராவும் இருக்கிறார்கள். மீராபென் ஐரோப்பாவில் இருக்கிறார். தூது கோஷ்டியில் சேருமாறு இவரையும் வற்புறுத்திக் கேட்கலாம். வானில் அணுகுண்டுச் சோதனைகளை நடத்துவதில்லை என்ற உடன்பாட்டில் கையெழுத்திடுமாறு பிரான்ஸை இணங்க வைக்க எவ்வளவோ செய்ய முடியும்; செய்ய வேண்டும்.

எனது இந்தக் கட்டுரை அச்சாகி வெளி வருவதற்கு முன்னமேயே ஒருகால் தென் பஸிபிச் சோதனை வெடிகள் நடந்தேறி விடலாம். ஆனால் விவகாரம் இத்துடன் தீர்ந்து விட்டதாக ஆகாது. வானில் மேற்கொண்டு சோதனைகளை எதிர்காலத்தில் நடத்துவதில்லை என்ற உடன்பாட்டில் அமெரிக்காவுடனும், ருஷ்யாவுடனும் சேர்ந்து கொள்ளுமாறு பிரான்ஸை வற்புறுத்த வேண்டும். பிற நாடுகளின் உரிமைகளைப் பொருட்படுத்தாமல் உலகில் உயிரினங்களுக்கு ஆதாரமாய் உள்ள காற்று மண்டலத்தைப் பாழ்படுத்தி நச்சு மயமாக்க முற்படுவது பெரிய அநீதியாகும். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தன் இஷ்டப்படி போர்க்கலன்களை வைத்துக் கொள்ளவும் பிரான்ஸுக்கு உரிமை உண்டு. ஆனால் அதற்காக மேற்கொள்ளும் முயற்சியில் அது பிற நாடுகளுக்குத் தீங்கிழைக்கலாகாது. உலகநாடுகள் தன்னடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது பழைய மரபு. இதனை மீண்டும் செல்லுபடியாக்குவோம். இப்போதைய தொழில் நுட்பச் சகாப்தத்தில் சர்வ தேசச்சட்டம் அடிபட்டுப் போய் விட்டது என்று நினைத்துவிடலாகாது.

வான வீதியில் சீனு ஒரு விண் வெளிக் கோளைச் செலுத்தியிருக்கிறது. அதை அடுத்து நாமும் அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற பரபரப்பான கோஷத்தைப் பார்லிமெண்டில் சில அங்கத்தினர்கள் கிளப்பியிருக்கிறார்கள். ஹைட்ரஜன் குண்டுகளை ஆயுத சாலையில் தயாரித்து வைத்து விட்டால், பந்தோபஸ்து உறுதிப்பட்டு விடுவதில்லை என்பது சந்தேகமற ருசுவாகியுள்ளது. பயங்கரமானதும் அதிகச் செலவு ஆகின்றதுமான போட்டியில் தான் இது கொண்டு போய் விடுகின்றது. ஏவுகணைகள், அவற்றுக்கு எதிரான தடுப்புக் கணைகள், தடுப்புக் கணைகளுக்கு எதிரிடையான மாற்றுக் கணைகள் என்றெல்லாம் தயாரித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. நம்மிடம் உள்ள வசதிகளை இம்மாதிரி வீணடிப்பது முழு முட்டாள்தனம். இந்த ஆயுதத் தயாரிப்பை இந்தியா மேற்கொள்ளுமாயின் பொருளாதார மீட்சி அடியோடு சாத்தியமல்ல என்ற நிலை ஏற்பட்டு விடும். இந்த மாபெரும் தவற்றினால் தேசம் அடியோடு திவாலாகி விடும். பந்தோபஸ்து கொஞ்சம் கூடக் கைகூடாது.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

அண்ணலின் அடிச்சுவட்டில்....

காந்தி மகான் பாரத நாட்டு அரசியலில் உலகம் காணாத புது வழியை — சத்தியாக்கிரக மார்க்கத்தைக் கடைப்பிடித்து மகத்தான புரட்சியை ஏற்படுத்தினார். ஆனால் அவர் அரசியலில் மட்டுமா புகுந்து பாரத மக்களுக்குப் புது வழி காட்டினார்? பாரத மக்களின் சமுதாய, ஆத்மிகத் துறைகளிலும் எந்த வழியைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று தம் வாழ்நாள் முழுதும் வாழ்ந்தும், எழுதியும், பேசியும் வழிகாட்டி வந்தார். இப்படி அவர் காண்பித்த நெறி உலக மக்களுக்குப் புத்தம் புதிய நெறியாகத் தோன்றுகிறது. ஆனால் அதுவோ, வேதங்களும் உபநிஷதங்களும் இதிகாசங்களும் பாரத மக்களுக்கு ஆயிரம் ஆண்டுகளாகப் போதித்து வரும் நெறிதான்.

காந்திஜியின் சமுதாய ஆத்மீக நெறிகளை இன்றும் நமக்கு நினைவூட்டி வருபவர் பூஜ்ய வினோபா அடிகள். அவர் வகுத்த வாழ்வு நெறிக்குச் சர்வோதயம் என்று பெயரிட்டு நாடெங்கும் கால்நடையாக யாத்திரை சென்று பட்டிதொட்டி கிராமங்களில் உள்ள மக்களுக்கெல்லாம் அன்பு நெறியையும் அஹிம்சை நெறியையும் ஈகையையும் இரக்கத்தையும் போதித்து வருகிறார். பூதானம், கிராம தானம் முதலியவற்றின் மூலம் அன்பு நெறியைப் பரப்பி வருகிறார்.

சென்னையில் சர்வோதய மகாநாடு மே 5-ந் தேதியிலிருந்து 10ந் தேதி வரை நடக்கிறது. 'விஞ்ஞானமும் தெய்விகமும்', 'கல்வி', 'காந்திஜியும் பொருளாதாரமும்' என்று பல வித கருத்தரங்குகளும் இவ்விழாவையொட்டி நடைபெறவிருக்கின்றன. மே 9-ந் தேதி திரு ஜயப்பிரகாஷ் நாராயண் இம்மகாநாட்டில் கலந்துகொள்கிறார். வினோபா அவர்களும் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரது அருளுரைகளைக் கேட்கத் தமிழ் மக்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். ஆசாரிய வினோபா பவே அவர்களின் திருவுருவத்தை இவ்விதம் அட்டையில் வெளியிட்டு, வினோபாஜி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி நல்வரவு கூறுகிறோம் !

காலமெல்லாம் காந்திக்கே

அடியில் காண்பது மகாத்மா காந்தியைப் பற்றி, பிரின்ஸ்டன் சரித்திர ஆராய்ச்சி சஞ்சிகையில் லூயி ஃபிஷர் எழுதிய கட்டுரையில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்ததொரு வாசகமாகும். லூயிஃபிஷர் கூறுகிறார்: ''மனித குலத்தின் வாழ்வு நீடிக்க வேண்டுமாயின்—நாகரிக வாழ்வு நீடிக்க வேண்டுமாயின்—சுதந்திரம், சத்தியம், கண்ணியம் இவற்றுடன் பண்பான வாழ்முறை மலர வேண்டுமாயின்-இந்த இருபதாம் நூற்றாண்டும், அதன்பின் வரவிருக்கும் காலமும் மகாத்மா காந்திக்கே உடைமையாக வேண்டும்; லெனினுக்கோ, டிராட்ஸ்கிக்கோ, மார்க்ஸுக்கோ, மாவுக்கோ, ஹோவுக்கோ அல்ல.''

ராஜாஜியின் கருத்துக்கள்

ஐ. சி. எஸ். அதிகாரிகள் மிகச் சிலரே இப்பொழுது பதவிகளில் இருக்கிறார்கள். அவர்களது உரிமைகளை எடுத்துவிடுகின்ற பிரேரணையை ஆட்சேபித்து, ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகையில் ஸ்ரீ வி. சங்கர் எழுதியுள்ளார். இவர் வல்லபபாய் படேலின் நம்பிக்கைக்குப் பாத்திரராக உழைத்த காரியதரிசி. நமது தேசிய சர்க்கார் ஒப்பந்தங்கள் மூலமாக ஐ.சி.எஸ். அதிகாரிகளுக்கு இந்த உரிமைகளை வழங்கி அவற்றுக்குத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்த அடிப்படைதான் அரசியல் சாஸன ஷரத்தில் இடம் பெற்றிருக்கிறது என்பதை ஸ்ரீ சங்கர் எடுத்துக் காட்டியிருக்கிறார். அரசியல் சாஸனத்தைத் திருத்தி விடுவதன் மூலம் நிலைமை மாறி விடாது. ஒப்பந்த அடிப்படையில் உறுதி செய்யப்பட்ட பொறுப்புக்கள் இதன்மூலம் ரத்தாகி விட மாட்டா. தீவிரவாதிகள் இந்தச் சட்ட நிலைமையை மறந்து விடுகிறார்கள்.

ஐ. சி. எஸ். உரிமைகளை நீக்கி விடுவதற்கான மசோதா மீது மக்கள் சபையில் வோட்டெடுத்த போது அது நிறைவேறுவதற்கு வேண்டிய எண்ணிக்கையில் அங்கத்தினர்கள் ஆஜராகவில்லை. தமது பிரிவைச் சேர்ந்த அங்கத்தினர்களில் பலர் வேண்டுமென்றே வராதது குறித்துப் பிரதம மந்திரி வேதனைப்படுகிறார். இந்த மசோதா ஒப்பந்த விரோதமானது. கொடுத்த வாக்குறுதிகளையும், ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களையும் மீறியது; எனவே, அத்தகைய மசோதாவை ஆதரிக்கப் பிரதமரது பிரிவைச் சேர்ந்த பலர் வரவில்லை. இதைக் குறித்து நாம் சந்தோஷப்பட வேண்டும். கட்சியின் அற்பமான சூழ்ச்சிகளுக்கு ஆதரவு திரட்டுவது தவிர வேறு நோக்கம் அந்த மசோதாவுக்கு இல்லை. எனவே, வாக்குறுதிகளுக்கு விரோதமாக வோட்டுச் செய்ய விரும்பாத சிலர் சபைக்கு வரவில்லை. சபையில் ஆஜராயிருந்து எதிரிடையாக வோட்டுச் செய்யாமல் விட்டார்களே என்பதற்காகப் பிரதம மந்திரி அவர்களிடம் நன்றி கொள்ள வேண்டும்.

★

தமிழ் நாடு சர்க்கார் நிறைவேற்றியுள்ள நில உச்சவரம்பு குறைப்புச் சட்டத்தை ஆட்சேபித்தால் மட்டும் போதாது. அந்தச் சட்டம் அரசியல் சாஸனத்துக்கு முரணானது; உற்பத்தியைப் பாதிக்கக் கூடியது; அதனால் யாருக்கும் நன்மையில்லை. இவற்றை யெல்லாம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் சுறுசுறுப்பான பிரசார இயக்கம் நடைபெற வேண்டும். ராஷ்டிரபதிக்கு எழுதுவது நல்லதுதான். ஆனால் பொதுமக்கள் போதிய அளவு விஷயமறிந்தவர்களாக இருப்பது அவசியம். இந்தச் சட்டம் நீதியற்றது, விவேகமற்றது என்ற விழிப்புணர்வு வளர்ந்தோங்கச் செய்யப்பட வேண்டும். இல்லாவிடில் நல்ல பயன் விளையாது.

★

பிஹாரின் பெருமை மிக்க தலைவர் ஸ்ரீ மகாமாயா பிரஸாத் ஸின்ஹா கலந்து கொண்ட பட்னா பொதுக் கூட்டத்தில் ஐந்து குண்டுகள் வெடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் கம்யூனிஸ வன்முறை எப்படி விரிந்து பரவி வருகிறது என்பதற்கு இது ஓர் அழுத்தமான சான்றாகும். இனியும் ஜனநாயகத்தைப் பற்றி வெறும் வார்த்தை ஜாலங்களை நாடு கேட்டுக் கொண்டிருப்பதற்கில்லை. நாட்டுக்கு இந்தப் பேச்சு தேவையில்லை. கட்சி அரசியலை மறந்து, நாட்டில் வன்முறையை ஒடுக்கி, ஒழுங்கை நிலைநாட்டும் முக்கிய கடமையை ஆற்றும் ஓர் அரசாங்கமே இன்று நாட்டின் தேவையாகும். இந்தத் தேவையை எக்காரணம் குறித்தேனும் இன்றைய பிரதமரால் பூர்த்தி செய்ய முடியாவிடில் அவர் பதவியை ராஜிநாமா செய்துவிட வேண்டும்.

என்ன சேதி?

பிடி அரிசித் திட்டம்

யாவர்க்குமாம் உண்ணும்
போதொரு கைப்பிடி

என்பது திருமூலர் திருமந்திரம். இதை நினை ஊட்டி ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசார்யாள் ஒரு புண்ணியப் பணியை வகுத்திருக்கிறார்கள்.

இதன்படி, ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கலயம் வைத்துத் தினந்தோறும் சமையலுக்கு முன் ஒரு பிடி அரிசியும் இரண்டு காசுகளும் சொடும்பமாக இல்லறத்தினர் எல்லோரும் கோரப்படுகிறார்கள்.

தன் வீட்டின் பக்கத்தில் உள்ள பத்து வீடுகளில் இதைச் செய்யும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்.

அமாவாசையன்று பிடி அரிசி கலயத்தில் இருக்கும் அரிசியையும் காசுகளையும், பக்கத்திலுள்ள வீடுகளில் அரிசி காசு இவை சேர்ந்திருந்தால் அதையும் சேர்த்து ஏதாவது ஒரு கோயிலுக்குக் கொடுத்துவிட வேண்டும். முதல் மாதம் இப்படிச் செய்ய வேண்டியது. அடுத்த மாதத்தில் சேரும் அரிசி, காசுகளை ரொம்பவும் கஷ்டப்படும் ஏழைக் குடும்பம் என்று தங்களுக்குத் தோன்றும் ஒரு குடும்பத்துக்கு அடுத்த அமாவாசை தினம் கொடுக்க வேண்டும். இவ்விதம் ஒரு மாதம் கோவிலுக்கும், ஒரு மாதம் ஓர் ஏழைக் குடும்பத்துக்கும் மாறி மாறி எல்லோரும் வம்ச பரம்பரையாகக் கொடுத்து வரவேண்டும்.

இவ்விதம் நடத்துமாறு திருப்பாவை — திருவெம்பாவை குழுவினருக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசார்யாள் பணித்துள்ளார்கள்.


ரமண ஜ்யோதி

பரம்பொருளுடன் ஒன்றியிருக்கும் பரம நிலையிலேயே அனவரதமும் இனித்திருந்தவர் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள். அவர் விதேக கைவல்யம் பெற்ற திருவண்ணாமலை ஆசிரமத்தில் இரண்டாண்டுகளுக்கு முன்பு ரமணேச வரலிங்கம் பிரதிஷ்டையாகி ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றது நினைவிருக்கலாம். தற்போது மகரிஷி மகாநிர்வாணம் எய்தி இருபதாண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு, மேற்படி ஆலயத்தை ஒட்டி ஒரு விஸ்தாரமான தியான மன்றம் நிறுவி வருகிறார்கள். இதற்கு நிதி திரட்டும் முகமாக, ஸ்ரீ ரமண பகவானை நேரிலேயே தரிசிப்பது போல் எழுச்சி தருகின்ற அவரது அருட்கோலத்தை அற்புதமாகச் சித்திரிக்கும் பல ஓவியங்களையும், மகரிஷி குறித்த அருமையான கட்டுரைகளையும் தன்னகத்தேகொண்ட 'ரமண ஜ்யோதி' (Ramana Jothi) என்ற அழகிய நூலை உருவாக்கிப் படைத்திருக்கிறார்கள். பிரதி விலை ரூபாய் பத்து. திருவண்ணாமலை ரமணாசிரமத்துக்கு எழுதிப் பெறலாம்; புண்ணிய கைங்கரியத்தில் பங்கு பெறலாம்.

அபல்லோ - 13

அபல்லோ-13 பற்றி ராஜாஜி என்ன சொல்கிறார் என்பது நேயர்களின் பிரத்தியேக கவனத்துக்கு உரியதாகும். அதனைக் கீழே தருகிறோம்:

அமெரிக்க விஞ்ஞான நுட்பத் திறனின் தலைசிறந்த சாதனை அபல்லோ—13ல் சென்ற பிரயாணிகள் சொஸ்தமாகத் திரும்பியது தான் எனலாம். இப்படிச் சொல்வது புதிராகத் தோன்றலாம். பிரிட்டனின் தலைசிறந்த நிர்வாக சாதனை, அது இந்தியாவில் தன் ஆளுகையை விட்டுக் கொடுத்தது தான்; பிரிட்டனின் பெரிய ராணுவ சாதனை, அது இரண்டாவது உலகப் போரின் போது 1940ல் டன்கர்கிலிருந்து தன் படையை வாபஸ் பெற்றதுதான். அவ்விதமே அபல்லோ—13ன் பயணிகளை ஜாக்கிரதையாகக் கொண்டு வந்து சேர்த்தது, பாராட்டுக்குரிய விண்வெளிச் சாதனையாகும்.




பெங்களூர் - தமிழ்ச் சங்கம்

ஏப்ரல் 3ந்தேதியன்று பெங்களூரில் தமிழ்ச் சங்கத்தின் கட்டிடத் திறப்பு விழா சிறப்புடன் நடைபெற்றது. கட்டிடத்தைத் திறந்து வைத்த மைசூர் முதல்வர் ஸ்ரீ வீரேந்திர பாட்டீல் கன்னடியரும் தமிழரும் எவ்வித பேதமுமின்றி இசைந்து வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் தமிழ்ச் சங்கத்தின் சீரிய கலாசாரப் பணியைப் பாராட்டிப் பேசினார். புகைப்படத்தில் மைசூர் முதல்வர், திரு மு. வரதராசனார், கட்டிட நிதிக் குழுவின் உப தலைவர் ஸ்ரீ டி. எஸ். ராஜம் ஆகியோரைக் காணலாம். ★

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி



நாற்பத்தோன்றும் அத்தியாயம்

மதுராந்தகன் நன்றி

முதன் மந்திரியின் கரம் மதுராந்தகன் மேல் பட்டதும் அவன் அலறினன்.

"ஐயோ! அப்பா! செத்தேன்! என்னைத் தொட வேண்டாம். என் கால்கள்! போச்சு! போச்சு!" என்று கூவினன்.

அநிருத்தர் அவனைத் தூக்குவதை நிறுத்தி விட்டு, "இளவரசே! தங்களுக்கு என்ன நேர்ந்தது? தங்கள் கால்களுக்கு என்ன நேரிட்டது?" என்று கவலையுடன் கேட்டார்.

"என் கால்கள் முறிந்தே போய் விட்டன. நடக்க முடியவில்லை; நிற்கவும் முடியவில்லை!"

முதன்மந்திரி திரும்பிப் பார்த்து, "அடே! பல்லக்கை இவ்விடம் கொண்டு வாருங்கள்!" என்று தம் ஆட்களுக்குக் கட்டளையிட்டார்.

பின்னர், "ஐயா! இந்த விபத்து எப்படி நேர்ந்தது? தாங்கள் மழையில் தனியாய்க் கிடக்கும் காரணம் என்ன? தங்களோடு வந்த பரிவாரங்கள் எங்கே? தங்களை இவ்விதம் விட்டு விட்டு அவர்கள் எப்படிப் போகத் துணிந்தார்கள்? அவர்களுக்கு என்ன தண்டனை விதித்தாலும் போதாதே!" என்றார்.

"முதன் மந்திரி! யாரையும் தண்டிக்க வேண்டாம்! யார் பேரிலும் குற்றம் இல்லை. மாலை நேரத்தில் குதிரை மேல் ஏறிக்கொண்டு நான் தான் தனியாகக் கிளம்பினேன். நதிக்கரை யோரமாகப் போய்க் கொண்டிருந்தேன். திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. ஒரு பெரிய இடி இடித்து மின்னல் மின்னியது. குதிரை மிரண்டு ஓடியது. நான் இந்த மரத்தின் கிளையில் சிக்கிக் கொண்டு கீழே விழுந்து விட்டேன். குதிரை எங்கேயோ போய்விட்டது. விழுந்த வேகத்தில் கால் முறிந்து விட்டதோ அல்லது சுளுக்கிக் கொண்டு விட்டதோ தெரியவில்லை. எழுந்து நிற்கவும் முடியவில்லை. நல்லவேளையாகத் தாங்கள் இச்சமயம் இங்கு வந்தீர்கள்!"

"ஏதோ தங்களுடைய தந்தை, மகாஞானிய கண்டராதித்த தேவர்

செய்த புண்ணியந்தான், இந்த மட்டும் நான் இங்கே வரும்படி நேர்ந்தது! கொஞ்சம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருங்கள். பல்லக்கில் தங்களை ஏற்றி விடுகிறேன். மற்ற விவரங்கள் எல்லாம் நாதன் கோவிலில் அடியேனின் இல்லத்துக்குப் போன பிறகு கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்'' என்றார் அநிருத்தர்.

பல்லக்கு அருகில் கொண்டு வந்து இறக்கப்பட்டதும் முதன் மந்திரி இளவரசரை மெதுவாகப் பிடித்துத் தூக்கிப் பல்லக்கினுள் கிடத்தினார்.


ஆட்களிடம், பல்லக்கைத் தூக்கிக்கொண்டு மெள்ள மெள்ள அசங்காமல் போக வேண்டும் என்று கட்டளையிட்டார். தாமும் பல்லக்கின் அருகிலேயே தொடர்ந்தாற் போல் நடந்து சென்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் நாதன் கோவில் என்று வழங்கிய சுந்தர சோழவிண்ணகரத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அந்த ஊர்ப் பெருமாள் கோயிலுக்கு அருகில் முதன் மந்திரி அநிருத்தரின் மாளிகை ஒன்று இருந்தது. அதற்குள் இளவரசர் மதுராந்தகரைத் தூக்கிச் சென்று அங்கிருந்த கட்டிலில் கிடத்தினார்கள்.

விளக்கு வெளிச்சம் கொண்டு வரச் சொல்லிப் பார்த்ததில் கால் முறியவில்லையென்றும் வெறும் சுளுக்குத்தான் என்றும் தெரிந்தது. இளவரசர் கொண்டிருந்த பீதியும் சிறிது தெளிந்தது.

பெருமாள் கோவிலிலிருந்து வந்த பிரசாதங்களை இருவரும் அருந்தினார்கள்.

பின்னர் முதன் மந்திரி, ''இளவரசே! இனி இரவு நிம்மதியாகத் தூங்குங்கள்! பொழுது விடிந்ததும் தங்கள் உசிதம் போல் எப்படியோ அப்







படிச் செய்யலாம். நான் தஞ்சைக்குத்தான் போகிறேன். என்னுடன் வருவதாயிருந்தால், தங்களைப் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்'' என்றார்.

''ஐயா! தாங்கள் எனக்கு எவ்வளவோ தீங்கு செய்திருக்கிறீர்கள். அதற்கெல்லாம் பரிகாரம் இன்று செய்துவிட்டீர்கள். இன்று எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன். அதற்கு எப்போதும் நன்றி செலுத்துவேன். ஒருவேளை இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் நான் அமரும்படி நேர்ந்தால் தங்களையே முதன் மந்திரியாக வைத்துக் கொள்வேன்!'' என்றான் மதுராந்தகன்.

அநிருத்தர் அதிசயக் கடலில் முழுகிப் போனதாகப் பாவனை செய்து, ''இளவரசே! சோழ குலத்துக்கு நான் கடமைப்பட்டவன். இந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் ஆலோசனை சொல்வதும் இயன்ற உதவி செய்வதும் என் கடமை. ஆகையால் தாங்கள் தவிட்டா எனக்கு நன்றி செலுத்த அவசியமில்லை. ஆனால் தங்களுக்கு நான் ஏதோ தீங்கு செய்திருப்பதாகச் சொன்னீர்களே!

அதுதான் எனக்கு விளங்கவில்லை. நான் தங்களுக்கு மனமறிந்து எந்தத் தீங்கும் செய்ததாக ஞாபகமில்லை. தாங்கள் சற்றுப் பெரிய மனசு செய்து தெரியப் படுத்தினால் அதற்குப் பிராயச்சித்தம் என்ன உண்டோ அதைச் செய்து விடலாம்!'' என்றார்.

''ஐயா! அநிருத்தரே! தாங்கள் மகா கெட்டிக்காரர், அறிவாளி, இராஜ தந்திர நிபுணர் என்பதெல்லாம் உலகமறிந்த விஷயம். ஆனால் தங்கள் கெட்டிக்காரத்தனத்தை என்னிடம் காட்ட வேண்டாம். தாங்கள் எனக்குச் செய்திருக்கும் தீங்கு எவ்வளவு கொடுமையானது என்பது எனக்குத் தெரியாது என்றும் எண்ண வேண்டாம். ஆனாலும் இன்று தாங்கள் எனக்குச் செய்த உதவியை முன்னிட்டு அதையெல்லாம் மறந்து விடப் போகிறேன். என்னுடைய நன்றியைத் தங்களுக்கு எந்த விதத்தில் தெரியப்படுத்தலாம் என்று சொல்லுங்கள். ஏதாவது பிரதி உபகாரம் செய்யக் கூடியது இருந்தால் கூறுங்கள்!''

அநிருத்தர் புன்னகை புரிந்து, ''ஆம், இளவரசே! தங்கள் நன்றியைச் செலுத்த வழி ஒன்று இருக்கிறது. தங்களிடம் இந்தக் கிழவன் கோர வேண்டிய வரம் ஒன்றும் இருக்கிறது. இனி இம்மாதிரி குதிரை ஏறித் தனி வழியே கிளம்ப வேண்டாம். முன்னும் பின்னும் பரிவாரங்கள் சூழ ரதத்தில் பிரயாணம் செய்யுங்கள். அதைவிடப் பல்லக்கில் பிரயாணம் செய்வது நலம். காலம் கெட்டிருக்கிறது. பல காரணங்களினால் மக்கள் மனக் கொதிப்பு அடைந்திருக்கிறார்கள். இன்றைக்குப் பழையாறையில் பார்த்தீர்களே! ஆகையால் திறந்த பல்லக்கில் பிரயாணம் செய்வதைக்காட்டிலும் மூடு பல்லக்கில் பிரயாணம் செய்வது இன்னும் நல்லது. பழுவூர் இளைய ராணியின் பல்லக்காக இருந்தால் ரொம்ப விசேஷமாயிருக்கும். யாரும் சந்தேகிக்கவேமாட்டார்கள்!'' என்றார்.

மதுராந்தகன் அசந்து போனான். அவன் முகத்தில் மறுபடியும் பயத்தின் அறிகுறி காணப்பட்டது. சற்றுப் பொறுத்துச் சமாளித்துக் கொண்டு, ''முதன் மந்திரி! என்ன வார்த்தை சொன்னீர்! பழுவூர் இளைய ராணியின் மூடு பல்லக்கில் என்னைப் பிரயாணம் செய்யச் சொல்வதின் கருத்து என்ன? என்னை அவமானப்படுத்துவது உமது நோக்கமா?....'' என்றான்.

''இளவரசே! பழுவூர் ராணியின் பல்லக்கில் பிரயாணம் செய்வதைத் தாங்கள் அவமானமாகக் கருதுவதை நான் அறியேன். எப்போதிருந்து இந்த எண்ணம் தங்களுக்கு உண்டாயிற்று? முன்னேயெல்லாம் அடிக்கடி தாங்கள் அவ்விதம் போய்க் கொண்டிருப்பது வழக்கமாயிருந்ததே? கடைசியாக, கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குப் போய்த் திரும்பிய பிறகு இந்த நல்ல முடிவுக்குத் தாங்கள் வந்திருக்க வேண்டும்....''

மதுராந்தகன் மேலும் திகில் கொண்டான். அவன் முகத்தில் பயப் பிராந்தியின் சாயல் பரவிற்று.

''முதன் மந்திரி! கடம்பூர் மாளிகைக்கு நான்.... நான்...'' என்று தடுமாற்றத்துடன் ஏதோ சொல்லுவதற்கு ஆரம்பித்தான்.

''இளவரசே! கடம்பூர் மாளிகைக்குத் தாங்கள் ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்கு அன்று தனாதிகாரி பெரிய பழுவேட்டரையருடன் போயிருந்தீர்கள் அல்லவா? அதைத்தான் சொல்கிறேன். அப்போது தாங்கள் இளைய ராணியின் பல்லக்கிலே போய் விட்டுத் திரும்பினீர்கள். அது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லைதான். பல்லக்குப் பிரயாணம் என்னைப் போன்ற கிழவர்களுக்கு உகந்தது. தங்களைப் போன்ற இளைஞர்கள் யானை மீதோ குதிரை மீதோ பிரயாணம் செய்வதுதான் உசிதம். ஆனால் குதிரைப் பிரயாணத்துக்குத் தகுந்த பயிற்சி வேண்டும். தங்களுக்கு உடம்பு சரியானதும் நானே அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்....''

''அன்பில் அநிருத்தரே! ஜாக்கிரதை! மேலும் மேலும் என்னை அவமானப் படுத்தும் வார்த்தைகளைச் சொல்லுகிறீர். இன்றைக்கு ஏதோ இந்த அசந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டபடியால் எனக்குக் குதிரை ஏற்றமே தெரியாது என்று முடிவு கட்டி விட்டீர். ஏதோ ஒரு சமயம் பல்லக்கில் சென்றபடியால் எப்போதும் பழுவூர் ராணியின் மூடுபல்லக்கில் நான் போவதாகச் சொல்லுகிறீர். உம்முடைய பிராயத்தையும் இன்றைக்கு நீர் எனக்குச் செய்த உதவியையும் நினைத்துப் பொறுத்தேன்....''

''இளவரசே! தங்களுடைய பொறுமை எனக்கு மிக்க மகிழ்ச்சி தருகிறது. 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பது முதுமொழி. தமிழகத்தின் மாபெரும் புலவர் என்ன கூறுகிறார்?

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை'

நிலம் தன்னைத் தோண்டுகிறவர்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறது. பொறுத்துக் கொள்வது மட்டுமா?

தோண்டுகிறவர்களுக்குத் தூய தண்ணீரையும் அளித்து உதவுகிறது. பூமிக்கு உள்ள இந்தக் குணம் பூமியை ஆள நினைப்பவர்களுக்கும் இருக்க வேண்டும். என்னைப் போன்ற கிழவன் ஏதாவது அனுசிதமாகச் சொன்னாலும் பூமி ஆள விரும்பும் தாங்கள் பொறுத்துக் கொள்வதுதான் உசிதம்.''

''ஐயா! என்ன சொல்கிறீர்? நான் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தை ஆள விரும்புவதாகக் குற்றம் சாட்டுகிறீரா?'' என்று கேட்டான் மதுராந்தகன். அவனுடைய உதடுகள் துடித்தன. புருவங்கள் நெரிந்தன. பயம் கோபமாகவும் ஆக்கிரமாகவும் மாறி வந்ததென்பதற்கு அறிகுறிகள்தென்பட்டன.

ஆனால் முதன் மந்திரியோ சிறிதும் பதற்றம் இல்லாமல், ''இளவரசே! குற்றம் சாட்டுகிறேன் என்று ஏன் சொல்கிறீர்கள்? தாங்கள் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தை ஆள விரும்பினால், அது எப்படிக் குற்றமாகும்! வீராதி வீரரான விஜயாலய சோழரின் குலத்தில் உதித்தவர் தாங்கள். மகானாகிய சிவஞான கண்டராதித்தரின் திருப்புதல்வர். இந்தச் சோழ சிம்மாசனம் ஏறுவதற்குத் தங்களுக்குப் பூரண உரிமை உண்டு. அதைத் தாங்கள் விரும்புவது குற்றம் எப்படி ஆகும்? அது குற்றம் என்றும், ஆகையால் அதற்காக இரகசியமான முறையில் சதி முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் யாராவது தங்களுக்கு யோசனை சொன்னால் அதைத் தாங்கள் நம்ப வேண்டாம். இளவரசே! இந்தக் கிழவனுடைய வார்த்தையைக் கொஞ்சம் செவி சாய்த்துக் கேளுங்கள். தங்களுடைய பெற்றோர்களின் விருப்பம் ஒரு விதமாயிருந்தது. தாங்களும் அதற்கு இணங்கிச் சிவபக்தியில் ஈடுபட்டிருந்தீர்கள். இப்போது தங்கள் மனம் மாறியிருக்கிறது. அதைப் பற்றிக் குற்றம் கூற யாருக்கும் பாத்தியதை இல்லை. தங்களுடைய உரிமையைத் தாங்கள் பகிரங்கமாகக் கோரலாம். சக்கரவர்த்தியிடமே தங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தலாம். அதை விடுத்து, கேவலம் காளாமுகக் கூட்டத்தாரின் ஆதரவைக் கோருவதற்காக அமாவாசை இருட்டில் தன்னந்தனியாகக் கொள்ளிடக் கரைக்குப் போக வேண்டிய அவசியமில்லை. அல்லது சம்புவரையர் மாளிகையில் அர்த்த ராத்திரியில் திருடர் கூட்டத்தைப் போல் கூட்டம் போட்டுச் சதிப் பேச்சுப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. இந்த மாதிரியெல்லாம் தங்களுக்கு யோசனை கூறுகிறவர்கள் தங்களுடைய பரம விரோதிகள் என்று வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றார்.

மதுராந்தகன் பெருங் குழப்பத்துக்கு உள்ளானான். முதன் மந்திரிக்கு இவ்வளவு விஷயங்களும் தெரிந்திருக்கின்றன என்று எண்ணியபோது அவனுக்கு உண்டான வியப்புக்கு அளவில்லை. அதே சமயத்தில் பீதி ஒரு பக்கமும், பீதி காரணமான ஆக்கிரமம் ஒரு பக்கமும் பெருகிக் கொண்டிருந்தன.

''ஐயா! தங்களுக்கு இவையெல்லாம் எப்படித் தெரிந்தது? எந்தத் துரோகி என்னுடனும் சிநேகமாயிருப்பது போல் நடித்துக் கொண்டு தங்களிடமும் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறான்?'' என்று கேட்டான்.

''தாங்கள் அதை அறிய முயல்வதில் பயனில்லை. இந்தப் பரந்த இராஜ்யமெங்கும் எனக்குக் கண்கள் இருக்கின்றன; காதுகளும் இருக்கின்றன. நான் அறியாமல் எதுவும் இந்த நாட்டில் நடைபெற முடியாது....''

''அப்படியானால், சக்கரவர்த்திக்கும் இவையெல்லாம் தெரியுமா?'' என்று மதுராந்தகன் கேட்டான்.

''இல்லை; அவருக்குத் தெரியாது. என் கண்களும் காதுகளும் தெரிவிக்கும் எத்தனையோ இரகசியங்கள் என் நெஞ்சத்தில் பதிந்து கிடக்கின்றன. அவசியமும் அவசரமும் நேர்ந்தால் ஒழிய அவை வெளியில் வரவே வரா...''

''ஆம், ஆம்; தங்களுடைய நெஞ்சத்தில் எவ்வளவோ பயங்கரமான இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன. அவை மட்டும் வெளியில் வந்தால், இந்தச் சோழ சாம்ராஜ்யமே நடுநடுங்கிப் போகாதா?'' என்றான் மதுராந்தகன். அவனுடைய குரலில் இப்போது இதற்குமுன் இல்லாத கபடமும் வஞ்சமும் தொனித்தன.

முதன் மந்திரி அதைக் கவனித்தும் கவனியாதவர் போல் கூறினார்:—''சக்கரவர்த்தி என்னுடைய ஆப்த நண்பர். ஆனால் அவர் அறியாத இரகசியங்களும் என் நெஞ்சில் இருக்கின்றன. சுந்தர சோழர் கொடிய நோய்வாய்ப்பட்டிருக்கிறார். பல காரணங்களினால் அவர் மனம் ஏற்கனவே புண்ணாகி யிருக்கிறது. சிற்றரசர்களின் சதிச் செயலைப் பற்றி அவரிடம் சொல்லி மேலும் அவர் நெஞ்சைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. அதற்கு அவசியமும் ஏற்படவில்லை. இளவரசே! தங்களுடைய காரியங்களைப் பற்றிய வரையில், நான் சக்கரவர்த்தியிடம் ஒரு நாளும் சொல்ல மாட்டேன் என்று தாங்கள் நம்பியிருக்கலாம்.''

''ஐயா! அன்பில் அநிருத்தரே! இந்தப் பேதை மதுராந்தகன் பேரில் தங்களுக்குத் திடீரென்று இவ்வளவு அபிமானம் தோன்றக் காரணம் என்ன?'' என்று மதுராந்தகன் கேட்டுவிட்டு ஏளனச் சிரிப்புச் சிரித்தான்.

''இளவரசே! தங்களிடம் திடீரென்று எனக்கு அபிமானம் பிறந்து விடவில்லை. சுந்தர சோழரின் புதல்வர்களைப் போலவேதான் தங்களிடமும் நான் எப்போதும் அபிமானம் வைத்து வந்திருக்கிறேன். அதைக் காட்டிக் கொள்வதற்கு இதற்கு முன்னால் சந்தர்ப்பம் ஏற்படவில்லை......''

''இன்றைக்கு அச்சந்தர்ப்பம் கிடைத்தது; நான் குதிரை மேலிருந்து விழுந்து காலை ஒடித்துக் கொண்டதால் ஏற்பட்டது. ஆனாலும் சில நாளைக்கு முன்னாலே யென்றால், என்னை அந்த மரத்தடியிலேயே கழுத்தை நெரித்துக் கொன்று விட்டு வந்திருப்பீர்....''

''நாராயணா! நாராயணா! இது என்ன வார்த்தை, இளவரசே!''

''ஐயா! எனக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ண வேண்டாம். எதைச் சொன்னாலும் நம்பக் கூடிய அப்பாவி என்று நினைக்க வேண்டாம். நான் என் தாயாரின் கர்ப்பத்தில் இருந்த போதே எனக்கு எதிராக நீர் சதி செய்யத் தொடங்கினீர். நான் இந்தப் பூமியில் பிறந்ததும் என்னைக் கொன்று விடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தீர்...அதோ உம்முடைய முகத்தில் ஆச்சரியத்தின் அறிகுறியைக் காண்கிறேன். அதெல்லாம் எனக்கு எப்படித் தெரிந்தது என்று வியப்படைகிறீர். இல்லையா? இந்தச் சோழ நாட்டில் பயங்கர இரகசியங்கள் பலவற்றை அறிந்தவர் நீர் ஒருவர்தான் என்று எண்ண வேண்டாம்!''

அநிருத்தரின் முகம் இப்போது உண்மையாகவே அதிசயமான காட்சி அளித்தது. அதில் கணத்துக்கு ஒரு சாயல் தோன்றி மறைந்தது. கடைசியில் வருத்தி வருவித்துக் கொண்ட புன்னகையுடன் முதன் மந்திரி, ''ஆம், இளவரசே! நான் அவ்விதம் இறுமாந்திருந்தது உண்மைதான். இன்றைக்குக் கர்வபங்கமாயிற்று. தாங்கள் பிறந்தவுடனே சிசுஹத்தி செய்ய ஏற்பாடு நடந்திருக்கும் பட்சத்தில் தாங்கள் எப்படிப் பிழைத்தீர்கள்? அந்த இரகசியத்தையும் கூறி விட்டால் கிருதார்த்தனாவேன்!'' என்றார்.

''எனக்கு எவ்வளவுதான் தெரியும் என்று சோதிக்கிறீர் போலும்! நல்லது; சொல்கிறேன். சிசுஹத்தி செய்வதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்திருந்தவர்கள் குழந்தை பிறந்ததும் ஆணா, பெண்ணா என்று கூடப் பாராமல் அவசரப்பட்டு எடுத்துக் கொண்டு போனார்கள். பெண் குழந்தை என்று தெரிந்ததும் தங்களிடம் வந்து சொன்னார்கள். பிழைத்துப் போகட்டும் என்று அக்குழந்தையைக் கோயில் பட்டர் ஒருவரிடம் ஒப்புவித்து வளர்க்கச் சொன்னீர்கள். பெண் குழந்தை பிறந்த அரை நாழிகை நேரத்தில் நான் பிறந்தேன். அதை நீங்கள் எதிர்பார்க்கவேயில்லை. என்னுடைய ஜாதக பலமும் சரியாயிருந்தது. அதனால்

யதன் உயிர் பிழைத்தேன். தங்களுடைய திட்டம் தவறிப் போனது பற்றி அறிந்த பிறகும், என்னைச் சிம்மாசனம் ஏற விடாமல் தடுப்பதற்குப் பல சூழ்ச்சிகள் செய்தீர்கள். என்னைச் சிவபக்தனாக அதாவது பைத்தியக்காரனாக வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தீர்கள். அதிலும் தவறிப் போனீர்கள். நான் தாங்கள் விரும்பியது போல் அவ்வளவு முழுப் பைத்தியக்காரனாகி விடவில்லை! — ஐயா! முதன் மந்திரியே! ஏன் இப்படி ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருக்கிறீர்? இவையெல்லாம் உண்மையில்லையென்று ஒரேயடியாகச் சாதிப்பதுதானே?''

முதன் மந்திரி உண்மையில் ஸ்தம்பித்துப் போய்த்தான் உட்கார்ந்திருந்தார். ஒருவாறு பேசும் சக்தியை வருவித்துக் கொண்டு, ''இளவரசே! தங்களுக்கு இவ்வளவெல்லாம் விவரங்கள் தெரிந்திருக்கும் போது நான் இல்லை என்று சாதிக்கப் பார்ப்பதில் என்ன பயன்?'' என்றார்.

'' ஆமாம்; பயனில்லைதான்! என்னிடம் இதுவென்று நீர் பரிவு கொண்டதன் காரணமும் எனக்குத் தெரியும். ஆதித்த கரிகாலனை உமக்குப் பிடிக்காது. அருள்மொழிவர்மனைச் சோழ நாட்டின் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க எண்ணியிருந்தீர். அவனைக் கடல் கொண்டு விட்டதனால் இப்போது என்னிடம் பரிவு கொண்டிருக்கிறீர்! ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன். முன்னர் எனக்கு நீர் செய்த தீங்குகளையெல்லாம் மறந்து விடப் போகிறேன். இன்று நீர் எனக்குச் செய்த உதவிக்கு நன்றியும் செலுத்துவேன். இன்று முதல் நீர் என் கட்சியில் இருப்பதாகச் சொல்லும் பட்சத்தில், நான் சிம்மாசனம் ஏறியதும் உம்மையே முதன் மந்திரியாக வைத்துக் கொள்ளவும் விரும்புகிறேன்'' என்றான் மதுராந்தகன்.

''இளவரசே! தங்களுடைய வார்த்தைகள் என்னைப் புளகாங்கிதம் அடையச் செய்கின்றன!'' என்றார் அன்பில் அநிருத்தப் பிரம்மராயர்.

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

சுரம் தெளிந்தது!

நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் ஆச்சாரிய பிக்ஷுவின் அறைக்குப் பக்கத்து அறையில் பொன்னியின் செல்வன் மரக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். மூன்று நாள் அவனுக்குக் கடும் சுரம் அடித்துக் கொண்டிருந்தது; பெரும்பாலும், சுயப் பிரக்ஞையே இல்லாமலிருந்தது. இந்த நாட்களில் பிக்ஷுக்கள் அவனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டு வந்தார்கள். வேளைக்கு வேளை மருந்து கொடுத்து வந்தார்கள். அடிக்கடி வாயில் தண்ணீர் ஊற்றிக் கொண்டு ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தார்கள்.

இடையிடையே எப்போதாவது சுய நினைவு தோன்றியபோது, தான் இருக்குமிடத்தைப் பற்றி அவன் எண்ணிப் பார்க்க முயன்றான். அவனுக்கு எதிரில் சுவரில் எழுதியிருந்த சித்திரக் காட்சி அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. அந்தச் சித்திரத்தில் தேவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள் காணப்பட்டார்கள். அவர்களில் சிலர் பலவித இன்னிசைக் கருவிகளை வைத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் வெண்சாமரங்களையும், வெண் கொற்றக் குடைகளையும் ஏந்திக் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் கரங்களில் பல வர்ண மலர்கள் உள்ள தட்டுக்களை ஏந்திக் கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சி தத்ரூபமாக இருந்தது. தேவர்களின் உருவங்கள் எல்லாம் உயிர் உள்ள உருவங்களாகத் தோன்றின. அடிக்கடி அக்காட்சிகளைப் பார்த்த பிறகு பொன்னியின் செல்வன் வானவரின் நாட்டுக்குத் தான் வந்து விட்டதாகவே எண்ணினான். அந்தத் தேவ யட்ச கின்னரர்கள் எல்லாரும் தன்னை வரவேற்க வருவதாகவும் எண்ணினான். சொர்க்க லோகத்துக்குத் தான் வந்து சேர்ந்தது எப்படி என்று யோசித்தான். அடர்த்தியான தாழைப் புதர்களும், அத்தாழைப் புதர்களில் பூத்திருந்த தங்க நிறத் தாழம்பூக்களும் இருபுறமும் நிறைந்திருந்த ஓடையின் வழியாக வான நாட்டுக்குத் தான் வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. அந்த ஓடை வழி நினைவு வந்த போது தாழம்பூக்களிலிருந்து வந்த நறுமணத்தையும் அவன் நுகர்வதாகத் தோன்றியது. ஓடையில் ஒரு படகில் ஏற்றித் தன்னை ஒரு தேவகுமாரனும் தேவகுமாரியும் அழைத்து வந்ததும் இலேசாக நினைவு வந்தது. தேவகுமாரன் சிவபக்தன் போலிருக்கிறது. இனிமையான தேவாரப் பாடல்களை அவன் அடிக்கடி பாடினான். தேவகுமாரி என்ன செய்தாள்? அவள் பாடவில்லை. அவள் அவ்வப்போது இரண்டொரு வார்த்

தைகள் மட்டுமே கூறினான். அதுவே தேவகானம் போலிருந்தது. ஆர்வமும் அன்பும் நிறைந்த கண்களால் தன்னை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்விருவரும் இப்போது எங்கே?

வானவர் நாட்டில் தேவர்கள், யக்ஷர்கள், கின்னரர்களைத் தவிர, புத்த பிக்ஷுக்களுக்கும் முக்கியமாக இடம் உண்டு போலும்! அவர்கள்தான் தேவலோகத்து அமுத கலசத்தைப் பாதுகாக்கிறவர்கள் போலும்! அடிக்கடி புத்த பிக்ஷு ஒருவர் அவனை நெருங்கி வருகிறார். அவனுடைய வாயில் சிறிது அமுதத்தை ஊற்றிவிட்டுப் போகிறார். தேவலோகத்தில் மற்ற வசதிகள் எவ்வளவு இருந்தாலும், தாகம் மட்டும் அதிகமாகவே இருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகமாகவே இந்தப் புத்த பிக்ஷு தன் வாயில் அமுதத்தை ஊற்றிவிட்டுப் போகக்கூடாதோ? தேவலோகத்தில்கூட ஏன் இந்தத் தரித்திர புத்தி?

ஒரு வேளை அமுதத்தை ஒரேயடியாக அதிகமாய் அருந்தக் கூடாது போலும்! இது அமுதமா? அல்லது ஒரு வேளை ஏதேனும் மதுபானமா? சிச்சீ! பிக்ஷுக்கள் கேவலம் மதுவைக் கையினாலும் தொடுவார்களா? தன் வாயிலே தான் கொண்டு வந்து ஊற்றுவார்களா? இல்லையென்றால், ஏன் இப்படித் தனக்கு மயக்கம் வருகிறது? அமுத பானம் செய்த சிறிது நேரத்துக்கெல்லாம் ஏன் நினைவு குன்றுகிறது?....

மூன்று தினங்கள் இவ்வாறு பொன்னியின் செல்வன் வானவர் உலகத்திலும் நினைவே இல்லாத சூனிய உலகத்திலும் மாறி மாறிக் காலம் கழித்த பிறகு, நாலாம்நாள் காலையில் தூக்கத்திலிருந்து விழித்தெழுவது போல் எழுந்து, பூரண சுய நினைவு பெற்றான். உடம்பு பலவீனமாய்த்தானிருந்தது; ஆனால் உள்ளம் தெளிவாக இருந்தது. எதிரே சுவரில் இருந்த உருவங்கள் சித்திர உருவங்கள் என்பதை அறிந்தான். அந்தத் தேவயக்ஷ கின்னரர்கள் தன்னை வரவேற்பதற்காக அங்கே நிற்கவில்லையென்றும், தேவலோகத்துக்கு விஜயம் செய்த பகவான் புத்தரை வரவேற்கிறார்கள் என்றும் அறிந்தான். மற்றொரு சுவரில் மேகங்கள் சூழ்ந்த வான வெளியில் புத்த பகவான் ஏறி வருவது போன்ற சித்திரம் எழுதியிருந்ததையும் கண்டான். புத்த விஹாரம் ஒன்றில் தான் படுத்திருக்கிறதை அறிந்து கொண்டான். எங்கே, எந்தப் புத்த விஹாரத்தில் என்று சிந்தித்த போது, இலங்கையிலிருந்து தான் பிரயாணம் தொடங்கியதிலிருந்து நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக நினைவு வந்தன. வந்தியத்தேவனும் தானும் அலைமோதிய கடலில் அலைப்புண்டு அலைப்புண்டு கை சளைத்துப்போனது வரையில் ஞாபகம் வந்தது. அப்புறம் ஒரே குழப்பமாக இருந்தது.

அச்சமயம் புத்த பிக்ஷு ஒருவர் அந்த அறைக்குள் வந்தார். வழக்கம்போல் கையில் அமிர்த கிண்ணத்துடன் வந்தார்! இளவரசன் அருகில் வந்ததும் பிக்ஷு அவனை உற்றுப் பார்த்தார். இளவரசன் கையை நீட்டிக் கிண்ணத்தை வாங்கி அதில் இருப்பது என்னவென்று பார்த்தான். அது தேவலோகத்து அமுதம் இல்லை யென்று உறுதிப்படுத்திக் கொண்டான். மருந்து அல்லது மருந்து கலந்த பால் என்று தெரிந்து கொண்டான். பிக்ஷுவை நோக்கி, "சுவாமி! இது என்ன இடம்? தாங்கள் யார்? எத்தனை நாளாக நான் இங்கே இப்படிப் படுத்திருக்கிறேன்?" என்று கேட்டான்.

பிக்ஷு அதற்கு ஒன்றும் மறுமொழி சொல்லாமல் திரும்பிச் சென்றார். அடுத்த அறைக்கு அவர் சென்று, "ஆச்சாரியரே! சுரம் நன்றாய்த் தெளிந்து விட்டது. நினைவு பூரணமாக வந்து விட்டது!" என்று கூறியது இளவரசன் காதில் விழுந்தது.

சிறிது நேரத்துக் கெல்லாம் வயது முதிர்ந்த பிக்ஷு ஒருவர் பொன்னியின் செல்வன் இருந்த அறைக்குள் வந்தார். கட்டிலின் அருகில் வந்து அவரும் இளவரசனை உற்றுப் பார்த்தார். பிறகு மலர்ந்த முகத்துடன், "பொன்னியின் செல்வ! தாங்கள் இருக்குமிடம் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரம். கடுமையான தாபஜ்ஜுரத்துடன் தாங்கள் இங்கே வந்து மூன்று தினங்கள் ஆயின. தங்களுக்கு இந்தச் சேவை செய்வதற்குக் கொடுத்து வைத்திருந்தோம். நாங்கள் பாக்கியசாலிகள்!" என்றார்.

"நானும் பாக்கியசாலிதான். இந்தச் சூடாமணிவிஹாரத்துக்கு வந்து பார்க்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தேன். எப்போதோ ஒரு சமயம் இந்த நகரின் துறைமுகத்துக்குப் போகும் போது வெளியிலிருந்து பார்த்திருக்கிறேன். தெய்வாதீனமாக இங்கேயே நான் வந்து தங்கியிருக்கும்படி நேர்ந்தது. சுவாமி! எப்படி நான் இங்கு வந்து சேர்ந்தேன், சொல்ல முடியுமா?" என்று அருள்மொழிவர்மன் கேட்டான்.

"இளவரசே! முதலில் தங்களுடைய கையில் உள்ள மருந்தைச்சாப்பிடுங்கள், எனக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்கிறேன்!" என்றார் பிக்ஷு.

இளவரசன் மருந்தைச் சாப்பிட்டு விட்டு, "ஐயா! இது மருந்து அல்ல;





● மக்கள் திலகம் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தமது அடிமைப் பெண் படத்துக்காக ஃபிலிம் ஃபேர் பரிசு வாங்க அண்மையில் பம்பாய் சென்றிருந்தார். அப்போது திரைப்படத் தொழில் நுட்பக் கலைஞர்களின் நிதிக்கெனக் கணிசமான தொகையை நன்கொடையாக அளித்தார். தாராவியில் மாபெரும் கட்சிக் கூட்டத்தில் பேசினார். கோரேகான் பகுதி மக்கள் அளித்த வரவேற்பினை ஏற்றார்.

சுமார் 20 ஆயிரம் பேர்களுக்கு மேலாகக் கூடியிருந்த பொதுக்கூட்டத்தினிடையே, மாதுங்கா ஜிம்கானா மைதானத்தில், திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்கு பம்பாய்த் தமிழ்ச் சங்கம் ஒரு வரவேற்பளித்தது. (படம்)

அவ்வமயம் 150க்கும் மேலான கலை, இலக்கிய, அரசியல் அமைப்புகள் திரு எம். ஜி. ஆர். அவர்களுக்கு மாலை மரியாதைகள் செய்தன. வரவேற்புக்குப் பதிலளித்த திரு எம். ஜி. ஆர். அன்பும், பண்பும், கண்டிப்பும் நிறைந்த தம் தாய் உணர்த்திய தூய குணங்களோடு நல்லவனாகவே வாழத் தாம் முடிவு செய்துள்ளதாயும் அதனைச் செயல்படுத்தும் திறனை மேன்மேலும் பெறவே இந்தப் பாராட்டுரைகள் பயன்படும் என்றும் கூறினார்.

● சித்தார் கலைஞர் பண்டிட் ரவிசங்கரின் ஐம்பதாவது பிறந்த தினத்தைப் பெரிய விழாவாகவே பம்பாயிலும், சென்னையிலும் சங்கீத சபையினரும், ரசிகர்களும் கொண்டாடி ரவிசங்கரைக் கௌரவித்தனர். பம்பாய் ஷண்முகானந்த சபை மண்டபத்தில் ஏப்ரல் 7ம் தேதியன்று டாக்டர் பி. பி. கஜேந்திர கட்கரும், டாக்டர் நாராயண மேனனும், பேராசிரியர் பி. ஆர். தியோதரும் ரவி சங்கரின் இசைக் கலையைப் பாராட்டிப் பேசினர். படத்தில் ஜம்ஷெட் ஜே. பாபா நினைவு மலரை வெளியிடுகிறார். கல்கி சதாசிவம் தம்பதியர் சார்பில் ஸ்ரீ ரவிசங்கர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

● சென்னையில் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சங்கீத சபை ஏப்ரல் 10ம் தேதியன்று எஸ். ஐ. ஈ. டி. கலை அரங்கில் பாராட்டு விழா நடத்தியது. அமெரிக்க கான்ஸல் திரு தாமஸ் ரெக்னுகல் தலைமையில், உயர் நீதிபதி கே. வீராசாமி ரவிசங்கர் சிறப்பு மலரை வெளியிட்டார். □



தேவாமிர்தம். என் விஷயத்தில் தாங்கள் எவ்வளவோ சிரத்தையுடன் கவலை எடுத்துச் சிகிச்சை செய்வித்திருக்கிறீர்கள். ஆனால் இதற்காகத் தங்களுக்கு நன்றி செலுத்தப் போவதில்லை!'' என்றான்.

ஆச்சாரிய பிக்ஷு புன்னகை புரிந்து, ''இளவரசே! தாங்கள் நன்றி செலுத்த வேண்டிய அவசியமும் இல்லை. நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வது பரமோத்தம தர்மம் என்று புத்த பகவான் அருளியிருக்கிறார். நோய்ப்பட்ட பிராணிகளுக்குக்கூடச் சிகிச்சை செய்யும்படி புத்த தர்மம் கட்டளையிடுகிறது. தங்களுக்குச் சிகிச்சை செய்ததில் அதிக விசேஷம் ஒன்றுமில்லை. சோழ குலத்துக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டவர்கள். தங்கள் தந்தையார் சுந்தர சோழ சக்கரவர்த்தியும் தங்கள் திருத் தமக்கையார் இளைய பிராட்டியும் புத்த தர்மத்துக்கு எவ்வளவோ ஆதரவு அளித்திருக்கிறார்கள். தாங்கள் இலங்கை அநுராதபுரத்தில் புத்த விஹாரங்களைப் புதுப்பித்துக் கட்ட ஏற்பாடு செய்ததும் எங்களுக்குத் தெரிந்ததே! அப்படியிருக்கும் போது, நாங்கள் செய்த இந்தச் சிறிய உதவிக்காகத் தங்களிடம் நன்றி எதிர்பார்க்கவில்லை......'' என்றார்.

''ஆச்சாரியரே! நன்றி செலுத்துவது பற்றி அந்த முறையில் நான் கூறவில்லை. எனக்கு எப்பேர்ப்பட்ட கடும் ஜுரம் வந்திருக்க வேண்டும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். இலங்கையில் இந்த ஜுரத்தினால் பீடிக்கப்பட்டவர்

களின் கதியை நான் பார்த்திருக்கிறேன். நியாயமாக இதற்குள் நான் வானவர் உலகத்துக்குப் போயிருக்க வேண்டும். அங்கே தேவர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள் என்னை வரவேற்று உபசரித்திருக்கக்கூடும் அல்லவா? இன்று தேவர்-தேவியர்களுக்கு மத்தியில் உண்மையாகவே அமிர்த பானம் செய்து கொண்டு ஆனந்த மயமாய் இருப்பேன் அல்லவா ? அதைத் தாங்கள் கெடுத்து விட்டீர்கள்! வானுலகத்தின் வாசல் வரையில் சென்ற என்னைத் திரும்ப இந்தத் துன்பம் நிறைந்த மண்ணுலகத்துக்குக் கொண்டு வந்து விட்டீர்கள். ஆதலின் எனக்குத் தாங்கள் நன்மை செய்ததாகவே நான் எண்ணவில்லை. ஆகையால்தான் தங்களுக்கு நன்றி செலுத்தப் போவதில்லை என்று கூறினேன்!''


ஆச்சாரிய பிக்ஷுவின் முகம் ஆனந்தப் பூரிப்பினால் மலர்ந்தது.

''பொன்னியின் செல்வ! தாங்கள் வானுலகத்துக்குப் போக வேண்டிய காலம் வரும் போது தேவேந்திரனும் பிற தேவர்களும் விமானங்களில் வந்து தேவ துந்துபிகள் முழங்கி மலர் மாரி பொழிந்து தங்களை அழைத்துச் செல்வார்கள். ஆனால் அந்தக் காலம் இன்னும் நெடுந் தூரத்தில் இருக்கிறது. இந்த மண்ணுலகில் தாங்கள் செய்யவேண்டிய அரும் பெரும் காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன! அவற்றை முடித்து விட்டல்லவா வானுலகம் செல்வது பற்றி யோசிக்க வேண்டும்?'' என்றார்.

இதுகாறும் சாய்ந்து படுத்திருந்த பொன்னியின் செல்வன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனுடைய திருமுகத்தில் அபூர்வமான களை பொலிந்தது. அவனுடைய விசாலமான நயனங்களிலிருந்து மின் வெட்டுப் போன்ற ஒளிக்கிரணங்கள் அலை அலையாகக் கிளம்பி அந்த அறையையே ஜோதி மயமாகச் செய்தன.

''ஆச்சாரியரே! தாங்கள் கூறுவது உண்மை. இந்த மண்ணுலகில் நான் சில காரியங்களைச் சாதிக்க விரும்புகிறேன். அரும் பெரும் பணிகள் பல செய்து முடிக்க விரும்புகிறேன். இந்தச் சூடாமணி விஹாரத்தை ஒரு சமயம் வெளியிலிருந்து பார்த்தேன். அநுராதபுரத்திலுள்ள ஸ்தூபங்களையும் விஹாரங்களையும் பார்த்தேன். அங்கேயுள்ள அபயகிரி விஹாரத்தைப் போல் பெரிதாக இந்தச் சூடாமணி விஹாரத்தைப் புனர் நிர்மாணம் செய்யப் போகிறேன். அநுராதபுரத்தில் உள்ள பெரிய பெரிய புத்தர் சிலைகளைப் போன்ற சிலைகளை இந்த விஹாரத்திலும் அமைத்துப் பார்க்கப் போகிறேன். இன்னும், இந்தச் சோழ நாட்டிலுள்ள சிவாலயங்களை அம்மாதிரி புதுப்பித்துக் கட்டப் போகிறேன். இலங்கையிலுள்ள ஸ்தூபங்களையும் விஹாரங்களையும் பார்த்துவிட்டு இச்சோழ நாட்டிலுள்ள ஆலயங்களையும் நினைத்துப் பார்த்தால், எனக்கு உடலும் உள்ளமும் குன்றுகின்றன. வானளாவும் கோபுரத்தை உடைய மாபெரும் ஆலயத்தைத் தஞ்சாவூரில் நிர்மாணிக்கப் போகிறேன். அதற்குத் தகுந்த அளவில் மகாதேவருடைய சிலையைச் செய்து நிர்மாணிக்கப் போகிறேன். ஆச்சாரியரே! இந்தச் சோழ நன்னாட்டில் புத்த ஸ்தூபங்களும் சிவாலயங்களின் கோபுரங்களும் ஒன்றோடொன்று போட்டியிட்டு மேக மண்டலத்தை எட்டப் போகின்றன. ஆயிரமாயிரம் வருஷங்களுக்குப் பிறகு இந்தத் தெய்வத் தமிழ் நாட்டில் பிறக்கும் சந்ததிகள் அவற்றைக் கண்டு பிரமித்து நிற்கப் போகிறார்கள் !.......''

இவ்வாறு ஆவேசம் கொண்டவன் போல் பேசி வந்த இளவரசன் உடலில் போதிய பலமில்லாமையால் கட்டிலில் சாய்ந்தான். உடனே ஆசாரிய பிக்ஷு அவனுடைய தோள்களைப் பிடித்துக் கொண்டு, கட்டிலில் தலை அடிபடாமல் மெள்ள மெள்ள அவனைப் படுக்க வைத்தார். நெற்றியில் கையினால் தடவிக் கொடுத்து, ''இளவரசே! தாங்கள் உத்தேசித்த அரும் பெரும் காரியங்களையெல்லாம் காலா காலத்தில் செய்து முடிப்பீர்கள். முதலில், உடம்பு பூரணமாய்க் குணமடைய வேண்டும். சற்று அமைதியாயிருங்கள்!'' என்றார். (தொடரும்)



Sunsilk cares–
with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease... gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair... revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk - more than a shampoo,
a cosmetic for your hair

LINTAS-SS. 11-140

uality Products by HINDUSTAN LEVER

விருது பெற்ற கலைஞர்கள்











தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஏப்ரல் 20ந் தேதி மவுண்ட் ரோட்டிலுள்ள பாலர் அரங்கில் சங்கீத, நாடக, திரைப்பட, நாட்டியக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்தது. இவ்வைபவத்துக்குத் தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார். தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதி அவர்கள் விருதுகளை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். விருது பெற்ற கலைஞர்களில் சிலரது படங்களை இவ்விரு பக்கங்களில் த(ந்)திருக்கிறோம்.

1. ஸ்ரீ மூர்த்தி, 2. மாயூரம் திரு எஸ். ராஜம், 3. திரு ஆர். கே. வெங்கடராம சாஸ்திரி, 4. திரு கே. பி. சிவானந்தம், 5. ஸ்ரீமதி திரிபுரசுந்தரி, 6. சுவாமி சரவணபவானந்தர், 7. ஸ்ரீமதி டி. ஆர். நவநீதம், 8. நாரதர் சீனிவாச ராவ், 9. ஸ்ரீமதி சௌகார் ஜானகி, 10. திரு ஏ. கே. வி. வேணுகோபால், 11. திரு டி. ஆர். மகாலிங்கம், 12. திரு டி. வி. நாராயணசாமி, 13. கவி கா. மு. ஷெரீப், 14. திரு ஸ்ரீரங்கம் செட்டியார், 15. திரு பிச்சைக்குட்டி.















விருது பெற்ற கலைஞர்கள் :

சுவாமி சரவணபவானந்தர்
(சாகித்திய கர்த்தா)

மாயூரம் திரு எஸ். ராஜம்
(சங்கீத வித்துவான்)

திரு ஆர். கே. வெங்கடராம சாஸ்திரி (வயலின் வித்துவான்)

ஸ்ரீமதி டி. ஆர். நவநீதம்
(புல்லாங்குழல் கலைஞர்)

தஞ்சாவூர் திரு கே. பி. சிவானந்தம் (வீணைவித்துவான்)

திரு டி. கே. மூர்த்தி
(மிருதங்க வித்துவான்)

உடுமலைப்பேட்டை திரு ஜி. மாரிமுத்தா பிள்ளை
(கஞ்சிரா வித்துவான்)

சிதம்பரம் திரு எஸ். ராதாகிருஷ்ண பிள்ளை
(நாதஸ்வர வித்துவான்)

திரு சி. பி. நாராயணசாமி பிள்ளை (தவில் வித்துவான்)

திரு ஏ.கே.சி. வேணுகோபால்
(கிளாரினெட் வித்துவான்)

ஸ்ரீமதி கே. திரிபுரசுந்தரி
(ஹரிகதாகாலட்சேபக்கலைஞர்)

சிக்கல் திரு ஆர். ராமசாமி பிள்ளை (பரதநாட்டிய ஆசிரியர்)

கும்பகோணம் ஸ்ரீமதி கே. பானுமதி
(பரதநாட்டியக் கலைஞர்)

திரு ஏ. எஸ். ஏ. சாமி
(நாடக ஆசிரியர்)

திரு டி. வி. நாராயணசாமி
(நாடக நடிகர்)

ஸ்ரீமதி எஸ். மைனாவதி
(நாடக நடிகை)

திரு டி. கே. கல்யாணம்
(நாடகத் தயாரிப்பாளர்)

திரு கவி க. அ. ஆறுமுகனார்
(நாடகப் பாடலாசிரியர்)

திரு நாரதர் டி. ஸ்ரீனிவாச ராவ்
(தொழில்முறையல்லாத நாடக நடிகர்)

திரு எம். எஸ். சோலைமலை
(திரைப்பட வசனகர்த்தா)

திரு டி. ஆர். மகாலிங்கம்
(திரைப்பட நடிகர்)

ஸ்ரீமதி சௌகார் ஜானகி
(திரைப்பட நடிகை)

திரு ஆ. காசிலிங்கம்
(திரைப்பட இயக்குநர்)

திரு பி. ராஜமாணிக்கம்
(திரைப்படத் தயாரிப்பாளர்)

திரு எஸ்.எம். சுப்பையா நாயுடு
(திரைப்பட இசை அமைப்பாளர்)

கவி திரு கா. மு. ஷெரீப்
(திரைப்படப் பாடலாசிரியர்)

டாக்டர் சாத்தூர் பிச்சைக்குட்டி
(வில்லுப்பாட்டுக் கலைஞர்)

திண்டுக்கல் திரு ஸ்ரீரங்கம் செட்டியார்
(கரக நாட்டியக் கலைஞர்)

ராமாயணம்

ராஜாஜி

பம்பையைத் தாண்டிய பிறகு கடலையும் கடந்து ராவணன் லங்கா புரியுள் பிரவேசித்தான். துயரத்தால் துடித்துக் கொண்டிருந்த சீதையுடன் தன் அந்தப்புரம் அடைந்தான். ஒரு பெண்ணுருவம் கொண்டு தன் உயிரைக் குடிக்க வந்திருந்த அந்தகனை எடுத்துக் கொண்டு தன் அந்தப்புரம் புகுந்தான். 'சீதையை அடைந்து விட்டேன்' என்று மூர்க்கன் எண்ணினான்.

உடனே பிசாசுகளைப் போன்ற சில கோர ராக்ஷஸிகளைக் கூப்பிட்டு, ''இவளை நீங்கள் வெகு ஜாக்கிரதையாகக் காவலிருந்து பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று ஆணையிட்டான்.

''என் உத்தரவின்றி ஆணாவது பெண்ணாவது எவரும் இவள் இருக்குமிடம் அண்ட விடாதீர்கள்!'' என்று கண்டிப்பாக உத்தரவு போட்டான்.

''இவள் என்ன இச்சித்தாலும் வஸ்திரமோ பொன்னோ மணியோ எதுவாயினும் அவளுக்குக் கொடுத்துச் சந்தோஷப்படுத்த வேண்டும். எனக்குச் செய்யும் பணிவிடையும் மரியாதையும் இவளுக்கு நடக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டான்.

''யாராவது அவள் மனம் துன்புறும் பேச்சுப் பேசினால் கொன்றுவிடுவேன். தெரிந்தோ தெரியாமலோ அவளுக்குக் கோபமோ கஷ்டமோ உண்டாக்கும் பேச்சு யாரும் பேசக் கூடாது. ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தான்.

சீதையை அந்தப்புரத்தில் ஓரிடத்தில் இறக்கி விட்டு, இனி என்ன செய்ய வேண்டியது என்று யோசிக்கலானான். சாமர்த்தியமான சாரர்களை அழைத்து உத்தரவிட்டான். ''நீங்கள் உடனே கரன் இருந்த ஜனஸ்தானம் போய் அங்கே பயப்படாமல் ராமன் என்ன செய்து வருகிறான் என்பதை நன்றாகக் கவனித்து வர வேண்டும். அந்த ராமன் இருக்கும் வரையில் எனக்குத் தூக்கம் வராது! அவன் எனக்குப் பெரிய சத்துரு. அவன் எப்படியாவது சாகவேண்டும். நீங்கள் போய்த் தைரியமாய் உங்கள் வேலையைச் செய்ய வேண்டியது'' என்று உத்தரவிட்டான்.

கடலால் சூழப்பட்ட ஒரு கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டு, எவ்வளவு தூரத்தில் தான் சிறை கிடக்கிறாள் என்பதைச் சீதை உடனே அறியவில்லை. தன்னுடைய நாதனை வீரன் உடனே வந்து ராவணனைக் கொன்று மீட்பான் என்றே எதிர்பார்த்தாள். ஆனபடியால் மிகவும் துன்பப்பட்டாளாயினும், தன்னுடைய சித்தத்தைத் திடம் பண்ணிக் கொண்டு தன் நாதனுடைய வீரத்தையும், சாமர்த்தியத்தையும் பூரணமாக நம்பித் தைரியமாக இருந்தாள். அரக்கன் தன்னண்டை மிருகத்தனமாக நடந்து கொள்ளவில்லை என்பதையும் கண்டு ஒருவாறு ஆறுதலடைந்தாள்.

சாரர்களை ஜனஸ்தானத்துக்கு அனுப்பிவிட்டு, ராவணன் சீதை இருந்த



அந்தப்புரம் பிரவேசித்தான். அவள் சோகத்தில் மூழ்கிக் கண்ணீர் நிறைந்த கண்களோடு இருப்பதைக் கண்டான். ராக்ஷஸிகள் தங்கள் காவல் வேலையைச் சரியாகச் செய்து வருவதையும் பார்த்தான். சரி, தன் செல்வத்தையும் அந்



தன்னையும் அவள் பார்க்க வேண்டும், பார்த்த பின் நிச்சயமாகத் தனக்கு உடன்படுவாள் என்று எண்ணி அதற்கு ஏற்பாடு செய்தான்.

அவனுடைய பெரிய அரண்மனைக்குக் கொண்டு போய் அங்குள்ள சிறப்பையும் செல்வத்தையும் காண்பித்தார்கள். ராவணனுடைய சம்பத்தும் ராஜ போகங்களுக்குரிய பொருள்களும் உலகத்தில் வேறு எந்த அரசனும் பெற்றதில்லை. சீதைக்கு எல்லாவற்றையும் காண்பித்தார்கள். இதைக் கண்டு தன்னை மோகிப்பாள் என்று அரக்கன் எண்ணினான்.

எங்கு பார்த்தாலும் பொன்னும் மணியும், பட்டும், எங்கு பார்த்தாலும் கண்ணைக் கவரும்படியான விசித்திர வேலைப்பாடு அமைந்த மண்டபங்கள், விமானங்கள், மேடைகள், ஆயிரக் கணக்கான வேலைக்காரிகள், செல்வத்தாலும், ராஜ்யாதிகாரத்தாலும் உண்டாகக் கூடிய எல்லாவித சம்பத்தையும் லங்காபுரியில் ராக்ஷசேச்வரனுடைய அரண்மனையில் கண்டாள். ஆனால், சீதையின் மனம் வேறு எங்கேயோ இருந்தது. தன்னுடைய பெருஞ் செல்வத்தை யெல்லாம் அவளுக்குக் காட்டி விட்டு அவளிடம் பேச ஆரம்பித்தான். தன் சேனையின் பெருங் கணக்கைச் சீதையிடம் சொன்னான்.

அவளோ முன்னமேயே ராவணனுடைய வீரியத்தைப் பற்றித் தன் அபிப்பிராயத்தைச் சொல்லி விட்டாளே! ஆயினும் வெட்கமில்லாமல் தன் சேனா பலத்தைப் பற்றி எடுத்துச் சொன்னான்: ''இதையெல்லாம் நீ உன்னுடைய பொருளாகவும் உன்னுடைய ராஜ்யமாகவும் வைத்து அனுபவிக்கலாம். என் பிராணனை விடச் சிறந்தவளாக எனக்கு நீ ஆவாய். என்னுடைய மனைவிகள் பலபேர்; ஆயினும் அவர்கள் அனைவருக்கும் நீ எஜமானியாக, என்னுடைய அன்பு முழுவதும் பெற்று விளங்குவாய். நான் சொல்வதைக் கேள். வேறு யோசனை செய்யாதே. என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வாயாக. நூறு யோஜனை தூரத்தில், இந்த இலங்காபுரியானது சமுத்திரத்தால் சூழ்ந்து, ஆயிரக் கணக்கான மகா வீரர்களால் காக்கப்பட்டு வருகிறது. இங்கே யாரும் பிரவேசிக்க முடியாது.

''தேவாசுரர்களில் எனக்குச் சமமான சக்தி கொண்டவர்கள் யாருமே இல்லை. இது தேவாசுரர்கள் அறிந்த விஷயம். ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்ட ஓர் அற்ப மானிடன், வனத்தில் தவமிருக்க நிச்சயித்திருக்கும் ஒரு நிக்கற்றவன், அவனைக் கட்டிக் கொண்டு நீ என்ன சுகம் அடைவாய்? உன் அழகுக்குத் தகுந்த சம்பத்துள்ள புருஷன் நான். சுகம் அனுபவிக்கும் யௌவனப் பருவத்தை வீணாக்கிக் கொள்ளாதே. ராமனை நீ மறுபடியும் பார்க்கப் போவதில்லை. அதைப் பற்றிச் சந்தேகம் வேண்டாம். ஒருநாளும் ராமன் இங்கே அண்ட முடியாது. என்னுடைய ராஜ்யம் முழுவதும் உன்னுடையதாக வைத்துக் கொண்டு என்னுடன் அனுபவிப்பாயாக! நானும் எனக்குட்பட்டுக் கிடக்கும் தேவர்களும் உன் அடிமைகளாவோம். என் முக்கிய பட்டமகிஷியாக அபிஷேகம் செய்யப்படுவாய். உனக்கு ஒரு குறைவும் இருக்காது. இதுவரையில் பூர்வ கர்ம விசேஷத்தால் கஷ்டங்களை அனுபவித்தாய். இனிமேல் உன் புண்ணிய கர்மங்களின் நற்பயனை என்னுடன் அனுபவிக்கப் போகிறாய். லங்கையை ஆளப் போகிறாய். குபேரனை ஜெயித்த லங்கேசன் மனைவியாவாய். புஷ்பக விமானத்தில் ஏறி நாம் இஷ்டப்படி சஞ்சரிப்போம். உன் அழகிய முகத்தில் துக்கம் காணப்படக்கூடாது. சந்தோஷமாக இருப்பாயாக'' என்றான்.

ராவணன் இவ்வாறெல்லாம் பேசும் போது சீதையின் கண்களில் தாரை தாரையாக நீர் பெருகிற்று. புடவையின் தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டாள். தன் பயத்தை அரக்கர்கள் காணாமல் இருப்பதற்காக இவ்வாறு செய்தாள்.

''நீ சங்கோசப்படாதே! என்னை ஒப்புக் கொள்வதில் பாபம் இல்லை. கூச்சம் வேண்டாம். தெய்வத்தால் ஏற்பட்ட நிலையை ஒப்புக் கொள்ளலாம் என்பது சாஸ்திரம். அழகியே! என் தலையை உன் பாதங்களில் வைத்துக் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு அருள்வாய். நான் உனக்கு அடிமை. என் பதவியையும் மறந்து நான் உன்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய வாழ்நாளில் யாரையும் இப்படி நான் இறைஞ்சியது கிடையாது.''

இவ்வாறு ராவணன் சீதையை மிக வருந்திக் கேட்டுக் கொண்டான். அவள் ஒப்புக் கொள்வாள் என்றும், அவளை அடைந்து விடுவது நிச்சயம் என்றும் அரக்கன் எண்ணினான்.

மனத்தில் நிச்சய புத்தி இருந்தால் எந்தச் சங்கட நிலையிலும் தைரியம் உண்டாகும். சோகத்தால் வாட்டப்பட்ட சீதை அரக்கனைக் கண்டு பயமே இல்லாமல் பேசலானாள். ஒரு துரும்பைக் கிள்ளித் தனக்கும் ராவணனுக்கும் மத்தியில் வைத்துப் பேசினாள். **(தொடரும்)**



1. ஸ்ரீ செம்மங்குடி, ஸ்ரீ யக்ஞராமன் அவர்களுக்குப் பரிசு வழங்குகிறார்.

2. அயனாவரம் ஷண்முகானந்த சபை அரங்கில் 29-3-70 அன்று விறுவிறுப்புடன் பாடிய கழுகுமலை கந்தசாமி. திரு எம்.எஸ். அனந்தராமன் வயலின்.

3. 27-3-70 அன்று ஸ்ரீ கிருஷ்ண கான சபை அரங்கில் பாடிய திரு மதுரை டி. என். சேஷகோபாலன். லால்குடியும் சிவராமனும் பக்க வாத்தியம் வாசிக்கின்றனர்.

4. 28-3-70 அன்று அதே மேடையில் பாடிய ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி வெங்கடேசன். சிக்கில் பாஸ்கரனும் நாகூர் அம்பி அய்யரும் பக்க வாத்தியம் வாசித்துச் சிறப்பித்தனர்.

5. 29-3-70 அன்று பாடிய தஞ்சை திரு எஸ். வெங்கடேசன். வி. வி. சுப்பிரமணியமும் பாலக்காடு ரகுவும் பக்கவாத்தியம் வாசித்தனர்.

கலைத் தொண்டுக்குப் பரிசு


இளம் பாடகர்களையும் வித்வான்களையும் ஊக்குவித்துக் கச்சேரிகள் செய்ய வாய்ப்பளித்து, அவர்கள் கலைக்கு ஆதரவு தந்து உற்சாக மூட்டும் நற்பணியைச் சிறப்பாகச் செய்யும் நகர சங்கீத சபைக்குக் கௌரவப் பரிசாக அளிக்கச் சுழல் கேடயம் ஒன்றை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் ஸ்ரீ சதாசிவம் அவர்களும் சென்ற 1969ம் ஆண்டு ஆரம்பத்தில் ஏற்படுத்தியது சங்கீத ரசிகர்களுக்கு ஞாபகம் இருக்கும். இது சம்பந்தமான ஏற்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்புக்களையும் எந்தச் சங்கீத சபைக்கு இச் சுழல் கேடயத்தை வழங்குவது என்று நிர்மணம் செய்யும் பொறுப்பையும் சென்னை சங்கீத சபைகளின் சம்மேளனம் ஏற்றுக் கொண்டது.

1969ம் ஆண்டில் இத்துறையில் சிறப்புப் பணியாற்றிய தியாகராயநகர் ஸ்ரீ கிருஷ்ண கான சபைக்கு இச் சுழல் கேடயத்தை அளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு, சென்ற மார்ச் 27ம் தேதியன்று சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாசய்யர் சங்கீத சபை சம்மேளனத்தின் சார்பில் இக் கேடயத்தை ஸ்ரீ கிருஷ்ண கான சபைக் காரியதரிசி திரு ஆர். யக்ஞராமனுக்குத் தமது ஆசியுடன் வழங்கினார். ஸ்ரீ கிருஷ்ண கான சபையின் கலைத் தொண்டைச் சிறப்பித்துப் பாராட்டினார்.

ஸ்ரீராம நவமி உற்சவத்தைக் கொண்டாடும் விழாவில் பல இளம் வித்வான்களுக்குக் கச்சேரி செய்யும் வாய்ப்பை ஸ்ரீ கிருஷ்ண கான சபை, பாரத் பைன் ஆர்ட்ஸ், பிரம்ம கான சபை, பெரம்பூர் சங்கீத சபை, அயனாவரம் ஷண்முகானந்த சபை ஆகியவை வழங்கியதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இளம் வித்வான்களுக்கு சீனியர் பக்க வாத்தியங்களை அமைத்து அவர்களை ஊக்குவித்தது பாராட்டுக்குரியது. ★









அமெரிக்காவில் ஆப்பரேஷன்!


○ சஸ்திர சிகிச்சை என்பது சகஜமாகி விட்ட காலம்தான் இது. ஆனால் அமெரிக்காவில் நடக்கும் ஆப்பரேஷன் என்றால் அது அலாதிதான்!

ஆர்.எம். நாராயணன்

சென்னை மீனம்பாக்கத்திலிருந்து 10-2-69 அன்று இரவு மணி பதினொரு அளவில் என்னையும் என் சகோதரர் இராமநாதனையும் ஏற்றிக்கொண்டு ஏர் இந்தியா போயிங் 707 தமிழக மண்ணிலிருந்து புறப்பட்டது. திரும்பி இந்தியாவுக்கு வருவேன் என்ற அவநம்பிக்கையுடன்தான் புறப்பட்டேன். பெற்றோர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் திரும்ப என்றைக்குப் பார்க்கப் போகிறோமோ என்ற நினைப்பிலேதான் அமெரிக்காவுக்குப் பறந்தேன்.

காரணம், என் இருதயத்திலோ அல்லது அவ்வுறுப்பிலிருந்து புறப்படும் பெரிய ரத்தக் குழாயிலோ ஏதோ கோளாறு. வேலூர் ஆஸ்பத்திரியிலும், சென்னை ஜி. எச்.சிலும் பரிசோதனைகள் செய்தார்கள். நிபுணர்கள் பலரும் வெவ்வேறு விதமான அபிப்பிராயம் தெரிவித்தார்கள். ஆகவேதான் கடைசியில் அமெரிக்கா சென்று சிகிச்சை செய்து கொள்வது என்ற முடிவுக்கு வர வேண்டியதாயிற்று.

ஹூஸ்டனில் உள்ள டெக்ஸாஸ் மெடிக்கல் சென்டரில் செயின்ட் லூக்ஸ் ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டேன். நான் ஆஸ்பத்திரியில் சேர்ந்த இரண்டு மணி நேரத்துக்குள் டாக்டர் டென்டன் ஏ. கூலியும் அவர் குழுவைச் சேர்ந்த மற்றப் பதினேழு டாக்டர்களும் என்னைப் பார்க்க வந்து முதலில் எங்கள் பிரயாணத்தைப் பற்றி அன்புடன் விசாரித்து விட்டுத்தான் என் இருதயக் கோளாறு பற்றிக் கேட்டறிந்தார்கள். டாக்டர் கூலி ஸ்டெதஸ்கோப் இன்றியே இதயத்தின் மேல் காதை வைத்துப் பார்த்து விட்டு இருதயத்தில் ஒரு கோளாறும் இல்லை என்று சொல்லிய பின்பு இருதயத்தின் கீழ்ப் பாகத்தில் காதை வைத்துப் பார்த்து விட்டு இருதயத்துக்கு வெளியேதான் ஏதோ கோளாறு இருக்கிறது என்று உடனே கூறிவிட்டார். அவர் அப்படி உடனே கூறியது எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. டாக்டர் கூலி இது வரையில் சுமார் ஐயாயிரம் இருதய ஆபரேஷன்கள் செய்திருக்கிறார். இருபத்திரண்டு இருதயமாற்று ஆபரேஷன்களும் செய்துள்ளார். ஆனால் இன்றுவரை இருதய மாற்று சிகிச்சை செய்து கொண்டவர்களில் எழுவர்தான் உயிருடன் இருக்கிறார்கள். மேலும் உலகிலேயே முதன் முதலாகச் செயற்கை இருதயத்தை நோயாளிக்குப் பொருத்தியவரும் இவரேதான். ஆனால் செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட நோயாளி பன்னிரண்டு மணி நேரம்தான் உயிர் வாழ்ந்தார். இவ்வளவு அரிய சாதனைகளைச் செய்துள்ளவரிடம் தான் வந்துள்ளேன் என்பதே எனக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. அவர் வந்து போனதும் டாக்டர் ராபர்ட் டி. லீச்மேன் என்பவரும் அவர் குழுவைச் சேர்ந்த மற்ற டாக்டர்களும் என்னைப் பரிசோதித்த பின் டாக்டர் கூலி சொன்னதையே அவர்களும் கூறினார்கள்.



▲ அமெரிக்க சர்ஜன்கள் சஸ்திர சிகிச்சை செய்கின்றனர்



◄ ஆஸ்பத்திரி உடையில் கட்டுரை ஆசிரியர்





ஸெயிண்ட்லூக்ஸ் ஆஸ்பத்திரிக் கெதிரில் கட்டுரை ஆசிரியர் >

நாங்கள் இங்கிருந்து கொண்டு போயிருந்த எக்ஸ்ரேக்கள், கார்டியோகிராம்கள், (இதயத் துடிப்பைக் காட்டும் வரைபடம்) மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயங்கள் அனைத்தையும் கொடுத்தோம். அவற்றைப் பார்த்த பின்பு நன்றாகச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லி அன்று இரவே ரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, எக்ஸ்ரேக்கள், கார்டியோகிராம்கள் முதலானவற்றை எடுத்து முடித்தார்கள்.

நான் ஆஸ்பத்திரியில் சேர்ந்த நாளிலிருந்தே பக்கத்து அறைகளிலுள்ள நோயாளிகளின் உறவினர்களும் கூட என்னைப் பார்க்க வந்து, எனக்கு மலர்க் கொத்துக்களும், அன்பு ஆசிகளும், வாழ்த்தும் கொடுத்துச் சென்ற வண்ணமிருந்தனர். அனைவருமே ஆறுதல் வார்த்தைகள் கூறிச் சென்றது எனக்கு மிகவும் மன நிம்மதியைக் கொடுத்தது. பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் நான் இந்தியாவில் இருப்பதைப் போலவே எவ்வித சஞ்சலமும் இல்லாது அவர்கள் ஆறுதல் வார்த்தைகளிலே மன நிம்மதி கொண்டிருந்தேன். அங்குள்ள டாக்டர்களும் நர்ஸ்களும் என்னிடம் அன்பாகப் பேசி எனக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து, எனக்கு வீட்டு ஞாபகமே வராத வண்ணம் கவனித்துக் கொண்டனர்.

மறுநாள் பதினெட்டாம் தேதியன்று டாக்டர் கூலியும், டாக்டர் மீச்மேனும் வந்து இந்தியாவிலிருந்து நான் கொண்டு வந்திருந்த ரிப்போர்டுகள் தவறாக இருப்பதாகவும் எக்ஸ்ரே படங்களின் தரமே சரியில்லை என்றும் கூறி விட்டார்கள். **Patent Ductus Arteriosus** என்று ரிப்போர்ட் கொடுத்தார்கள். இவர்கள் கொடுத்த ரிப்போர்ட்டுக்கும் இந்தியாவில் கொடுத்த ரிப்போர்ட்டுகளுக்கும் கொஞ்சம்கூட சம்பந்தமே இல்லை என்பது தெள்ளெனத் தெளிவாகத் தெரிந்தது. பேடண்ட் டக்டஸ் என்பது என்ன? உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையுமே பேடண்ட் டக்டஸோடுதான் பிறக்கிறது. இதயத்திலிருந்து அசுத்த ரத்தத்தை நுரையீரலுக்குக் கொண்டு செல்கிறது **பல்மனரி ஆர்ட்டரி** என்ற ரத்தக் குழாய். நுரையீரலில் பிராணவாயுவைப் பெற்று ரத்தம் சுத்தமடைகிறது.

இதயத்திலிருந்து சுத்தமான ரத்தத்தை உடலின் பல்வேறு பாகங்களுக்கும் எடுத்துச் செல்வதற்காக ஏற்பட்டது **அயோர்ட்டா** என்ற ரத்தக் குழாய்.

பல்மனரி ஆர்ட்டரி என்ற ரத்தக் குழாய்க்கும் அயோர்ட்டா என்ற ரத்தக் குழாய்க்கும் இடையே சிறிய துவாரம் பிறக்கும் குழந்தைகள் எல்லாவற்றுக்கும் இருக்கும். பிறந்து சில வாரங்களுக்குள் இந்தத் துவாரம் அடைபட்டு இரண்டு இரத்தக் குழாய்களுக்கும் இடையே தொடர்பு சிறிதும் இல்லாமல் போகிறது.

இப்படி நேராது போனால் — துவாரம் அடைபடாமல் போனால் — ஏற்படுகிற உடற் கோளாறுதான் பேடண்ட் டக்டஸ் எனப் படுகிறது.

20ம் தேதி சஸ்திர சிகிச்சை செய்வதாகக் கூறிச் சென்றுவிட்டார்கள். அன்று நான் வணங்காத தெய்வமில்லை, நினைக்காத தெய்வமில்லை, என் சர்ஜரி வெற்றி பெறுவதற்கு. 19ம் தேதி இரவு முழுதும் சரியாகத் தூங்கவில்லை. என் பெற்றோர்கள் நினைவும் உறவினர்கள் நினைவும் அன்பு நண்பர்களுடைய நினைவும் மாறி மாறி வந்து என்னைத் தூங்கவிடாமல் செய்தன. இரவு நர்ஸைக் கூப்பிட்டு இரண்டு தூக்க மாத்திரைகள் வாங்கிச் சாப்பிட்ட பிறகுதான் அமைதியாக அன்று இரவைக் கழித்தேன்.

பிப்ரவரி மாதம் 20ந் தேதியன்று என்னை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு செல்லத் தயாராக வைத்திருந்தார்கள். பகல் ஒரு மணிக்கு என்னைத் தியேட்டருக்குக் கொண்டு போகும் சமயத்தில் என் சகோதரர் இங்கிருந்து கொண்டு போயிருந்த திருநீற்றையும் குங்குமப் பொட்டையும் என் நெற்றியில் இட்டுவிட்டு இறைவன்மேல் பாரத்தைப் போட்டுவிட்டுத் தைரியமாக என்னைத் தியேட்டருக்குப் போகும்படி கூறி வாழ்த்தி அனுப்பி வைத்தார். என் நெற்றியில் உள்ள பொட்டைப் பார்த்துவிட்டு அமெரிக்க டாக்டர்கள்

திருநீற்றைப்பற்றியும் குங்குமப் பொட்டைப் பற்றியும் அன்புடன் விசாரித்து நான் கூறிய விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். அவர்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கும்போதே பல தூக்க ஊசிகள் போட்டிருந்ததால் என்னையறியாமலேயே தூங்கி விட்டேன். எனக்குப் பதிலாக அங்கிருந்த சீனியர் நர்ஸ் மிஸ் பிலிப் பர்னாண்டஸ் (பெங்களூரைச் சேர்ந்தவர், இப்பொழுது மேற்கொண்டு அங்கு பயிற்சி பெற்று வருகிறார்) குங்குமத்தின் மகிமையையும் இந்து மதத்தினைப் பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளார். நான் இந்தியாவிலிருந்து போயிருந்ததால் என் ஆறுதலுக்காக ஓர் இந்திய டாக்டரையும், இந்திய நர்ஸ் ஒருவரையும் தியேட்டரில் வைத்திருந்தார்கள். இருதயத்தின் கீழிருந்து முதுகின் பின்புறம் வரை சுமார் 10 அங்குல நீளத்துக்கு வெட்டி இருதயத்துக்கு வெளியேயுள்ள இரு பெரிய ரத்தக் குழாய்களுக்குமிடையில் இருந்த ஒரு பெரிய வழியை அடைத்து விட்டார்கள். இச்சிகிச்சையைச் செய்து முடிக்க அவர்கள் எடுத்துக் கொண்டது ஐந்து மணி நேரம். சிகிச்சை முடித்ததும் ஏறக்குறைய பன்னிரண்டு மணி நேரம் வரை 'ஸ்பெஷல் கேர்' (Special Care) என்ற அறையில் வைத்திருக்கிறார்கள். அப்பொழுது ஒவ்வொரு நோயாளியுடனும் சதா ஒரு டாக்டரும் ஒரு நர்ஸும் இருப்பார்கள். சிகிச்சைக்கப்புறம் நோயாளியின் இதயத் துடிப்பு டெலிவிஷன் போலுள்ள ஒரு திரையில் ஏறி இறங்கி விரையும் ஒரு புள்ளியாக அடுத்தடுத்துத் தோன்றுகிறது. இந்தக் கார்டியோ கிராப் கோளாறின்றி இருந்தால் இந்த இயந்திரத்தில் பச்சை நிற விளக்கு எரிகிறது. இதயத் துடிப்பு சிறிது கூடுதலாகவோ குறைவாகவோ இருந்தால் ஊதா நிற விளக்கும், மிகவும் அதிகமாகவோ குறைவாகவோ இருந்தால் சிவப்பு நிற விளக்கும் எரிகின்றன. சிவப்பு விளக்கு எரியும்போது அந்த இயந்திரம் தானியங்கி முறையில் ஒலி எழுப்புகிறது. ஒலியைக் கேட்டதும் பக்கத்திலுள்ள டாக்டர்கள் உடனே வந்து வேண்டிய சிகிச்சைகளைச் செய்கிறார்கள். இருதய ஆபரேஷனுக்குப் பிறகு எந்த நோயும் நோயாளிக்கு எளிதில் பரவக் கூடிய அபாயம் இருப்பதால் வாயின் வழியாகப் பெரிய குழாய் ஒன்றினைப் போட்டு வயிற்றிலுள்ள நீரையும் சளியையும் வெளியே எடுத்து விடுகிறார்கள். அப்படி வெளியே எடுக்காவிட்டால் நிமோனியா போன்ற கொடிய வியாதிகள் பரவச் சந்தர்ப்பம் கிடைத்து விடுமாம். ஸ்பெஷல் கேரில் நோயாளி இருக்கையில் உறவினர்கள் காலையில் ஐந்து நிமிஷமும் மாலையில் ஐந்து நிமிஷமும்தான் அவர்களைப் பார்க்கலாம். அப்பொழுதும் நோயாளியின் அருகில் இருந்து பார்க்க அனுமதிப்பதில்லை. இவ்விதிகளில் மிகவும் கடுமையாக இருப்பதால் சிகிச்சைக்கப்புறம் நோயாளிகள் புதிய சிக்கல்கள் ஏதும் ஏற்படாமல் பிழைத்து விடுகிறார்கள். ஸ்பெஷல் கேருக்குப் பிறகு நோயாளியின் நிலைமையைப் பொறுத்து இன்டன்ஸிவ் கேருக்கு (Intensive Care) மாற்றுகிறார்கள். இன்டன்ஸிவ் கேரில் இரண்டு நாட்களுக்கு வைத்துவிட்டு நோயாளி நல்ல நிலைமையில் இருந்தால் அவருடைய அறைக்கே மாற்றுகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் அங்குள்ள கிறித்துவப் பாதிரிமார்கள் என்னைப் பார்க்க வந்து எனக்காக இறைவனிடம் வேண்டுவதாகவும் கூடிய விரைவில் தாயகம் செல்ல இறைவன் அருள் புரிவான் என்றும் என்னிடம் சொல்லி ஆறுதல் வார்த்தைகள் கூறிச் சென்றார்கள். ஹாஸ்டனில் உள்ள ஹார்ட் அஸோஸியேஷனிலிருந்து சிலர் வந்து சிகிச்சைக்கப்புறம் எப்படி எப்படி இருப்பது என்பது பற்றி ஆலோசனைகள் எனக்குக் கூறி வாழ்த்திச் சென்றார்கள்.

சிகிச்சை செய்த எட்டாவது நாள் நன்கு சதை ஒட்டிக் கொண்டதால் தையலைப் பிரித்துவிட்டார்கள். தையலைப் பிரித்த இரண்டாவது நாளே என்னை டிஸ்சார்ஜ் செய்வதாகக் கூறிவிட்டார்கள். நாங்கள் இங்கிருந்து கொண்டு போயிருந்த சில பரிசுப் பொருட்களை என்னை அன்புடன் கவனித்துக்கொண்ட டாக்டர்களுக்கும் நர்ஸுகளுக்கும் கொடுத்தேன். அவர்கள் இந்தியக் கலைத் திறனைப் புகழ்ந்ததோடு மட்டுமில்லாமல் எனக்கும் பல பரிசுப் பொருட்கள் கொடுத்து என்னை அன்புக் கடலில் திணறடித்தார்கள். பெரும்பாலும் உலகில் உள்ள அனைவருமே ஆஸ்பத்திரிக்குப் போக நேர்ந்தால் எப்பொழுதுதான் நம்மை வெளியில் அனுப்புவார்களோ என்றுதான் ஏங்கிக் கொண்டிருப்பார்கள். ஆனால் நானோ இன்னும் ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் இருக்க மாட்டோமா என்று ஏங்கினேன். அவ்வளவு அருமையாக ஒவ்வொரு நோயாளியிடமும் இன்முகம் கொடுத்து அன்புடன் பணிவிடைகள் செய்கிறார்கள். இந்திய மக்களைப் பற்றியும் குறிப்பாக இந்திய மாணவ மாணவியரைப் பற்றியும் அன்புடன் விசாரிக்கிறார்கள். நாம் கூறும் விளக்கங்களே அவர்களுக்கு ஓரளவுக்கு இந்தியாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பு அளிப்பதாக இருக்கின்றது. பொதுவாக எல்லோருமே இந்தியா என்றால் தாஜ்மஹாலைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார்கள். தென்னிந்தியாவைப் பற்றி அவ்வளவாக ஒருவருக்கும் தெரியவில்லை. இந்திய உல்லாசப் பயண சங்கமும் வட இந்தியாவைப் பற்றித்தான் அதிகமாக விளம்பரங்கள் கொடுத்துள்ளது.

மார்ச் மாதம் 3ம் தேதி புது மனிதனாக ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி நகரிலுள்ள ஹோட்டலில் வந்து தங்கியிருந்தேன். ஒவ்வொரு வாரமும் இரு தடவை பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்குப் போய் வந்தேன். இரண்டாவது வாரம் போயிருந்தபோது இந்தியாவுக்குப் புறப்படலாம் என்று கூறி விட்டார்கள். ஆஸ்பத்திரியில் உள்ள அனைவரிடமுமே பிரியாவிடை பெற்றுக்கொண்டு நகருக்கு வந்தேன். நண்பர்கள் சிலருடன் நகரைச் சுற்றிப் பார்த்து விட்டு இன்னும் சில முக்கிய இடங்களையும் — குறிப்பாக அப்போலோ ஸ்பேஸ் சென்டரை (Apollo Nasa Space Centre) — கண்ட பின்பு மார்ச் மாதம் 25ந் தேதி நண்பர்கள் வழி அனுப்பி வைக்க நானும் என் சகோதரரும் இந்தியாவுக்குப் பயணமானோம்.

காணக் கிடைக்காத தங்கம்



ஜெகசிற்பியன்

அத்தியாயம் ஐந்து

ரஞ்சிதம் அப்படிக் குணம் மாறிப் போனதற்கு அடிப்படைக் காரணங்கள் இரண்டு :

சொர்ணத்தம்மாள் ரொக்கப் பணமாகத் தபால் ஆபீசில் போட்டு வைத்துக் கொண்டு செலவுக்குத் தேவைப் படும்போதெல்லாம் அதிலிருந்து சிறுகச் சிறுக எடுத்துக் கஷ்டமின்றிக் காலம் தள்ளி வருவது ஒன்று; தன் மூத்த பெண்ணைத் தவிர மற்றப் பிள்ளைகளெல்லாம் — அவற்றில் மூன்று ஆண் பிள்ளைகள் — படிப்பே ஏறாமல் மக்கினிகளாய்க் கிடக்க, சொர்ணத்தம்மாளின் மகன் அருணகிரி மட்டும் படிப்பில் வெகு சூடிகையாக இருந்து வருவது இன்னொன்று.

பொதுவாக எந்தப் பெண்ணுக்கும் இம்மாதிரி விஷயங்களில் காய்ச்சல், கடுப்பு ஏற்படுவது சகஜம்தான் என்றாலும், பிறந்து வளர்ந்த வீட்டிலும், புகுந்து வாழும் வீட்டிலும் எப்பொழுமே, எதிலுமே பற்றுக்குறையைப் பார்த்துப் பார்த்து அலுத்து விட்டிருந்த ரஞ்சிதத்துக்கு இந்தப் பொறுமைக் காய்ச்சல் சற்று அளவுக்கு அதிகமாக இருந்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை.

பெண்கள் யோசிக்காமல் சொல்வது எதையும் கேட்டு அதன்படியே செய்யலாம்; அது பெரும்பாலும் நல்லதாகவே அமையும். அல்லது கெடுதல் ஏதும் நேராது. ஆனால் அவர்கள் ஆற அமர யோசித்துச் சொல்வதைக் கேட்டு நடந்தாலோ முற்றிலும் அது தீங்காகவே முடியும்; தீவினைகளுக்கு வழிகோலும்.

இந்தச் சாதாரண உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் இருந்த கண்ணுச்சாமி தம் மனைவி ரஞ்சிதம் தீரச் சிந்தித்துச் சொன்ன ஒரு யோசனையை அப்படியே கேட்டு அதன்படியே செய்தார். அது முதல் அவருக்கும், அவரது தமக்கை சொர்ணத்தம்மாளுக்கும் இடையே நிலவி வந்த பந்தபாச நல்



ஹறவில் சிறுகச் சிறுக வெடிப்பு ஏற்பட ஆரம்பித்து விட்டது.

ஆமாம்; ஒரு சமயம் அவருக்கு முட்டை வியாபாரத்தில் முடை ஏற்பட்டு அவசரமாகக் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. இம்மாதிரி சமயங்களில் அவர் வட்டிக்குப் பணம் வாங்கிச் சமாளித்துக் கொள்வது வழக்கமே. இதற்கென்று இரண்டு மூன்று இடங்களைப் பிடித்து வைத்துக் கொண்டும் இருந்தார். ஆனல் அந்தச் சமயம் அவரது மனைவி ரஞ்சிதம், 'உங்கள் அக்காவின் கையிருப்புப் பணம் தபாலாபீசில் சும்மா தானே தூங்கிக் கொண்டிருக்கிறது? நம் அவசரத் தேவைக்கு அதிலிருந்து எடுத்துக் கொடுத்தால் என்னவாம்? மூன்ரும் மனிதரிடம் கடனுக வாங்கி வீணே வட்டி கொடுத்து நஷ்டப்பட வேண்டியது இல்லை அல்லவா? நம்முடைய வீட்டில் நமது ஆதரவில் வந்து உட்கார்ந்து கொண்டிருப்பவள் இந்தச் சிறு உதவி செய்யக் கூடாதா? செய்யட்டுமே!' என்றெல்லாம் வித்தார வக்

கணையுடன் தலையணை மந்திர உச்சாடனம் செய்ததன் பேரில் அவரும் தம் தமக்கை சொர்ணத்தம்மாளிடம் ஐந்நூறு ரூபாய் கைமாற்றுக் கடனாகக் கேட்டார். ஒரு மாதத் தவணைக்குள் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும் சொன்னார்.

மறுக்க முடியுமா சொர்ணத்தம்மாளால்? தம்பி கேட்ட தொகையை உடனே எடுத்துக் கொடுத்தாள்.

மாதங்கள் இரண்டு கடந்தன. கொடுத்த பணம் திரும்பி வரவில்லை.



கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் கண்ணுச்சாமி சுத்தமானவர்தான். தம் அக்காவிடம் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட அவர் தயாராகவே இருந்தார். ஆனால் ரஞ்சிதம், 'இப்போதென்ன அவசரம்? மெல்லக் கொடுக்கலாமே! அயலா, அந்நியமா? சொந்த அக்காதானே? பணத்தை வாங்கி வைத்துக் கொண்டு அவள் என்ன பண்ணப் போகிறாள்? தபாலாபீசில் போட்டுத் தூங்க வைப்பாள்! உங்களிடம் இருந்தாலும் வியாபாரத்தில் போட்டுப் புரட்டி நாலு காசு வர வழி செய்வீர்கள்; தேவைப்படும்போது அவளாகக் கேட்டு வாங்கிக் கொள்ளட்டுமே!' என்றெல்லாம் பல 'நியாயங்கள்' பேசி அவரைக் கொடுக்க விடாமல் தடுத்து வந்தாள். அப்புறம் ஒரு மாதம் கழித்து அவரே தம்

மனச்சாட்சியின் உறுத்தலைப் பொறுக்க மாட்டாமல், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்துவிட முற்பட்டபோது ரஞ்சிதம் அதைப் பேச்சால் தடுக்காமல் செயலால் தடுக்க ஆரம்பித்தாள். அதாவது, அவருக்குத் திடீர்ச் செலவுகள் பலவற்றை உண்டுபண்ணி வைத்தாள். பல்லைப் பிடுங்கிப் புதுப் பல் கட்டிக் கொண்டதற்கு டாக்டர் பில், நாலாவது பையனுக்குத் திருப்பதியில் முடி இறக்கப் போனது, வீட்டுக்கு வெள்ளை அடித்தல் — இத்தியாதி செலவுகள் !....

வாங்கிய கடனைத் திருப்பித் தருவதற்கென வைத்திருந்த தொகைக்கு மேல் இந்தச் செலவுகளால் இரண்டு மடங்கு அதிகப் பணம் கரைந்துவிட்டதால், மீண்டும் முட்டை வியாபாரத்தில் பண முடை ஏற்பட்டு விழி பிதுங்கும் நிலைக்கு ஆளான கண்ணுச்சாமி, வேறு வழியின்றி மறுபடியும் சொர்ணத்தம்மாளிடமே இன்னும் ஓர் ஐந்நூறு ரூபாய் கடன் கேட்க வேண்டியதாயிற்று. அவளும் மெல்லவோ விழுங்கவோ மாட்டாதவளாய்த் தன் இருப்பிலிருந்து பணம் எடுத்துக் கொடுத்தாள்.

அதுவும் திரும்பி வருவதாயில்லை. மாதங்கள் ஆறு கடந்தன. சொர்ணத்தம்மாளின் மனம் புழுங்கியது. ஜாடைமாடையாக இரண்டொரு முறை கேட்டுப் பார்த்தாள். கண்ணுச்சாமி மௌனம் சாதித்தார். உண்மையில் அவருடைய நிலை ரொம்ப இக்கட்டாகவே இருந்தது. மேலும் ஓர் இருநூற்றைம்பது ரூபாய் கடனைக் கொடுத்தால் 'நன்றி'யுடன் வாங்கிக் கொள்வார் போலவும் தோன்றியது. இதை அவரே ஒரு நாள் வாய்விட்டும் சொல்லிவிட்டார்.

விழித்துக் கொண்டாள் சொர்ணத்தம்மாள். அவளின் கையிருப்பு இப்போது இரண்டாயிரம் ரூபாய் மட்டுமே இருந்தது. தன் பிள்ளையாண்டான் படித்து முடித்துச் சம்பாதிக்கத் தலைப்படும் வரையில் இந்த 'நொள்ளை'ப் பணத்தை வைத்துக் கொண்டுதான் அவள் காலம் தள்ளியாக வேண்டும். இந்நிலையில் அதிலும் ஒரு பகுதியை எடுத்துத் தம்பிக்குத் 'தானம்' செய்துவிட முடியுமா ?

'முடியாது' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள் அவள். இப்படிச் சொன்னபின் அந்த வீட்டில் இனி நிம்மதியாக இருக்க முடியாது என்பதும் அவளுக்குத் தெரிந்து போயிற்று. பல நாட்கள் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தாள். ஆயிரம் ரூபாய்க்கு இரண்டு எருமை மாடுகள் வாங்கிப் பால் வியாபாரம் பண்ணுவது என்ற முடிவே அது. பக்கத்துத் தெருவில் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான ஒரு காலி நிலம் இருந்தது. அந்தக் கோயில் தர்மகர்த்தாவிடம் கெஞ்சிக் கூத்தாடி அந்நிலத்தை மாதம் ஐந்து ரூபாய் குத்தகைப் பணத்துக்கு அநுமதி வாங்கி, ஓர் ஓலைக் குடிசை போட்டுக் கொண்டு தன் பிள்ளையுடன் அதில் குடியேறினாள். அத்துடன் தான் திட்டமிட்டபடியே இரண்டு எருமை மாடுகளும் வாங்கிக் கொண்டாள். இவ்வளவையும் தம்பியிடமோ, தம்பியின் மனைவியிடமோ சண்டை சச்சரவு விரோதக் குரோதம் ஏதுமின்றிச் சுமுகமாகவே செய்து கொண்டது ஆச்சரியம்தான். அவள் இயற்கையிலேயே பரம சாது. ஆனால் முன் யோசனையும் தன்மானமும் நிரம்பப் பெற்றவள்.

தனிக் குடித்தனம் வந்த பின்னும் தம்பியின் வீட்டுக்கு அடிக்கடி போய் வந்தாள் சொர்ணத்தம்மாள். தன் மகனையும் நாள் தவறாமல் அனுப்புவாள். அவனும் சிறு பையன்தானே? மாமாப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட அவனாகவே ஓடி விடுவான்.

ரஞ்சிதத்துக்கு இது ஒரு பெரிய வெற்றிதான். ஆனாலும் சொர்ணத்தம்மாள் இன்னமும் சிரமமின்றி நாட்களைக் கடத்துவதைக் காண அவளுக்கு உள்ளூற வயிற்றெரிச்சலாகவே இருந்தது. இந்தக் காழ்ப்பில் அவள் வேறொரு காரியமும் செய்யத் தொடங்கினாள்.

அதாவது, பையன் அருணகிரி தன் வீட்டுக்கு வந்தால், நல்லதனமாகவே நிறைய வேலைகள் வாங்குவாள். வீட்டு வேலை இல்லையென்றால் தன் கணவருக்கு உதவியாக இருக்கும்படி முட்டைக் கடைக்கு அவனை அனுப்பி வைப்பாள். பையனும் விளையாட்டுப் பராக்கில் அவள் சொற்படியெல்லாம் செய்து வந்தான். இப்படி அவனுடைய பெரும் பொழுது மாமா வீட்டிலும், முட்டைக் கடையிலும் கழிந்தது.

இதன் உள் நோக்கத்தைச் சொர்ணத்தம்மாள் இரண்டு வருடங்களுக்குப் பிறகேதான் புரிந்து கொண்டாள்.

ஆமாம்; பள்ளியில் நன்றாகப் படித்துக் கொண்டிருந்த அருணகிரி இப்போது படிப்பில் பின்னடையத் தொடங்கினான். அவனை ஒழுங்காகப் படிக்க விட்டால்தானே? மாமாவின் வீட்டு வேலைகளையும் கடை வேலைகளையும் செய்வதற்கே அவனுக்கு நேரம் சரியாக இருந்தது. தேனொழுகப் பேசிப் பேசியே ரஞ்சிதம் இவ்வகையில் அவனுடைய படிப்புக்குக் குந்தகம் விளைவித்து வந்தாள்.

இதன் காரணமாய்ப் பத்தாம் வகுப்பில் அருணகிரி 'கோட்'டடித்து விட்டான். அவனுக்குப் பின்னால் ஒன்பதாம் வகுப்பிலிருந்த ரஞ்சிதத்தின் மகள் பிரேமா அவனோடு சரிசமமாகப் பத்தாம் வகுப்புக்கு வந்து விட்டாள். இதற்குப் பிறகும் அவனை விடவில்லை. 'சதித் திட்டம்' தொடர்ந்தது. எனினும், எப்படியோ அந்த வருஷம் பாஸ் பண்ணிப் பதினோராம் வகுப்புக்குப் போனான். பொதுப் பரீட்சை வந்தது. அருணகிரியும் பிரேமாவும் ஒன்றாக எஸ்.எஸ்.எல்.சி.க்குப் பரீட்சைஎழுதினார்கள்.

பரீட்சை முடிவு வெளியாயிற்று. பிரேமா தேறி விட்டாள். ஆனால் அருணகிரி அவுட் !

தன் பிள்ளை பாஸானதும் கல்லூரியில் சேர்த்து எப்படியும் பி. ஏ. வரையிலுமாவது படிக்க வைத்து விட்டால் அப்புறம் அவன் ஒரு நல்ல உத்தியோகத்தைத் தேடிக் கொண்டு தன்னை உட்கார வைத்துச் சாப்பாடு போடுவான் என்றெல்லாம் மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்த சொர்ணத்தம்மாளுக்கு இது பெரிய இடிபோல் ஆகியது. அவள் நிலைகுலைந்து போனாள். ஏற்கனவே அவளிடமிருந்த இரண்டு எருமை மாடுகளில் ஒன்று கோமாரி நோய் கண்டு செத்துப் போய் விட்டது. மிகவும் கஷ்ட தசையில் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்த அவளுக்கு இந்த ஆசாபங்கமும், நம்பிக்கைச் சிதைவும் ஏற்படவே, தன் மகனைக் கொஞ்சம் காட்டமாகக் கடிந்து திட்டி விட்டாள்.

அவ்வளவுதான்; அன்று மாலை வாடிக்கைக்காரர்களுக்குப் பால் கறந்து விட்டு அவள் வந்த போது வீட்டில் அருணகிரி இல்லை. மாமன் வீட்டுக்குப் போயிருப்பான் என்று எண்ணி அசட்டையாய் இருந்தவளுக்கு, நேரமாக ஆகப் பிள்ளையாண்டான் வராமற் போகவே வயிற்றில் புளி கரைய ஆரம்பித்தது. எங்கெங்கோ ஓடித் தேடினாள். தம்பி வீட்டாரிடமும் விசாரித்தாள். அருணகிரி போன இடம் தெரிய வில்லை. அவன் கோபித்துக் கொண்டு எங்கோ ஓடி விட்டான் என்பது நிச்சயமாகியது.

சொர்ணத்தம்மாள் கதறிப் புலம்பிக் கண்ணீர் வடித்தாள். மூன்று நாட்கள் வரை அன்ன ஆகாரமின்றித் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்த அவளுக்கு நாலாம் நாள் ஓர் ஆறுதல் செய்தி கிடைத்தது.

அருணகிரி எங்கும் போய்விடவில்லை; பெங்களூரிலிருந்த தன் அக்காவிடம் போய்ச் சேர்ந்திருந்தான். இந்தத்

இது யாருடைய கையெழுத்து?



(அடுத்த பக்கம் பார்க்க)

தகவலை அவனுடைய அத்தான் ரத்தினவேலுவே நேரில் வந்து தெரிவித்தார்.

எவ்வளவு சொல்லியும் பையன் தன்னோடு இங்கு வர மறுத்து விட்டான் என்றும், அதனால் அவன் அங்கேயே கொஞ்ச நாட்கள் இருக்கட்டும் என்றும், பிறகு அவனே புறப்பட்டு வந்துவிடுவான் என்றும் கூறிய அவர், அவனுடைய துணிமணிகளும் புஸ்தகங்களும் அடங்கிய பெட்டியை வாங்கிக் கொண்டு போனார்.

கணவனை இழந்து தனிமரமாய் நின்றிருந்த சொர்ணத்தம்மாள் தனக்கு நீரும் சத்தும் ஊட்டித் தாங்கிப் பிடித்துத் தழைக்கப் பண்ணும் விழுதாக எண்ணியிருந்த தன் அன்பு மகனும் தன்னை விட்டுப் போய் விட்டதை எண்ணி யெண்ணி உருகிக் கரைந்தாள். நன்றாகப் படித்துக் கொண்டிருந்த தன் மகன் பொதுப் பரீட்சையில் தவறிப் போனதற்கான காரணத்தையும் மெல்ல மெல்ல ஊகித்து அறிந்து கொண்டாள் அவள். தம்பி வீட்டாருடன் பேச்சு வார்த்தையே வைத்துக் கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டாள்.

ஒரு வருடம் எப்படியோ ஓடி மறைந்து விட்டது. இப்போது அவன் எப்படி வாழ்கிறான், என்ன நிலையில் இருக்கிறாள் என்றே அருணகிரிக்குத் தெரியாது.

* * *

நடக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் நடந்து கொண்டிருந்த அருணகிரி ஏதோ 'டம டமா'ரென்ற ஒலி கேட்டுத் திடுக்குற்று நின்று சுற்று முற்றும் நோக்கினான். தான் வந்து நிற்பது தன் வீட்டு வாசற்படியே என்பதும், அவ்வீட்டினுள்ளிருந்தே சட்டிப் பானைகள் உடைந்து நொறுங்கும் சத்தம் வருகிறதென்பதும் அவனுக்கு இப்போதுதான் புலப்பட்டன. திகைப்பும் பரபரப்பும் அடைந்தவனாய்ச் சாத்தியிருந்த தெரு வாசற் கதவின் இடுக்கு வழியே எட்டிப் பார்த்தான்.

பல நாட்கள், பல முறை பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டுப் போன காட்சிதான் அது.



அது இவருடைய ஆங்கிலக் கையெழுத்து !

ஆதாரம் :
Madras Rifle Club Souvenir 1970

நகல் :
'முத்து.'

ஆமாம்; அவனுடைய அத்தான் ரத்தினவேலு குடிவெறியில் அசிங்கம் அசிங்கமாகப் பேசித் திட்டியவாறு கைக்குக் கிடைத்த சாமான்களையெல்லாம் எடுத்துச் சுவரில் வீசி எறிந்து கொண்டிருந்தார். அவர் மனைவி முத்தம்மா ஒரு பழைய அலமாரியின் இடுக்கில் பதுங்கிச் சாய்ந்தவாறு கண்ணீர் சோர ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். அவளது நான்கு பிள்ளைகள் — எல்லாம் இரண்டு வயது முதல் ஆறு வயதுக்கு உட்பட்டவை — தூக்கக் கலக்கத்துடன் பாயிலிருந்து எழுந்து உட்கார்ந்து ஒரே 'கோரஸ்'ஸாக அழுது கொண்டிருந்தன.

சட்டைப் பித்தானை இடது கை விரல்களால் திருகியவாறு படிக்கட்டை விட்டுக் கீழே இறங்கி நின்று கொண்டான் அருணகிரி. ஏற்கனவே குழம்பிச் சோர்வடைந்திருந்த அவன் உள்ளம் இந்தக் காட்சியைக் கண்டதால் மேலும் கலக்கமுற்றுத் துவண்டது. வாசற் கதவைத் தட்டித் திறக்கப் பண்ணி உள்ளே செல்லத் துணிவு இன்றிப் பேசாமல் படிக்கட்டின் ஓரமாய் உட்கார்ந்து முட்டிக் கால்களுக்கிடையே தன் தலையைப் புதைத்துக் கொண்டான்.

தன் அக்கா முத்தம்மாவின் நிலையை நினைக்க நினைக்க அவனுக்கு வேதனை நெஞ்சைக் கப்பியது.

அவள் கல்யாணமாகிக் கடந்த ஆறு வருடங்களில் நாலு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டதைத் தவிர வேறு எந்த சுகத்தையும் கண்டதில்லை.

அவளுடைய கணவர் ரத்தினவேலுவை அப்படி ஒன்றும் அடாவடிப் பேர்வழி என்றோ முரட்டு ஆசாமி என்றோ சொல்ல முடியாது. ஆனால் படுமோசமான குடிப் பழக்கம் உள்ளவர். சிகரெட் கம்பெனி ஒன்றில் டெலிவரி — வேன் டிரைவராக வேலை பார்க்கும் அவருக்கு மாதம் இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம். அதில் மனைவியின் கைக்கு வருவதோ நாற்பது ஐம்பதுரூபாய்தான். மீதிப் பணம் அவ்வளவையும் குடித்தே தீர்த்துவிடுவார். யார் யாரோ எப்படி யெப்படி எல்லாமோ புத்தி சொல்லிப் பார்த்தாகி விட்டது. எதற்கும் அவர் சீர்ப்பட்டு வரவில்லை. தினமும் வீட்டுக்கு வரும் போது 'தண்ணி'யில் நனைந்து கொண்டுதான் வருவார். வந்து சும்மா படுத்துக் கிடப்பதுமில்லை. வாய்க்கு வயணமான சோறு கறி கேட்டுச் சண்டை பிடிப்பார். பொழுது விடிந்தால் மனிதர் பரம சாது; பச்சைக் குழந்தைதான் !

இப்படிப்பட்டவரின் வீடு எப்படி இருக்கும்? வறுமை அரக்கி கோலாகலமாக அங்கே நடை பழகிக் கொண்டிருந்தாள்.


நாலு பிள்ளைகளை வைத்துக் கொண்டு உணவுக்கும் உடைக்கும் படாத பாடு பட்ட முத்தம்மா, தன் கணவரின் சம்பாத்தியத்தை நம்பி மட்டும் இனி காலம் தள்ள முடியாது என்ற முடிவுக்கு வந்தவளாய் ஓர் எஞ்சினீயர் வீட்டில் வேலைக்காரியாக அமர்ந்தாள். சமையல் காரியங்களுக்கு உதவுபடியாக இருப்பது; வீடு வாசலைப் பெருக்கிச் சுத்தப்படுத்துவது; பற்றுப் பாத்திரங்களைக் கழுவிப் போடுவது; பள்ளியில் படிக்கும் மூன்று பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொண்டு போய்க் கொடுப்பது; மற்றும் சில சில்லறை வேலைகள்—இவை எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து மாதம் முப்பது ரூபாய் சம்பளம்!

முத்தம்மாவுக்கு இந்த வருமானம் பெரிதும் சகாயமாய் இருந்தது. இத்துடன் அவளுடைய தம்பி அருணகிரி இப்போது சைக்கிள் ரிப்பேர்க் கடையில் வேலை பார்த்து வாரம் ஆறு ரூபாய் கூலியாகக் கொண்டு வந்து கொடுக்கிறான். இது அவளுக்கு ஒரு பெரிய மலை!

இதை யெல்லாம் வைத்துக் கொண்டு எப்படியோ நாட்களை ஒப்பேற்றித் தள்ளிவிடலாம் என்று அவள் எவ்வளவோ முயற்சி பண்ணுகிறாள். ஆனாலும் அவளைப் பீடித்த வறுமை இலேசில் ஒழிவதாயில்லை. அதற்குக் காரணம் அவளுடைய கணவரே!

மனைவியும் மைத்துனனும் சம்பாதிக்கத் தலைப்பட்டதுமே அவர் தம் சம்பளத்தில் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சாராயக்கடையில் கரைக்கத் தொடங்கி விட்டார். அதாவது, முன்னெல்லாம் நாற்பது, ஐம்பது ரூபாயாவது மிச்சப்பட்டு வீட்டுக்கு வந்துகொண்டிருந்தது. இப்போது இருபது முப்பதுக்குத் தேய்ந்து போய் விட்டது. அதோடு கூட அவரது இரவுநேரச் சண்டை ஐபர்தஸ்துகளும் அதிகப்பட்டுப் போயின. இதனால் முத்தம்மாவின் கஷ்ட நிலை என்றும் போலவே இன்று வரை இருந்து வருகிறது! (தொடரும்)

சோப்பென சொல்லவோ,
சுகந்தம் அல்லவோ!



புதிய கோத்ரேஜ் லக்சுரி சந்தன சோப்!

என்ன விந்தை! ஒரு சோப்பில் எத்தனை
சோபித சுகந்தம்! எப்படித்தான்
சந்தனத்தின் உண்மையான வாசனையை
கோத்ரேஜ் இந்த சந்தன சோப்பின்
உள்ளடைத்தனரோ! மணம்,
மணம், மணமோ மணம், கரைந்து
முடியும் வரை மணம். கோத்ரேஜின் புதிய
லக்சுரி சந்தன சோப் புத்துணர்-
ஊட்டும் சந்தன சுகந்தமேதான்!
அதுவும் மிகக் குறைந்த செலவில்!

Godrej
லக்சுரி
சந்தன
சோப்

ULKA-GSS-1 TAM



குடை ராட்டினம்

எஸ். ரங்கநாயகி

அத்தியாயம் 17

அன்று வாசு தானுகவே தேவகியிடம் வலிய வந்து, "அம்மா! விவாகம் செய்து கொண்டால்தான் ஜன்மம் சாபல்யம் அடையும் என்பீர்களே, நான் விவாகம் செய்து கொள்வதென்று தீர்மானித்து விட்டேன்!" என்ருன்.

தேவகி கனவோ நனவோ என்று விழித்தாள்.

"உண்மையாகத்தான் சொல்கிருயா, வாசு?" தேவகி பல முறைகள் பன்னிப் பன்னிக் கேட்டு விட்டாள்.

"உன்னிடம் பொய் சொல்லி எனக்கு என்ன லாபம்? பெண்களாகிய நீங்கள் தான் எதையோ சொல்லி விட்டு எதையோ செய்வீர்கள்!" என்ருன்வாசு. அவன் பேச்சில் மனக் கசப்பு தெளிவாகத் தெரிந்தது. அப்படி யிருந்தும் அவன் விவாகம் செய்து கொள்ளச் சம்மதித்ததுதான் அவளுக்கு விந்தையாக இருந்தது. 'வேறு யாராவது கட்டாயப்படுத்தி யிருப்பார்களோ? எப்படியோ போகட்டும். அவனுகவே விவாகம் செய்து கொள்கிறேன் என்கிருன்.'

அப்போதே அவள் காந்தியைப் பற்றி அவனிடம் கூறவில்லை. அவன் அளித்த சம்மதம் நீடிக்கிறதா என்று இரண்டு நாட்களாவது பார்க்கவேண்டும் என்று தீர்மானித்தாள்.

மறு நாள் காலை எழுந்ததுமே வாசுவிடம் மாற்றத்தைக் கண்டாள் தேவகி. படுக்கையோடு உருண்டு கொண்டிராமல் சீக்கிரமே எழுந்து விட்டான். அடுத்த வீட்டுக் குழந்தையை அருகில் கூப்பிட்டு முன்போல் விளையாடினுன். சினிமாப் பாட்டொன்றை விசில் அடித்த படி குளித்தான். சலவைத் துணியை எடுத்து உடுத்திக் கொண்டான். தட்டைத் தானே போட்டுக் கொண்டு ருசித்துச் சாப்பிட்டான். ஆபீசுக்கு உயர்ந்த சூட்டை அணிந்து கொண்டு புறப்பட்டான்.

அனைத்தையும் வியப்போடு பார்த்த தேவகி ஒன்றைப் புரிந்து கொண்டாள். 'விவாகம் செய்து கொள்ள அவன் சம்மதம் அளித்தது உறுதியாகத்தான் இருக்கும்.'

எனவே, அவன் கிளம்பும்போது, "வாசு, உனக்குப் பெண் பார்க்கலா மல்லவா?" என்று கேட்டாள் தேவகி.

"இது என்னம்மா கேள்வி? ஓர் ஆண் மகனுக்கு விவாகம் என்ருல் பெண் என்று ஒருத்தி வேண்டியது அவசியம் தானே?" என்ருன் வாசு.

தேவகிக்கு மீண்டும் சந்தேகம். ஒருவேளை புத்தி சுவாதீனமில்லாமல் பேசுகிருனே? இல்லா விட்டால் இப்படியொரு மகிழ்ச்சி திடீரென்று எப்படி வந்தது?

வாசற்படியில் இறங்கிய வாசு சற்று நின்ருன். "அம்மா! பெண் பார்ப்பதென்ருல் கொஞ்சம் உயர்ந்த இடமாகவே பார். அதாவது பணக்கார இடம் நல்லது" என்ருன்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். உன் சம்மதத்துக்கு முன்பே ஒரு பணக்காரப் பெண் தயாராகத்தான் இருக்கிருள்......"

'யார் அது?' என்ற கேள்விக் குறியோடு தேவகியை நோக்கினுன்.

"காந்தி இருக்கிருள் அல்லவா?" தேவகி சற்று நிறுத்தினுள்.

வாசு அவளையே நோக்கினுன்.

"ரமாவின் தங்கை காந்தி இருக்கிருளே, அவளும் உன்னையே விரும்புவதாகத் தெரிகிறது...."

'' 'அவளும்' என்று எதற்குச் சொல்கிறாய்? வேறு யார் உண்மையாகவே என்னை விரும்பினார்களாம்?''

தேவகி பதில் கூறவில்லை. ரமாவின் மீது உள்ள கோபமும் வெறுப்பும் இன்னும் தணியவில்லை என்பதைப் புரிந்து கொண்டாள். ரமா கூறியது போல் வெறுப்பு எல்லை மீறிப் போக அதன் காரணமாகத்தான் மற்றொரு பெண்ணை அவன் மணக்கச் சம்மதிக்கிறானோ? ரமா தான் காந்தியின் விருப்பத்தைக் கூறினாள் என்று தேவகி வாசுவிடம் சொல்லவில்லை.

'' நீ சம்மதித்தால் காந்தியை ஏற்பாடு செய்கிறேன்.''

தலையை மட்டும் ஆட்டிவிட்டு வாசு படி இறங்கிச் சென்றுவிட்டான்.

தேவகி வெகு நேரம் நாற்காலியில் அமர்ந்து கிடந்தாள். மகனின் மனப் போக்கு திடீரென்று மாறிவிட்டதன் காரணமே அவளுக்குப் புரியவில்லை. புரியாத புதிராகவே இருந்தது. 'மணம் செய்து கொள்ளச் சம்மதம் தெரிவித்தது ஒரு புறம் இருக்கட்டும். ரமாவின் தங்கை காந்தியையே மணக்கச் சம்மதிக்கிறானே!'

வாசு ஆபிசில் நுழைந்ததுமே முதலில் சுதர்சனம்தான் அவன் கண்களில் பட்டார்.

'' ஸார்!'' மகிழ்ச்சியோடு வாசு அவரை விளித்தான்.

''என்னப்பா, வாசு! நீ கூட மகிழ்ச்சியாக வந்து நிற்கிறே?''

'' நீங்கள் சொன்ன படியே செய்வது என்று தீர்மானித்து விட்டேன்.''

''அதுதான் புத்திசாலிப் பையனுக்கு அழகு! 'காதல் இல்லையேல் சாதல்' என்பதெல்லாம் நாமாக எடுத்துக் கொள்ளும் முடிவுதானே? நினைத்தால் அதை நாமாக மறந்துவிடக் கூடாதா? அந்தப் பெண் ரமா அப்படித்தானே மறந்து விட்டிருக்கிறாள்! நடந்து போனதை நினைத்து நினைத்து ஏங்குவதில் என்ன பயன்? அழகான ஒரு பெண்ணை மணந்து, ரமாவுக்கு எதிரிலேயே அவளுடன் கொஞ்சிக் குலாவி, 'பார்! நீ



இருக்க வேண்டிய இடத்தில் வேறொரு பெண்ணை நான் எப்படி ஆனந்தமாக அனுபவிக்கிறேன்' என்று பழி தீர்ப்பது போல் நடந்து கொள்! அப்பொழுது தான் இந்தப் பெண் ஜன்மங்களுக்குப் புத்தி வரும்!'' என்றார் சுதர்சனம்.

ரமாவின் இடத்தில் வேறொரு பெண்ணை அனுபவித்து ஆனந்தம் காண முடியும் என்று அவனால் உறுதியாக எண்ண முடியவில்லை. ஆயினும் 'பழி வாங்குவது போல் நடந்துகொள்' என்று சுதர்சனம் உபயோகித்த சொல்லை அவன் உடும்புபோல் பிடித்துக் கொண்டான்.

''ரமாவின் தங்கை காந்தியையே எனக்கு மணம் முடிப்பதாக அம்மா சொல்கிறாள் சார்!'' என்றான்.

சுதர்சனம் திடுக்கிட்டார். ''என்னது?''

''ஏன்? அக்காவைப் போலவே தங்கையும் இருந்து விடுவாளோ என்று யோசிக்கிறீர்களா?''

''இல்லை. எப்படியோ நீ மணந்து கொண்டு குடியும் குடித்தனமுமாக ஆனந்தமாக இருந்தால் சரி!'' என்றார் சுதர்சனம்.

*　　　　*　　　　*

ரமாவைப் பார்க்கும்போதெல்லாம் ரூபகுமாரின் மனம் எல்லையற்ற சங்கடத்தை அடைந்தது. 'வீணாகத்



தன் ஆணவத்தை நிலைநாட்ட, வாகனிடம் சினம் தீர்க்க, இப்படி ஒரு பெண்ணை மன நோயில் பாதிக்கச் செய்து விட்டோமே!' என்று அவன் தவித்தான். அவளுக்குத் தாய்மைப் பேற்றை அளித்ததோடு தீராத மனச் சஞ்சலத்தையும் அல்லவா அளித்து விட்டான்! இனி மாற்று உண்டா? ஒரு வெறியில் செய்து விட்ட செய்கைக்காக அப்பெண்ணையே இழக்க நேரிடுமோ? அவளுக்குத் துன்பத்தைத் தந்து அவன் என்ன இன்பத்தைக் கண்டான்? அவனுக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. மற்றவர் துன்பத்தின் வித்தாக எழும் இன்பம் வெகு நாட்கள் நீடிப்பதில்லை. இன்பம் தந்து துன்பம் பெற்றால் கூட ஒரு வகையில் அதுவே தியாக உணர்ச்சியாக மாறி விடக்கூடும். இன்பம் தந்து இன்பம் பெறுவதே மன நிம்மதிக்கான வழி! ரமாவைப் பார்க்கும்போதெல்லாம் ரூபகுமாரின் மனத்தில் இப்படிப்பட்ட தத்துவங்களும் வேதனைகளும் எழுந்தன. ரமாவின் உடல் நிலை நாளுக்கு நாள் நலிவதைக் கவனித்து வந்தவன், இத்தனைக்கும் காரணமாகத் தன்னைத் தானே சுட்டிக் காட்டிக் கொண்டான். பலன், அவனும் வேதனைக்கு இரையானான். தன் வேதனைக்கு மாற்றுத் தேட முனைந்தவனின் மனம் எங்கெங்கோ அலைந்தது.

ரமா இதைக் கவனிக்கத் தவறவில்லை. 'இப்படியும் ஒரு சிக்கலா?' உருகி உருகி மாய்ந்து போனாள் அவள்.

ரூபகுமாரை அவள் விரும்பி ஏற்கவில்லை தான். இருந்தாலும் அவனே அவள் கணவன் என்பதை அவளால் மறந்துவிட முடியவில்லை.

அவனே இப்போது தண்டனையை அனுபவிக்கிறான். அவளுக்கு இயற்றிய கொடுமைக்கு, படுகுழியில் தள்ளி அவளது ஆசைகளை நிமிர விடாமல் செய்து விட்ட கொடுமைக்கு அவன் பச்சாத்தாபத் தண்டனை அடைந்திருக்கிறான். அவள் விரும்பினால் அவனை அத் தண்டனையி

ராபின் ப்ளூ உத்திரவாதத்தில் உயர்ந்தது!



பிரகாசமான வெண்மை கொடுக்கக்கூடியது ராபின் ப்ளூ!

ராபின் ப்ளூ தூய வெண்மை அளிக்க வல்லது. அது உங்கள் துணிகளுக்கு ஒரு பிரகாசத்தையும் மற்ற ப்ளூ வகைகளில் கிடைக்காத தூய வெண்மையையும் தருகிறது. சிறிதளவு ராபின் ப்ளூ ஏராள துணிகளை வெண்மையாக்குகிறது. அதில் இன்னும் விசேஷம் என்னவெனில் அது முற்றிலும் பாதுகாப்பானது. அதுமட்டுமல்ல, உங்கள் துணிகளை எப்பொழுதும் வெள்ளை வெளேரென்று திகழச் செய்கிறது.



இயற்கையான கண்கவரும் தூய வெண்மைக்கு ராபின் ப்ளூ

ARBC-31 T

லேயே கதற அடித்து அமுக்கிவிட முடியும். வேதனையை உணர வைத்திருக்க முடியும். ஆனால் அவளால் அப்படி முடியவில்லையே, ஏன்?

ஏனென்றால் அவள் பெண்!

தாயாகி விட்ட நிலையில் அதர்ம முறையில் பிறந்து விடும் குழந்தைக்கும்கூடப் பால் ஊட்டக் கனிந்து வரும் உள்ளம் கொண்ட கடவுளின் படைப்பு பெண். மனைவி என்ற நிலையில் தர்ம முறையில் உலகறிய நின்றுவிட்ட பிறகு கொடுமை நிறைந்த கணவன் வேதனைக்கு உள்ளாகும்போது அவனிடம் கனிவு காட்ட உள்ளம் நெகிழும் இதயம் படைத்த பெண். ஓர் அந்நியப் பழமொழிப்படி கடவுள், உலகில் எங்கும் தானே உலவ முடியாத காரணத்தால் பெண்களைப் படைத்திருக்கிறார். பெண்களுக்கு ஆண்டவன் கருணை கூர்ந்து அடைக்கலமாகத் தந்திருக்கும் பொக்கிஷம் 'அன்பு.' விரோதிக்கும் அவள் அந்தப் பொக்கிஷத்தைத் திறந்து காட்டத் தயாராகி விடுகிறாள்!

அன்று இரவு ரூபகுமார் வீடு திரும்பியபொழுது ரமா அவனைக் கவனித்தாள். கண்கள் இலேசாகச் சிவந்திருந்தன. அவன் தள்ளாடியபடி மாடிப்படி ஏறித் தன் படுக்கையில் விழுந்தான்.

ரமா திகில் கொண்டாள்.

மறுநாள் காலையில் ரமா ரூபகுமாரைத் தேடிக் கொண்டு மாடிக்குச் சென்றாள்.

''இன்று ஆபீசிலிருந்து சீக்கிரமே திரும்பி விடுகிறீர்களா?''

ரூபகுமார் அவளை நோக்கினான். ''எதற்கு, ரமா?''

''இன்று நாம் இருவரும் சினிமாவுக்குப் போகிறோம்!'' என்றாள் ரமா. இதைக் கூறும்போதே அவள் மனம் வேதனையோடு அழுது விட்டது. அவள் அவனோடு செல்வதைக் கண்டிப்பாக விரும்பியதில்லை. ஆனால் அவளாகவே இன்று கோரிக்கை விடுத்திருக்கிறாள். அப்படி விடுக்கும்படி சூழ்நிலை அவளை நிர்ப்பந்தித்துள்ளது. கணவன் ஸ்தானத்தில் இருப்பவன் அவன். அவனை இழந்துவிடக் கூடாது என்னும் முடிவே இதற்குக் காரணம்.

கட்டிலிலிருந்து 'சடக்'கென்று எழுந்து அமர்ந்தான் ரூபகுமார். அவளை நோக்கிய பார்வையில் வியப்பு ஊடுருவியது.

''ரமா! என்ன சொன்னாய்?''

''இதில் என்ன வியப்பு? சினிமாவுக்குப் போகலாமென்றேன்.''

''ரமா, உன் மூளை நல்ல முறையில்...''

''நல்லமுறையில்தான் இயங்குகிறது.''

''நீ யாருடன் பேசுகிறாய் என்று புரிகிறதா?''

''புரிகிறது. என் கணவருடன் பேசுகிறேன்.'' கணவன் என்ற சொல்லுக்கு அவள் அழுத்தம் கொடுத்துக் கூறியதன் பொருள் அவனுக்குப் புரியவில்லை.

''ரமா, நான் கூப்பிட்ட இடங்களுக்கெல்லாம் நீ வர மறுத்தவள்.

இப்போது நீயே வந்து கூப்பிடுவ தென்றால்...அதனால்தான் என் பெயரை நினைவு படுத்தினேன். நான் ரூபகுமார். வாசு இல்லை.''

இப்படி அவன் கூறியதுமே திடீ ரென்று ரமாவின் மனத்தில் ஒரு புரி யாத இயக்கம் தொடங்கியது. ஏதோ வேகமான சுழல். வாசுவோடு மிதந்து போகும் பிரமை....

''வா...சு, வா...சு...!'' அவள் வாய் முணுமுணுத்தது.

ரூபகுமார், தான் செய்த தவற் றுக்காகப் பச்சாத்தாப அக்கினியில் உருகியவன், கடைசியில் அவளாக நெகிழ்ந்து வந்தபோது அதைப் பயன் படுத்திக் கொள்ளாமல் ஏன் வாசுவைப் பற்றி நினைவு படுத்தினான்? கருணை காரணமாகவே ரமா அவனைத் தேற்றி நேர் பாதைக்குத் திருப்பி விட முயல் கிறாள். உண்மை அன்பின் அடிப் படையில் அல்ல என்பது அவனுக்கு நன்றாய்ப் புரிந்திருந்தது.

ரமாவோ கணவனை நல்வழிப்படுத் தும் சாத்விக மனைவியாக ஒரு வழி யைக் காட்டச் சென்றாள். அந்த வழி யைப் பின்பற்றும்போது அந்தச் சாத் வீகத் தன்மை அழுத்தமாக இருந் திருக்க வேண்டும். கடைசியில் மனம் அவளைக் கைவிட்டு விட்டது! தன் இதய பலவீனம் அவளுக்கு நன்றாகப் புரிந்தது. வாசுவின் நினைவில் மூழ்கி விட்டாள்.

*   *   *

எல்லாத் தபால்களையும் போலத் தான் ஆனந்த் அந்தக் கடிதத்தையும் மெல்லப் பிரித்தான். இப்பொழுதெல் லாம் நாள்தோறும் அவனுக்கு நிறை யக் கடிதங்கள் வந்தன. பலர் அவனை ஸ்ரீகாந்திடமிருந்து பிரிந்து வந்துவிடும் படி ஆசை காட்டினர். அவன் ஒன் றுக்கும் செவி சாய்க்கவில்லை. வரும் தபால்களைக் கவனமாகப் பார்க்கும் வழக்கம் கூட மெல்ல விலகி வந்தது. அன்று பல கடிதங்களுக்கு இடையே இருந்த அந்தக் கடிதத்தையும் அப்படித் தான் அவன் பிரித்தான்.

ஆனால் கடிதம் எங்கிருந்து வந்திருக் கிறது என்பதை அறிந்ததுமே அவன் பரபரப்புடன் படித்தான். ரமா எவ் வளவு முத்து முத்தாக எழுதியிருக்கிறாள்!

''ஆனந்த்,

என்னிடமிருந்து கடிதம் வரு மென்று நீங்கள் எதிர் பார்த்திருக்க மாட்டீர்கள். என் கடிதத்தை நீங்கள் படிக்கக்கூட மாட்டீர்களோ, என் னவோ? சந்தேகம்தான். ஏனெனில் என்மீது எல்லோருக்குமே கசப்பு இருக்கும். அதற்காக நான் வருந்த வில்லை. அக்கசப்பு நியாயத்தில் பிறந்த தாகத்தான் இருக்கும். ஒரு தவற்றை அறிந்து தெரிந்து செய்து விட்டு மற் றவர்கள் அது தவறு என்று சுட்டிக் காட்டும்போது கோபப் படுவதில் பயனில்லை. அது எனக்குப் புரிகிறது.

பாதி படித்து விட்டு ஆனந்த் மோட்டு வளையைப் பார்த்தான். 'ரமா, நீ என்னைத் தவறாகப் புரிந்துகொண் டிருக்கிறாய். அன்று உன்னுடன் நான் பேசாமலிருந்தது உண்மைதான். ஆனால் என் மனத்தை உருவிப் பார்க்காம லிருந்து விட்டாயே! உன் மீது நான் மனக் கசப்பைக் கொட்ட முடியுமா? உன் நிலையை நினைத்து, உன்னை நினைத்து நான் எப்படி அழுகிறேன், தெரியுமா?'

அவன் மானசீகமாக ரமாவோடு பேசிக் கொண்டிருந்தான். தன் உள் ளக்கிடக்கையை எடுத்து அவன் முன் வைத்தான். சீதாபதிதான் அவனைத் தன் சுயநிலைக்குக் கொண்டு வந்தவர்.

''ஆனந்த்! யாரிடமிருந்து வந்திருக் கிறது, கடிதம்? பிரித்தபடியே அமர்ந்து விட்டாயே!'' என்றார்.

அப்போதுதான் ஆனந்த் மீண்டும் உணர்வு பெற்றான். அவன் ரமாவோடு, தன் மனத்தோடு பேசிக் கொண்டிருந் ததைச் சீதாபதி அறியவில்லை.

''நாம் எதிர்பார்க்காத கடிதம், அப்பா!''

''யாரப்பா அந்த அதிசய மனிதர்?''

''ரமா எழுதியிருக்கிறாள்!''

சீதாபதிக்கும் வியப்பு. அன்று ரமா அவர்கள் வீட்டுக்கு வந்தபோது, ஆனந்த் அவளுடன் சரியாகப் பேசாம லிருந்து விட்டது அவருக்கு நன்றாக நினைவு இருந்தது. அப்படி இருந்தும் அவளிடமிருந்து கடிதம் வருவ தென்றால்....?

''என்னப்பா எழுதி யிருக்கிறாள்?''

''நான் செய்தது தவறுதான். ஒப் புக் கொள்கிறேன். ஆனால் அவள் வந்த போது அப்படி இருக்கத்தான் என் மனம் விரும்பியது.''

தன் தந்தையின் மனத்திலிருப்பதைப் படித்துவிட்டவனாக அவன் கூறினாலும் கடிதத்தின் வாசகங்கள் அவனை அப் படிப் பேச வைத்தன.

''உன் மனம் அப்படி இருந்தது தவறு, ஆனந்த். வேண்டு மென்றே பொல்லாத் தனமாகக் குற்றம் செய் திருந்தால் கூட மன்னிக்க வேண்டும் என்பது நம் இந்தியப் பண்பாடு: இந்து சமுதாயத்தின் விதை. அப்படி இருக்கும்போது நிர்ப்பந்தம் காரண மாக ஒருத்தி தவறு இழைத்துவிட்டால்



சிந்தால்
CINTHOL
அதிக மணம், அதிக மென்மை
மென்மை, அன்றலர்ந்த மலரின் புதுமை, நறுமணம்
ஒப்பற்ற கிருமிநாசினியாகிய ஜி-11 (ஹெக்சாகுளோரோஃபின்) கொண்ட சிந்தால் டாய்லெட் பவுடரின் நீடித்து நிற்கும் நறுமணமும், பட்டுமென்மையும் உங்கள் உடலைத் தழுவி, சருமத்திற்கு நாள்முழுவதும் பாதுகாப்பளிக்கட்டும்.
ஜி-11 கொண்ட சிந்தாலைப் போல வேறெந்தப் பவுடரும் உங்களைப் பாது காப்பதில்லை
INTERPUB/CP 17A TAM

அதற்கு மன்னிப்பு நாமாகவேதானே அளிக்க வேண்டும்?''

ஆனந்த் ரமாவுடன் பேசாமலிருந்து விட்டதைக் கோபத்தின் மையப்பொருளாக அவர் எடுத்துக் கூறினார். ஆனால் அவன் கோபத்தையா கைப்பிடித்திருந்தான்? தந்தைக்கு எப்படி விளக்குவது? எனவே மௌனமாக இருப்பதே சாலச் சிறந்தது என்று எண்ணினான்.

''அது பற்றி ஏதேனும் எழுதியிருக்கிறாளோ?'' சீதாபதி கேட்டார்.

''வேதனையோடு எழுதியிருக்கிறாள்.'' அவனும் வேதனையோடு பகன்றான்.

''இதற்குத்தான் கடிதம் எழுதியிருக்கிறாளா? வேறு ஒன்றும் எழுதலையா?''

தந்தை இப்படிக் கேட்ட பிறகுதான், தான் மேலே கடிதத்தைப் படிக்காமலிருந்தது அவனுக்கு நினைவுக்கு வந்தது. பரக்கப் பரக்க மேலும் படித்தான்:

'...ஆனந்த், நான் துணிந்து உங்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கவே இக்கடிதம் எழுதுகிறேன். நான் உள்ளத்தாலும் உடலாலும் எவ்வளவோ பலவீனப்பட்டு விட்டேன். அப்படியும் என் சகோதரியின் நல் வாழ்வில் என் ஆசை பன்மடங்கு பெருகத்தான் செய்கிறது. வாசு காந்தியை மணக்கச் சம்மதித்து விட்டார் என்று அப்பா போன் செய்தார். அதில் எனக்குக் கொள்ளை மகிழ்ச்சி. என் வாழ்வின் இன்பங்களைச் சேர்த்து அத்தம்பதிகளின் வாழ்வு பாங்குடன் அமைய ஈசனை வேண்டுகிறேன். எங்களுக்குத் தாயோ, சகோதரனோ கிடையாது. தேவகி சம்பந்தியாக இருக்கிறார். என் அப்பா ஒருவராக நின்று விவாக ஏற்பாடுகளை எப்படிச் செய்ய முடியும்? நானோ... வேண்டாம். என்னைப் பற்றி அதிகமாக யாருமே தெரிந்து கொள்ள வேண்டாம். நான் ஒருவருக்கும் தெரியாத இருட்டறையில் இருப்பதே நலம்... நான் ஓடியாடி வேலை செய்ய முடியாத அளவுக்கு வலுவிழந்து விட்டேன். அதனால் என் வேண்டுகோளுக்கு இணங்கிக் காந்தியின் சகோதரனாக முன் நின்று விவாக ஏற்பாடுகளை நீங்கள் தான் செய்து முடிக்க வேண்டும். இதைப் பொறுப்பான பணியாக ஏற்று நிறைவேற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

'எனக்காக இல்லாவிட்டாலும், உங்கள் நண்பர் வாசுவுக்காகவாவது இதை ஏற்றுக் கொள்ளுங்கள்....... ஆனந்த்! என் வேண்டுகோளை மறுக்காதீர்கள்.

'உங்கள் தந்தைக்கு என் நமஸ்காரங்கள்.' —ரமா.

(தொடரும்)



துரதிர்ஷ்டத்திலும் அதிர்ஷ்டம்!

மேற்கிந்தியத் தீவுகளில் ஜார்ஜ் டவுன் நகரில் ஒரு பெரிய கிரிக்கெட் பந்தயம் நடக்கவிருந்தது. அதில் வால்காட்டைப் போன்ற தலைசிறந்த ஆட்டக்காரர்கள் ஆடுவதற்கு இருந்தனர். ஒன்பது பேர்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு விட்டனர். பாக்கி இரண்டு பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு மூன்று பேர் தகுதி படைத்தவர்களாய் இருந்தனர்.

புச்சர், ஜூலியன், கன்ஹாய் இந்த மூன்று பேர்களிலே யாரைத் தேர்ந்தெடுப்பதென்பது பிரச்னை! மூவர் பெயர்களையும் சீட்டில் எழுதிக் குலுக்கிப் போட்டு அதிர்ஷ்டப் பரிசோதனை நடந்தது! துரதிர்ஷ்டம் கன்ஹாய் பக்கம் விளையாடியது. ஜூலியனும் புச்சரும் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். கன்ஹாய்க்கு ஏற்பட்ட ஏமாற்றம் கொஞ்சநஞ்சமல்ல. ஆனால் அடுத்த நாள் காலையிலேயே அதிர்ஷ்டம் அவர் வீட்டுக் கதவைத் தட்டியது.

"கோப்ரா என்ற ஆட்டக்காரர் கை சுளுக்கினால் அவதிப்படுகிறார். அவருக்குப் பதில் நீ ஜார்ஜ் டவுனுக்குப் போய் ஆட முடியுமா?'' என்று கேட்டனர் கிரிக்கெட் நிர்வாகிகள். ஜார்ஜ் டவுனில் அநாயாசமாக ஆடிய கன்ஹாய்க்கு இங்கிலாந்துக்குப் பயணமாகும் வாய்ப்பு இயல்பாகக் கிட்டியது.

''நீ இங்கிலாந்தில் நன்றாக ஆடுவாய். ஆனால் ஒரு டெஸ்டில் இரண்டு சதம் எடுத்தால் உனக்கு என் மட்டைகளில் ஒன்றைப் பரிசாகத் தருவேன்!'' என்று வாக்குத் தந்தார் கிரிக்கெட் மன்னர் வால்காட்.

கன்ஹாய் இங்கிலாந்தில் உயிரைக் கொடுத்து ஆடி எப்படியாவது இரண்டு சதம் எடுத்துவிடப் பெருமுயற்சி செய்தார். ஒரு மாட்சில் 195 ரன்களிலே அவர் 'அவுட்'டாகி விட்டார். தமக்கு வால்காட்டிடமிருந்து எங்கே மட்டை கிடைக்கப் போகிறது என்று மனத்துக்குள் எண்ணி மறுகினார் கன்ஹாய். ஆனால் வால்காட் பெருந்தன்மையுடன் தம் மட்டைகளில் ஒன்றைக் கன்ஹாயிடம் கொணர்ந்து தந்தார். ''அபாரமாக ஆடினாய்!'' என்று பாராட்டினார்.

—குண்டுமணி

குளிர்காலத்திலும் சரி.
கோடைகாலத்திலும் சரி—
மார்கோசோப்
சுத்தம் செய்வதோடு மட்டும்
நிற்பதில்லை—
சருமத்தை பாதுகாக்கிறது.

ஏனெனில் மார்கோவில் மட்டுமே வேப்பெண்ணெய் சேர்ந்துள்ளது.



மார்கோ சோப்

ஒரு கல்கத்தா கெமிகலின் தயாரிப்பு

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம் : **ராஜாஜி**

28

நவஜீவன் பத்திரிகையின் வாசகர் ஒருவர் கேட்டார்: "கடவுளை வணங்கு என்று அடிக்கடி சொல்லுகிறீர்கள். பிரார்த்தனை செலுத்து என்று அடிக்கடி சொல்லி வருகிறீர்கள். ஆனால் எந்த முறையில் எந்தப் பெயரில் கடவுளை வைத்துப் பிரார்த்தனை செய்வது என்பதை நீங்கள் சொல்லுவதில்லை. தயவுசெய்து கொஞ்சம் விளக்குங்கள்."

இந்தக் கேள்விக்குப் பதிலாக எழுதுகிறேன்.

கடவுளை வழிபடுவது என்றால் ஆண்டவனை ஸ்தோத்திரம் செய்வதே. இதனால்தான் வழிபாட்டுக்குத் 'துதி' என்று பெயர். 'துதி' என்கிற சொல் ஸ்துதி என்கிற வடமொழியின் திரிபு. அதன் பொருள், ஸ்தோத்திரம் செய்வது அல்லது புகழ்வது. ஆண்டவனைப் போல் வேறு யார் புகழுக்கு உரியவர்? ஆண்டவனைத் துதிக்கும் போது நம்முடைய துன்பத்தையும் குறைகளையும் குற்றங்களையும் சொல்லி முறையிடுகிறோம்.

ஆண்டவனுக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. அதாவது அவன் நாமமே இல்லாதவன். நமக்கு இஷ்டப்பட்ட பெயரை வைத்துப் பகவானை வணங்கலாம், அல்லது பிரார்த்திக்கலாம். சிலர் அவனை ராமன் என்று அழைக்கிறார்கள். சிலர் அவனைக் கிருஷ்ணன் என்கிறார்கள். வேறு சிலர் ரஹீம் என்கிறார்கள். ஸ்வாமி என்கிறார்கள். ஈஸ்வரன் என்கிறார்கள். 'GOD' என்கிறார்கள். எந்தப் பெயர் வைத்தாலும் ஒரே சக்தியைத்தான் வணங்குகிறார்கள். உணவு வேறுபாட்டைப் போல் பெயர் வேறுபாடுகளும். எல்லா உணவும் எல்லாருக்கும் ஒத்துக் கொள்ளாது. அப்படியே நாம பேதங்களும். அவரவருடைய மனோபாவத்துக்கும் பயிற்சிக்கும் பொருத்தியவாறு பெயர் வைத்து வழிபடுவார்கள். அனைவருடைய உள்ளத்திலும் அவன் அந்தராத்மாவாக இருக்கிறபடியாலும் அனைத்தையும் அறிந்தவனானபடியாலும், எல்லையற்ற உணர்வு உடையவனானபடியாலும் அவரவர்கள் மனத்தில் உள்ள அந்தரங்க பாவங்களை அறிந்து அவரவர்களுடைய தகுதிக்கு இசைய எல்லாம் தருவான்.

வாயினால் அல்ல, பிரார்த்தனை செய்வதும் வழிபடுவதும். உள்ளத்தைக் கொண்டு பூஜை செலுத்த வேண்டும். வாயில்லா ஊமையும் ஆண்டவனுக்குப் பிரார்த்தனை செலுத்துவான். படிப்பு இல்லாதவனும் சுத்த மடையனும் எல்லாருமே ஆண்டவனை வழிபடலாம். தேன் கசியும் மொழியை ஆள்பவருங்கூடச் சிலர் தம் உள்ளத்தில் விஷத்தை மறைத்து வைத்திருப்பார் அல்லவோ? அத்தகையோருடைய பிரார்த்தனை ஆண்டவனைப் போய்ச் சேராது.

கடவுளைப் பூஜை செய்யப் புகுவதற்குமுன், உள்ளத்தைத் துப்புரவாக்கிக் கொள்ள வேண்டும். ராமனுடைய நாமத்தை உச்சரித்தா ஹனுமான் பூஜை செய்தான்? தன் உள்ளத்தில் அல்லவோ ராமனை வைத்து விட்டான்? அப்படி வைத்து விட்டதனால் அல்லவோ எல்லையற்ற சக்தியை ஹனுமான் அடைந்தான். அந்தச் சக்தியைக் கொண்டல்லவோ கடலைத் தாண்டினான், மலையைத் தூக்கினான். நாமும் அத்தகைய பக்தியைக் கொண்டு அலைகடல் சம்சாரத்தில் படகை ஓட்டலாம். பக்தியிருந்தால் மலையும் நகரும்; கடலையும் நாம் தாண்ட முடியும்.

பக்தி என்றால் என்ன? அந்தரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் ஆண்டவனைக் கண் திறந்து உணர்வதுதான். இதைச் செய்து வெற்றி பெற்றவனுக்கு வேறு என்ன வேண்டும்? ஒன்றும் வேண்டியதில்லை. உடல் முழுதும் நோய்ப்பட்டு அழுகிப் போயிருந்தாலும் அவன் ஆன்மா பூரண ஆரோக்கிய நிலையிலேயே சுத்தமாக இருக்கும். ஆத்ம சம்பத்தை அநுபவிப்பான்.

இந்த அளவுக்கு உள்ளத் துப்புரவு எப்படி அடைவது என்பது கேள்வி. பேசும் மொழியைச் சொல்லித் தரலாம். உள்ளத்தின் பாஷையை யார் சொல்லித் தர முடியும்? பக்தர்களுக்குத்தான் அந்த பாஷை தெரியும். அவர்கள்தான் சொல்லித் தர முடியும். பகவத்கீதையில் மூன்று இடங்களில் யார்

உண்மை பக்தன் என்பதைக் கண்ணன் விளக்கியிருக்கிறான். பொதுவாகக் கீதை முழுவதிலுமே பக்தனைப் பற்றிச் சொல்லப் படுகிறது. பக்தனுடைய இலக்கணத்தைப் படித்து அந்தப் படிப்பினால் மட்டும் நாம் ஒன்றும் அடைய முடியாது. இந்த உல கத்தில் அந்த இலக்கணத்தில் அடங்கிய பக்தர்கள் வெகு சிலர். இதனாலேதான் நான் ஓர் எளிய முறையைச் சொல்லுகிறேன். பிறருக்குச் சேவை செய்வதே வழிபாடு என்று. மக்களுக்குச் சேவை செய்தோமானால் நம்முடைய உள்ளத்தைத் தேடிக் கொண்டு ஆண்டவன் வந்து சேருவான். நல்ல இருப் பிடத்தைத் அவனே தேடிக் கொண்டு வரு வான். ஆனபடியாலேதான் தெய்வத்தைக் கண்ட ஞானி நரசி மேத்தா பாடினார், பிறர் துக்கத்தைக் கண்டு கரைந்து அழுகிற வனே உண்மை வைஷ்ணவன் என்று. அபூபென் ஆதமைப் பற்றியும் இதையே சொல்லுவார்கள். மக்களுக்கு அவன் சேவை செய்தான். ஆனபடியால் அவன் பெயர் ஆண்டவனுடைய புனிதப் பட்டியலில் முதல் இடம் பெற்றது. மக்களுக்குச் சேவை செய்தோமானால் ஆண்டவனுக்கே சேவை செய்ததாகும்.

யார் தீனர்கள்? யாருக்கு நாம் சேவை செய்ய வேண்டும்? வறுமையில் கஷ்டப்படு கிறவர்களுக்கு, திக்கற்றவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அப்படிச் செய்கிறவர்கள் தான் பக்தர்கள் ஆவார்கள். உடலும் உள்ள மும் செலுத்திச் செய்ய வேண்டும்.

பிறப்பினால் 'தீட்டு' என்று சிலரை ஒதுக்கி வைப்பவர்கள் எப்படி உடலைக் கொண்டு அவர்களுக்குச் சேவை செய்ய முடியும்? முடி யாது. ஏழைகளுக்கு என்று நூல் நூற்கப் பிரியப்படாதவர்கள், ராட்டையைச் சுற்றுவ தற்கு உடல் வளையாதவர்கள், நொண்டிச் சாக்குச் சொல்லுகிறவர்கள் இவர்களுக்குச் சேவை என்றால் பொருள் விளங்கவில்லை என்றே சொல்ல வேண்டும். ஆரோக்கியமாய் இருக்கும் ஓர் ஏழைக்குப் பிச்சை போடுவது தவறாகும். உழைத்து உணவடையச் செய்ய வேண்டும். பிச்சை தருவது அவனைத் தாழ்த் தும். அத்தகையோன் எதிரில் நாம் ராட்டை யைச் சுற்றி நூல் நூற்று அவனையும் அப் படியே செய் என்று வழி காட்டினோமானால், நாம் ஆண்டவனுக்கு நல்ல முறையில் கைங்கரி யம் செய்தவர்கள் ஆவோம். இலையோ பூவோ ஓர் அற்பப் பழமோ பக்தியுடன் தந்தால் அவன் என் தாசன் ஆவான் என்று கண்ணன் கீதையில் சொல்லியிருக்கிறான். ஏழைகள் குடி யிருக்கும் குச்சு வீடுகளிலல்லவோ ஆண்டவன் பாதம் வைத்து அருள்கிறான். அந்த ஏழை களுக்காக நாம் ராட்டையைச் சுற்றினால் அதுவே பெரிய பூஜையும் வேள்வியும் ஆகும்.

ஆகவே, எந்தப் பெயரை வைத்தும் பிரார்த்தனை செய்யலாம். பக்தி நிறைந்த உள்ளம் வேண்டும். உள்ளத்தில் பக்தியை நிறைப்பதற்கு வழி சேவை. இந்த யுகத்தில் தீண்டாதார்களுக்கு உள்ளத்தில் அன்போடு சேவை செய்யும் வைஷ்ணவர்களும் சைவர் களும் உண்மை வைஷ்ணவர்களும் சைவர் களும் ஆவார்கள். எந்த சமயத்தினர் ஆயி னும், எந்தச் சம்பிரதாயத்தினர் ஆயினும் பக்தியோடும் அன்போடும் ஏழைகளுக்காக ராட்டையில் நூற்பவர்கள் ஆண்டவனுக்குப் பூஜை செலுத்துகிறவர்கள் ஆவார்கள்.

(யங் இந்தியா, 24-9-25)

வண்ணான் நண்டின் காதல்

தங்கள் உயிரைப் பணயமாக வைத்து வீரத் துடன் போராடி எதிரியை வீழ்த்திக் காதலியின் அன்பைப் பெறும் கதாநாயகர்கள் பற்றி நாம் கதை களில் படித்ததுண்டு. வண்ணான் நண்டு இதே போல் காதலியின் மனத்தைக் கொள்ளை கொள்ளச் சாகசங்கள் புரியும். இந்நண்டினை **Fiddler Crab** என்று ஆங்கிலத்தில் அழைக்கின்றனர்.



வண்ணான் நண்டைத் தென்னிந்தியக் கடற்கரை ஓரங்களில் -- குறிப்பாகத் தொண்டி, மீமிசல் கரை, தூத்துக்குடி போன்ற இடங்களில் -- சர்வசாதாரண மாகப் பார்க்கலாம். இடுக்கி போன்ற அமைப்பு கொண்ட இரண்டு முன்னங் கால்களில் ஒன்று மிகப் பெரியதாக, பட்டையாகக் கறுப்பு கலந்த வெள்ளை நிறத் தில் காணப்படும். ஆண் வண்ணான் நண்டு தான் விரும்பும் பெண் நண்டின் பொருட்டு மற்ற ஆண் நண்டுகளுடன் போராடும்; ஓட ஓட விரட்டும். இந்தப் பெரிய காலை சண்டையிடுவதற்கு உபயோகித் துக் கொள்ளும். அதைத் தூக்கி கட்டி போன்ற நிலையில் வைத்துக் கொள்ளும். சமயம் பார்த்து எதிரியின் காலை நன்கு தனது இடுக்கி போன்ற இரு முன்னங் கால்களாலும் பிடித்துக் கொண்டு கடக் கென்று ஒடித்துத் தூக்கி விட்டெறியும். இவ்வாறு பல எதிரிகளை முறியடித்த ஆண் நண்டின் வீரத் தைக் கண்டு பெண் நண்டுகள் மயங்குறும்.


மேலும் ஆண் வண்ணான் நண்டு தான் விரும்பிய பெண் நண்டு தன் காதலுக்கு அடிமை யாகவில்லை என்றால் அப்பெண் நண்டைத் துரத்திப் பிடித்து அலாக்காகத் தன் இருப்பிடத்துக்குத் தூக்கிச் செல்லத் தனது பெரிய காலை உபயோகப்படுத்திக் கொள்ளும். தான் விரும்பிய பெண் நண்டு தூரத் தில் இருந்தால் உடன் ஆண் வண்ணான் நண்டு தன் கால்களை நேராகத் தூண் போல் நிறுத்தித் தனது உடல் பகுதியை நன்கு உயர்த்திக் கொண்டு தனது பெரிய காலை முன்னும், பின்னும் அசைக்கும். தனது வீரத்தை -- புஜ பராக்கிரமத்தை இவ்வாறு அது காதலிக்குப் புலப்படுத்துகிறது.

பிரகாசமாக இருப்பினும்கூடப் பெண் இனம் ஏதோ ஒரு படி பலம் [illegible] ஆணையே விரும்புகின்றது.

- அந்தோனி பேசில்

கோடையில் குளுமை பஜாஜ் அளிக்கும் பரிசு!

- பஜாஜ் க்ளேஸியர் ஜூனியர் ரூம் கூலர்
- பஜாஜ் ஐஸ்-க்ரீம் ஃப்ரீஸர்
- பஜாஜ் மிக்சர் மேலும்




பஜாஜ் விசிறிகள்

கேபின் ஏர் ஸர்குலேடர்

டேபிள்

பெடஸ்டல்




■ ... கவர்ச்சிகரமான அநேகவித ரகங்களில் விசிறிகள் தேர்ந்தெடுக்க

ப்யூடி விசிறிகள்

225மிமீ

400மிமீ

500மிமீ




bajaj

பஜாஜ் எலெக்டிரிகல்ஸ் லிமிடெட்

45.47 வீர் நாரிமன் ரோடு, பம்பாய்-1

கிளைகள் இந்தியா முழுவதும்

heros BE-54 TAM



பதில் நாடகம்

பூவை ஆறுமுகம்

'அங்காளம்மன் தேநீர்க் கடை'யில் எள் போட இடம் இல்லை.

அதன் சொந்தக்காரனான செல்லையா பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தான்.

எடுபிடிப் பையனுக்கும் மூச்சுவிட நேரமில்லை.

டீ அடித்துக் கொடுத்துக் கொண்டும், சில்லறைகளை வாங்கிப் போட்டுக் கொண்டும் இருந்தான் செல்லையா.

காலை வெய்யில் அப்போதுதான் சூடு காட்டத் தொடங்கியிருந்தது.

அப்போது தலை முண்டாசை அவிழ்த்து உதறித் தோளில் போட்டுக் கொண்டு வந்து நின்ற மாணிக்கம் தன்னுடைய புதிய கருக்கரிவாள் மீசையை லாகவமாக முறுக்கிவிட்டவனாக, அந்தத் தேநீர்க் கடையை ஒருமுறை நோட்டமிட்டான். உட்கார இடம் கிடைக்காததால், அமர்த்தலாக நிற்க வேண்டியவன் ஆனான். வந்தவனை 'வா!' என்றுகூடச் சொல்லாமல் நின்ற செல்லையாவை ஒருமுறை முறைத்துப் பார்த்து விட்டு, ''என்னப்பா செல்லையா, எனக்குப் பட்டுக்கோட்டை வரை அலுவல் இருக்கு. நீ எழுதிக் கொடுத்த புரோநோட்டைக் கொண்டாந்திருக்கேன். உன் சொல்லுப்படி பணம் தோதுபண்ணிட்டியா, என்ன?'' என்று ஓங்கிய குரலில் விசாரித்தான்.

கல்லாப் பெட்டிக்குள் சில்லறைகளை எண்ணிப் போட்டுக்கொண்டிருந்த செல்லையா, மெதுவாக மாணிக்கத்தை நோக்கிப் பார்வையைத் திருப்பினான்.

''பட்டுக்கோட்டையில் சோலி இருக்கிறதாய்ச் சொன்னீங்களே, என் மீது பிராது போடவா?'' என்று எகத்தாளத்துடன் வினவினான் செல்லையா.

''நோட்டுக்குள்ள பணத்தை வட்டி சேர்த்துக் கணக்குப் பண்ணிக் கொடுத்திட்டா, உன்மீது நான் ஏதுக்குப் பிராது பண்ணப் போறேன்?... ஆபத்து சம்பத்தின்னு வந்து கெஞ்சினே. கொடுத்தேன். வருஷம் மூணு ஆகப் போகுது. நாளைக் கழிச்ச ஞாயிற்றுக்கிழமை காலாவதி. நேத்து நீயும் நானும் சண்டை போட்டுக்கிட்டது போதும். சீக்கிரம் பணத்தை எடு!'' என்று துருசுப் படுத்தலானான் மாணிக்கம்.

மாணிக்கத்தை நேர்கொண்ட விழிகளால் அளந்தான் செல்லையா. சுருட்டை முடிகளைக் கோதி விட்டுக் கொண்டான். பீடிப் புகை சூழத் தொடங்கியது. ''அப்பாலே எம்புட்டு பணம் வேணுமுங்க? நேத்து நான் சொன்ன மாதிரி, நான் வாங்கின ரூபாய் ஐந்நூறுக்கு

அரை வட்டி மேனிதான் போட்டுத் தர ஏலுமுங்க. நிலக்கடலே சாடாவையும் ஆலங்குடிச் சந்தையிலே வித்துப் பணம் பண்ணிப்பிட்டேன். இன்னும் அஞ்சாறு மாசம் ஆறப்போட்டிருந்தால், இன்னும் நானூறு ரூபாயாச்சும் கூடுதலாய்க் கிடைச்சிருக்கும். எங் கணக்குப்படி வட்டியும் முதலும் சேர்த்து ஐந்நூத்தித் தொண்ணூறு ஆகுது. அதிலே மூணு வருசத்திலே செல்லு வைச்சது ரூபாய் மூணு கழிச்சிட்டா, பாக்கி ஐந்நூத்தி எம்பத்தேழுரூபாய் நிக்குது! தரட்டா? ஒங்க கணக்குப்படி ரெண்டு வட்டி போட்டா, எண்ணூத்தி அறுபது ஆகுமே! அடாவடி அடிக்காமல் பணத்தை வாங்கிக்கிடுங்க. இல்லாட்டி, ஒட்டிக்கு ரெட்டியாய் நோட்டு எழுதி வாங்கி வச்சிருக்கிங்க எங்கிட்டேயிருந்து. அதைக் கோர்ட்டிலே போட்டுக்கிடுங்க...!'' என்று கன கச்சிதமாகச் சொன்னான்.

வட்டியை ஒரு ரூபாய் விதமாவது போட்டுத் தரும்படி நேற்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் மாணிக்கம். செல்லையா கேட்கவில்லை. இருவருக்கும் இடையே வாய்ப் பேச்சுத் தடித்து, கைகலப்பு மூளும் நிலைகூட வந்தது. நல்ல வேளை, இடையிலிருந்த நல்லவர்கள் தடுத்து விட்டார்கள். இருவருக்குள்ளும் பேச்சு அரை வட்டிதான். செல்லையா பேரில் தவறில்லை.

இனி தன் விம்பு சாயாது என்பதைப் புரிந்து கொண்டான் மாணிக்கம். ''ம்.... சரி. எடுப்பா பணத்தை!'' என்றான்.

செல்லையா உள்ளே போய்ப் பணமும் கையுமாக வெளியே வந்தான். பணத்தை எண்ணி மேஜையின் மீது வைத்தான். ''புரோ நோட்டைத் தாங்க, பார்க்க வேணும்!'' என்றான் அவன்.

மாணிக்கத்துக்குச் செல்லையாவின் பேச்சு என்னவோ ஒரு சந்தேகத்தை ஊட்டியது போலும். ''நீ முதலில் பணத்தைத் தா, செல்லையா!'' என்றான். அவசரத்துக்குக் கெஞ்சிக் கூத்தாடிப் பணத்தைக் கடன் வாங்கிப் போனவன் நேற்று எப்படித் திமிராகப் பேசினான்! — வட்டியையும் கூடுதலாகப் போட்டுத் தரவும் மறுத்து விட்டானே! ஒருகால், பிராமிஸரி நோட்டை வாங்கிக் கிழித்துப் போட்டு விட்டு, பணம் கொடுக்காமல் ஏய்த்து விட்டால்...? மறுகணம், ஏதோ ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்தவனாக மறுபேச்சாடாமல், கையிலிருந்த அந்தப் புரோ நோட்டை — மாணிக்கத்துக்குச் செல்லையா எழுதிக் கொடுத்த அந்தப் பிராமிஸரி நோட்டைச் செல்லையாவிடம் நீட்டினான்.

செல்லையா அந்தப் புரோநோட்டை வாங்கிப் பார்த்தான். மறுகணம், அதை அப்படியே சுக்கல்நூறாகக் கிழித்துப் போட்டான்.

மாணிக்கம் தலையில் இடி விழுந்த மாதிரி கதி கலங்கிப் போய் விட்டான்.

''மாணிக்கம்! இனிமே நீங்க எம்பேரிலே எப்பிடித் தாவா போடுவீங்களாம்?... நேத்து ஒரேயடியாய்ப் பயம் காட்டினீகளே?'' என்று அட்டகாசமாகச் சிரித்தபடி, மேஜையிலிருந்த பணம் முழுவதையும் அள்ளி மடியில் கட்டிக் கொண்டு மிகவும் எச்சரிக்கையுடன் நின்றான் செல்லையா.

வாடிக்கைக்காரர்கள் ஸ்தம்பித்துப் போயினர்.

மாணிக்கம் எள்ளும்கொள்ளும் வெடிக்கக் காட்சியளித்தான். ''என்னை ஏய்க்கப்பிட்டே நீ. ஆனா, உன்னோட மனச்சாட்சியை நீ ஏய்க்கப்புட ஏலாது. நினைப்பு வச்சுக்க!.... இந்தப் பணம் எனக்குக் கால் தூசுக்குச் சமானம்!.... சீ! நன்றி மறந்த சென்மம் நீ!'' என்று சோளம் பொரியக் கத்திவிட்டு, கோபாவேசம் மூள அங்கிருந்து கிளம்பத் தொடங்கினான்.

உடனே, செல்லையா கடகடவென்று சிரிக்கத் தொடங்கினான். ''அண்ணாச்சி, இந்தா, சாயா!'' என்று சொல்லி, தேநீர் போட்டு வைத்தான்.

மாணிக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

''அண்ணாச்சி... !'' என்று அழைத்துக் கொண்டே தொடர்ந்த செல்லையா, உணர்ச்சிப் பெருக்குடன் மாணிக்கத்தின் கைகளைப் பற்றி அழைத்து வந்தான்; மடியிலிருந்த பணம் முழுதும் அள்ளிக் கொடுத்தான். ''பணத்தை எண்ணிக்கிட்டு, நான் உங்ககிட்டே எழுதிக் கொடுத்த அசல் புரோநோட்டைக் கொடுங்க, அண்ணாச்சி. நெஞ்சிலே வஞ்சகம் இல்லாத புள்ளிங்க நாம ரெண்டு பேரும். நீங்க எங்கிட்டே ஒரு நாடகம் போட்டுக் காட்டினீங்க. நானும் பதிலுக்கு ஒரு நாடகம் நடிச்சுக் காட்டினேன். பணத்தாசைக்கு நாம ரெண்டு பேருமே நல்ல வேளை பலியாகிடல்லே!....'' என்று நிதானமான அன்புடன் சிரித்தான் செல்லையா.

மாணிக்கம் பணத்தைப் பெற்றுக் கொண்டான். ''நீ எழுதிக் கொடுத்த அசல் புரோநோட்டு இது!'' என்று சொல்லி, மடியிலிருந்த பழைய புரோநோட்டைக் கையிலெடுத்து வைத்த மாணிக்கம், மறுகணம் அதைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போட்டு விட்டு மீண்டும் சிரிக்கத் தொடங்கினான், பணத்தைப் பத்திரப்படுத்தியபடி!

''அண்ணாச்சி!'' என்று கதிகலங்கக் கூவினான் செல்லையா. மறுகணம், தன்னைச் சமாளித்து நிதானப்படுத்திக் கொண்டான். ''ஒண்ணுமில்லீங்க, அண்ணாச்சி! வேறொரு நோட்டைக் கிழிச்சுட்டு, என்னோட அசல் நோட்டை நீங்க வச்சிருந்து எம்பேரிலே தாவா போட்டாலும், நான் கட்டுப்படத்தான் செய்வேனுங்க! என்று, தெய்வத்தை மதிக்கிறவனுங்க இந்த ஏழைச் செல்லையா!'' என்று உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னான் செல்லையா.

மாணிக்கம் அழகாகச் சிரித்துக் கொண்டே அங்கிருந்து நகர்ந்து விட்டான். அவனுக்காகப் போடப்பட்ட தேநீரை அருந்தாமல் போவானா அவன்?

'கடவுளே!' செல்லையாவின் உள் மனம் தெய்வத்தை அழைத்துக் கொண்டிருந்தது. கிழித்துப் போடப்பட்டிருந்த அந்தப் புரோநோட்டின் கிழிசல்களிலே ஒன்று அவன் காலடியில் தஞ்சமடைந்து கிடந்தது. அந்தக் கிழிசலிலே, அவன் போட்ட — ரெவின்யூ ஸ்டாம்பில் போட்ட — கையொப்பம் அவன் கண்களிலே தென்படாமலா போய்விடப் போகிறது?

மதிப்புயர்ந்ததைத் தேடுகிறீர்களா? நீங்கள் கவனித்துப் பாருங்கள்

பின்னி ஷர்ட்டுகள்

தங்களது அற்புதமான துணி, அருமையான ஃபினிஷ் ஆகியவற்றால் பின்னி மிகச் சிறந்தவற்றையே உருவாக்குகின்றது. நீடித்த உழைப்பை நாடும் மனிதர்களுக்கு ஏற்ற ஷர்ட்டுகள், மிடுக்கான காலரும், கஃப்களும், உன்னதமான தையல். இன்றே பின்னி ஷர்ட் வாங்குங்கள்!

விலை: ரு. 12.50 லிருந்து ரு. 57.00 வரை.



பின்னி ஷர்ட்டுகள்

மற்றும் ஸ்லாக்ஸ் பின்னியின் மரபில் தயாரிக்கப்பட்டவை

மார்க்பரோ ஸ்லாக்ஸ் – எடுப்பானவை, சிக்கனமானவை. உங்கள் பின்னி ஷர்ட்டுக்குப் பொருத்தமானவை.

Interpub/BG 3TM





நைல் நதியின் சூன்யக்காரி

மன்மதக் கதை பேசும் மகோன்னத எகிப்து நாடு. அங்கேயும் மங்கையராகப் பிறப்பதற்கு ஒரு மாதவம் செய்யத்தான் வேண்டும்! உலகப் பேரழகி கிளியோபாத்ரா வந்து விட்டாளே!

அழகுத் தலைநகரம் அலெக்ஸாண்டிரியா. அதன் சாரமே ஒரு வீரக் காதை!

தாலமி — கிளியோபாத்ராவின் சகோதரன் — அவன் வேறு தெக்கலி கொட்டத் தொடங்கி விட்டான்! புகழ்மிக்க எகிப்து தனக்கா? இல்லை, நைல் நதியின் சூன்யக்காரியாக விளங்கி விட்ட கிளியோபாத்ராவுக்கா?

அசைந்து கொடுப்பவளா அந்த அழகுக் கிளி....?

யாழின் சுண்டிவிட்ட மேல் நிலை நரம்பு போல் சிரிப்பவள், அப்போது பேயின் நள்ளிரவு பிணப் பசி வெறி போலச் சிரிப்புக் கண்டாள்: ''அப்போலோ! எத்தனை இனங்களுக்குத்தான் இப்படிப்





கோவி. மணிசேகரன்



பெலூஸியத்தில் அடங்கிக் கிடப்பது? எனக்கு வேண்டியவர் யார்? வேண்டாதவர் யார்? என்பதே புரியவில்லை. நம்மவர்களே அந்தப் பொடிப் பயல் தாலமிக்குத் தாளம் தட்டும் மறைமுகக் காரியங்களில் இறங்கி யிருக்கிறார்களோ என்று சந்தேகப்படுகிறேன்."

அரண்டு போனான் அப்போலோ திராஸ்: "என்னையுமா, கிளியோ?"

கைத்தாளின் மற்றோர் அலறல்: "திராஸ்! உன் ஒருவனைத் தான் தராசில் வைத்து எடை போட்டு நம்பு கிறேன். இப்போதும் ஒரு காரியத்தை உன் மூலமாகவே எதிர்பார்க்கிறேன்!"

"கட்டளை, மகாராணி!"

"இந்த நெருக்கடியைச் சமாளிக்க எனக்குத் தெரியும். என்றாலும் உன் மூளையின் திறனைச் சோதிக்க வேண்டு மல்லவா?"

அந்த அழகுக் கிளியின் அந்தரங்க ஆலோசகனுமான அப்போலோ திராஸ் கூர்ந்து கவனித்தான்.

"கிளியோ! எனக்கு இருக்கும் ஒரே அழகு மூளைதான்!"

கலகலவென்று சிரித்தாள் கிளியோபாத்ரா.

"சாமர்த்தியமாகப் பேசுகிறீர்கள் அந்தரங்க ஆலோசகரே! தாலமி - அதுதான் என்னோடு பிறந்த நோய்ச் சத்துரு- அவனை ராஜதந்திரமாகத்தான் வீழ்த்த வேண்டும்!"

"ஆதரிக்கிறேன் அழகு ராணி! ஆனால் பாம்பே என்கிற மாவீரரை விரட்டிக் கொண்டு ரோமாபுரி ஸீஸர் படையெடுத்துக் கொண்டு வரும் செய்தியை..."

"அறிவேன், அப்போலோ!"

"தஞ்சம் புகுவதற்கு இடமில்லாமல் தவிக்கிறார் பாம்பே! ஆகவே அவருக்கு நாம்..."

"சே! இவ்வளவுதானா உங்கள் மூளையழகு? ஒரு பாம்பேயை வைத்துக் கொண்டு அலெக்ஸாண்டிரியாவின் பிரச்னைக்கு வழி கோல முடியும்தான். ஆனால் அடுத்து நிற்கும் சிங்கம் நிகர் ஸீஸரை மறந்து விட்டீர்களே! நமக்கு எப்படி அரசியல் பிரச்னையோ அப்படித்தானே அவர்களுடைய ரோமாபுரி அரசியல் பிரச்னையும். இந்நிலையில் பாம்பேயுக்கு அடைக்கலம் தந்தால் ஸீஸர் நம்மைச் சீர் வரிசை வைத்தா சிறப்பிப்பான்? சீறி எழுவான் அப்பாலோ, சீற்றமுடன் சீறி எழுவான்!"

கோபத்தால் கிளியின் உடல் குலுங்கியது. அழகின் மகரந்தமா தெளிக்கிறது? அகிய பெரிய கறுப்பு முத்துக்களில்தான் எத்தனை ஒளி நயம்! கறுப்புக்கே ஓர் அழகைக் கற்பித்தவள் அல்லவா கிளியோபாத்ரா!

அந்த அழகின் சிரிப்பில் மயங்கிய அப்போலோ திராஸுக்கு ஓர் அரிய ஞானோதயம்: "கிளியோ, என் ராணி! பாம்பேயுக்கு அடைக்கலம் தருமாறு உங்கள் சகோதரன் தாலமியைத் தூண்டி விட்டால்...?"

நாகத்தின் சிலிர்ப்புப் போன்ற ஓர் அசைவு! கிளியின் செந்நிற வாய் மலர்ந்தது. "நல்ல யோசனை! அப்போலோ, இன்னும் கொஞ்சம் உருவம் கொடு!"

"உங்களிடம் அதிகப் பற்றுக் கொண்டவரும், ஆசானுமான சிமோன் என்பவரைத் தூண்டி—"

"தூண்டி?"

"அதையே தூண்டிலாக்கி விட்டால், தாலமி என்கிற விரால் மீன் வசமாக அகப்பட்டுக் கொள்ளும்!"

"அதன் பிறகு?"

"............"





"ஏன் அதற்கு மேல் உங்கள் மூளை வேலை செய்ய வில்லையா? நான் சொல்லுகிறேன். சீபோஸ் மூலம் பாம்பேவை வெட்டி வீழ்த்தி விட வேண்டும்!"

"ஐயய்யோ!"

"ஏன் அலறுகிறீர்கள்? பாம்பே எப்படியும் ஸீஸருடைய வீரவாளுக்குப் பலியாகப் போகிறவனே! அந்தப் பலி அலெக்ஸாண்ட்ரியாவில் தாலமி மூலம்தான் நடைபெறட்டுமே?"

"திட்டம் தலை கீழாகி விடுமே!"

"உங்கள் சிந்தனைதான் இப்போது தலை கீழாக இருக்கிறது. இது மட்டும் நடந்து விடுமேயானால் வெற்றி நமக்குத்தான்!"

"அது எப்படி?"

"பாம்பேவைப் பிடிக்கும் பொருட்டு ஸீஸர் படை திரட்டி வருகிறான். இந்நிலையில் பாம்பேவை வீழ்த்தி அவனுடைய தலையைப் பரிசாகத் தந்தால் ஸீஸர் தாலமிக்கு உதவக் கூடும். இந்தக் கிளியோ கைமாறாகக் கூண்டில் அடைபட்டு விடுவாள்."

யாருடைய சிந்தனை தலைகீழாகிவிட்டது என்பதுதான் அப்போலோ டிராஸுக்குப் புரியவில்லை. அவனுடைய அந்தக் குறி மாற்றத்தைக் கூர்ந்து கவனித்தாள் கிளியோ. மதுவால் சிவந்திருந்த அப்போலோவின் அகன்ற கண்கள் மலங்க மலங்க விழிக்கத் தொடங்கின.

"ஏன் மருட்சி கண்டு விட்டீர்கள் அப்போலோ?" — கிளியோபாத்ராவின் இதழ்களில் ஒரு கீற்றின் தெளிவு.

அப்போலோ டிராஸ் சொன்னான்: "கிளியோபாத்ரா, என் ராணி! தலையெழுத்தை இப்படி நிர்ணயித்துக் கொள்ளக் கூடாது.!"

"அப்போலோ, என் அப்போலோ! என் தலையெழுத்தை நானே நிர்ணயித்துக் கொள்ளும் நிலையில்தான் நான் இப்போது இருக்கிறேன். ஸீஸரைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர் நீங்கள். ஸீஸர் ஒரு சுத்தமான மாவீரன். ஒரு மாவீரனைத் தன்னுடைய கையால் கொல்ல விரும்புவானே யல்லாது, தாலமியாகிய என் சகோதரன் கையால் கொல்ல விரும்ப மாட்டான். மேலும் வேறு நினைத்துக் குழி மூலம் தாலமி. அவனுடைய கையால் பாம்பே வெட்டுப்பட்டால் ஸீஸர் சீற்றம் கொண்ட சிங்கமாவான். பாம்பே ஸீஸரின் பகைவனானாலும் மருமகன். மகள் ஜூலியாவை அடுத்தவன் விதவையாக்க நிச்சயம் விரும்ப மாட்டான். இதுதான் உணர்ச்சிக்குள்ள வேறுபாடு. ஒருவேளை பாம்பேவை உயிரோடு பிடித்துத் தாலமி ஒப்படைப்பானேயானால் நம் கதி, அதோ கதிதான்!"

அப்போலோ டிராஸுக்கு ஆச்சரியம் கரை புரண்டது. "கிளியோ! நீங்கள் உண்மையில் உலகை ஆளப் பிறந்தவர்கள்தான். ராஜதந்திரம் உங்கள் காலடியில் பாதபூஜை செய்கிறது!"

இடிநகை புரிந்தாள் கிளியோபாத்ரா. 'இத்தனை காலம் பிடித்ததா என்னைத் தெரிந்து கொள்ள?' என்பதுபோலிருந்தது அந்தப் பயங்கரச் சிரிப்பு.

அப்போலோ நாவசைத்தது. "இதனால் நமக்கு ஏற்படப் போகிற லாபம்? தாலமியை வீழ்த்திய ஸீஸர் எகிப்தை உங்களிடம் ஒப்படைப்பார் என்பது என்ன நிச்சயம்?"

"அப்போலோ! அடிக்கடி உங்களை வைத்தே பிறரைப் பார்க்கிறீர்கள். ஸீஸர் பார்வை யுள்ளவன். கலாரசிகன். வண்ண ஓவியங்களைக் கண்டால் மேலும் எப்படி அழகு படுத்தலாம் என்று சிந்திப்பவன். கிளியோவின் அழகை மறைந்த [illegible] யார் என்று தேட முற்படுவான். ஆயிரம் போர் வீரர்கள் சாதிக்க முடியாத ஒன்றை அழகு சாதித்து விடும்!"

"அதிசயமான சாதனை! இந்த அழகைக் கொண்டு கடைசியாக ஸீஸரை வசப்படுத்தலாமே! இதற்கு ஏன் இத்தனை கலோபரம்? வீணில் பாம்பே எதற்குப் பலியாக வேண்டும்? பிழைத்துப் போகட்டுமே!"

"கொஞ்சமாவது அரசியல் ஞானத்தோடு பேசுங்கள் அப்போலோ! ஒரு மாவீரன் சரித்திரத்தை நான் மாசுபடுத்தியவள் என்றாகக் கூடாது. கேவலம் போகத்தை முன்னிட்டு வீரத்தைப் பணயம் வைத்து விட்டான் என்ற பழிச்சொல் ஸீஸருக்கு ஏற்படக் கூடாது. என்னுடைய ஆசையை முன்னிட்டு ஸீஸர் போயும் போயும் தாலமியை எதிர்ப்பதா? உலகம் என்ன நினைக்கும்? காலை (பிரான்ஸை)க் கலங்கடித்தவன், இத்தாலியை ஏங்க வைத்தவன், கிரேக்கத்தைக் கிறக்கம் காணச் செய்தவன், பிரிட்டனின் பிடரியைப் பிடித்தவன், ஆசியாவின் ஒரு பாகத்தை அலறடித்தவன் ஜூலியஸ் ஸீஸர்! அவனாவது வீரத்துக்கு மோக விலங்கிடுவதாவது? கிளியோவும் ஏமாளியல்ல; ஸீஸரும் ஏமாறுபவனல்லன்!"

"பின் எப்படித் தாலமி வீழ்ச்சிக்குப் பிறகு எகிப்தை முழுமையாக வழங்குவார்?"

"முதலில் நான் சொன்னபடி செய்து முடியுங்கள். பிறகு நடப்பதைக் கவனியுங்கள்!"

ஒயிலாக ஒசிந்து பஞ்சணையில் சாய்ந்தாள் மயிலனைய மாவழகி கிளியோபாத்ரா. அவளுடைய வலக்கரம் அருகிலிருந்த பொற்தட்டில் குவித்து வைத்திருந்த கருந் திராட்சைக் கொத்தை எடுத்துச் சுவைத்தது.

அப்போலோ டிராஸ் விடை பெற்றான்.

எகிப்தின் வரலாறே ஒரு விசித்திரம் நிறைந்தது. அதைவிட விந்தையானது உறவு முறை! அண்ணன் தங்கையை மணக்கலாம்; தம்பியும் உடன் பிறந்த அக்காளை மணக்கலாம்! வேதனைக்குரிய நாகரிகமாகும் தூய ரத்தக் கலப்பை வைத்து மரபு பேசுகிறார்கள்! இப்போதும் கூடத் தாலமிக்கும், கிளியோபாத்ராவுக்கும் ஏற்பட்ட தகராறுதான் என்ன? பதினெட்டே வயது நிரம்பிய தமக்கை — கிளியோபாத்ரா — தன்னை மணக்கச் சம்மதிக்கவில்லையே என்ற பகைப் பொருமல்தான் தாலமிக்கு! அவனுக்குத் துணை நின்றனர் அரசியல் பேரதிகாரிகள்!

'தாலமி' என்பது மரபுப் பெயர்.

கிரேக்க மாவீரன் * அலெக்ஸாண்டர் எகிப்தைக் கைப்பற்றி வெற்றி கண்டதும், வெற்றிக்குக் காரணமா யிருந்த தன்னுடைய

---

* இ. மு. 332.






லைப்பாய்
இருக்குமிடம்: அதுவே
ஆரோக்கியம்
இருக்குமிடம்
புத்துணர்ச்சி தருவதிலே ஈடிணையற்றது லைப்பாய் ஸ்நானம். உற்சாகப் பெருக்கு. உல்லாச ஊற்று. ஆரோக்கிய மிதப்பு. நல்ல சோப்புக்குரிய நன்மைகள் யாவும் பெறுவீர், மேலும் பெறுவீர் லைப்பாய் துணையால்...
அழுக்கிலுள்ள கிருமிகளைக்
கழுவிக் களைவது
லைப்பாய்
LIFEBUOY
for health

நண்பனும் தளபதியுமான தாலமி என்பா விடம் அந்நாட்டை ஒப்படைத்தான். நன்றிக்குரிய தாலமி, நண்பனும் மாவீரனுமான அலெக்ஸாண்டரின் பெயரையே தலைநகருக்கு இடலானான். அன்று முதற்கொண்டு வழங்கிய பெயர்தான் அலெக்ஸாண்டிரியா. அந்தத் தாலமியின் பரம்பரையில் வந்த பதினென்காவது தாலமிதான் கிளியோபாத்ராவின் இளைய சகோதரன் — பதினாறு வயதுடைய இந்தத் தாலமி!

பதின்மூன்றாவது தாலமியும், கிளியோபாத்ராவின் தந்தையுமான எகிப்திய அரசன், பிரமிட்டுக்குள் (கல்லறைக் கோபுரம்) நுழையுந் தறுவாயில் ஓர் உயில் எழுதினான். அதாவது, மூத்த மகள் கிளியோபாத்ராவைத் தாலமி மணந்து எகிப்தை ஆள வேண்டும் என்பதே அந்த உயிலின் சாரம். மற்றபடி இன்னொரு மகன் சின்னஞ் சிறுவனான தாலமியைப் பற்றியோ, இளைய மகள் அர்சினுவைப் பற்றியோ எந்த விதக் குறிப்பையும் எழுதினானில்லை.

அவருடைய மறைவுக்குப் பிறகு வண்ணக் கலாப மயிலான வடிவழகி கிளியோபாத்ரா, எண்ணி மகிழத் தக்கவனா சின்னப் பயல் தாலமி? அறவே மறுத்தாள்; அகம்பாவத்தால் நகைத்தாள்!

தாலமி அரசனாய் விட்டதாலேயே கிளியோபாத்ரா மகிழ்ந்து விடுகிறவளா என்ன?


எத்தனை தூது; எத்தனை எத்தனை சமாதானங்கள்; பெரிய பெரிய பிரபுக்கள் அரிய கருத்துரைகள் அடுக்கிப் பார்த்தும் சரிந்தது தான் மிச்சம்! முடிவு?

கிளியோபாத்ராவைக் கொலை செய்துவிடும்படி உத்தரவு பணித்தான் தாலமி! அழகு கொலையுண்டு போக யாரும் விரும்பவில்லை தான். ஆயினும் அது அரசனின் ஆணை! நிறைவேறியாக வேண்டும்!

பயந்தாளில்லை பாவை கிளியோபாத்ரா.

தக்க பக்கத் துணையுடன் மறைமுக வழியாக, சிரியா நாட்டை நோக்கிப் பயணமானாள். அங்கே சிறிது காலம் தங்கிச் சூன்ய வலை விரிக்கத் திட்டமிட்டாள். தமக்கையின் அரிய பெரிய குணத்தைப் பற்றித்தான் தாலமி அறிவானே! உடன் படை திரட்டிக் கொண்டு பின்தொடர உத்தரவிட்டான்.

பெலூஸியத்தில் அழகின் உருவடிவாய் நின்ற கிளியோபாத்ரா எந்நிலையில் அலைமோதிக் கொண்டிருந்தாளோ அதே நிலை தான் தாலமிக்கும்! எகிப்திய அரசனை அவனுக்கு இப்போது ஒரு சோதனைக் காலம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒருபுறம் தனக்கு மனைவியாக மறுத்த கிளியோபாத்ரா, சிரியா நாட்டை அடைந்து பெலூஸியத்தில் படை திரட்டுகிறாள்! இன்னொருபுறம் தன் நாட்டுக் கலகத்தை வேறு தூண்டி விட்டுச் சென்றிருக்கிறாள். இப்போது ரோம் நாட்டு மாவீரன் பாம்பே எகிப்தியத் துறைமுகத்தில் அடைக்கலம் கோரிக் காத்திருக்கும் பிரச்னை வேறு பெரும் பிரச்னையாக முளைத்திருக்கிறது. அவனைச் சிறைப்படுத்த ரோமாபுரிச் சிங்கம் வேறு கர்ஜித்தவாறு வந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் என்ன முடிவு காண்பது?



லஞ்சமா பாதகம்

அயூப்கானை வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் பாகிஸ்தான் ஆட்சிப் பொறுப்பை யாஹ்யாகான் ஏற்றுக் கொண்டதன்பின் ஒரு வருடம் ஓடி விட்டது.

கடந்த ஒரு வருட காலத்தில் யாஹ்யாகான் அரசு அரசாங்க அதிகாரிகள் 17,000 பேர் மீது லஞ்சப் புகார்களின் மீதான விசாரணை நடத்தியது. இவர்களில் கடுமையான ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான 303 உயர்தர அதிகாரிகளை உடனடியாக சஸ்பெண்டு செய்து விலக்கி வைத்தது.

இப்போது அவரது கவனம் பாகிஸ்தானுக்கு மீண்டும் ஒரு ஜனநாயக ஆட்சியை அமைத்துத் தருவதில் திரும்பியிருக்கிறது. - இரா. தியாகராஜன்

அருகிலிருந்த பிரதம மந்திரி, பொதினஸையும் சேனாதிபதி அக்கில்லாஸையும் எத்தனை எத்தனையோ உபாயங்களை எடுத்துக் கூறிப் பார்த்தார்கள். அத்தனையும் அமைதி காண வழி வகுப்பனவாகத் தெரியவில்லை. இந்தச் சமயத்தில்தான் ஆசானான தியோடஸ் அங்கு வரலானான். அவன் ஏற்கனவே கிளியோபாத்ரா விரித்த சூன்ய வலையில் விழுந்து எழுந்து ஓன்றிவிட்டவன்.

"அரசனே! இதற்காகவா மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்வது? பாம்பேவுக்குப் புகலிடம் தருவது மதியீனம். அவனை நாம் வெட்டி வீழ்த்தித் தலையை ஸீஸருக்குத் தங்கப் பேழையில் வைத்துப் பரிசாக அனுப்பினால், அந்த ரோமாபுரிச் சிங்கம் மகிழ்ந்து விடும். பிறகு அந்தச் சிங்கத்தின் உதவி கொண்டே இந்தச் சிறு நரிகளான கிளியோபாத்ரா கூட்டத்தை முறியடித்து விடலாம்!"

'ஓகோகோ' வென்று பாராட்டுத் தெரிவித்தான் அரசன் தாலமி. எத்துணைப் புத்திசாலித்தனமான முடிவு! இதற்காகத்தான் ஓர் ஆசான் வேண்டும் என்பது!

பிரதம மந்திரியும், சேனாதிபதியும் கூட தியோடஸின் திட்டத்தைப் பூரணமாக வரவேற்றார்கள். அடுத்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத் தீவிரமாக முனைந்தான் எகிப்திய அரசன் தாலமி.

உத்தரவைத் தாங்கிப் புறப்பட்டான் சேனாதிபதி அக்கிலாஸ். அவனுடன் செப்டிமியாஸ் என்பவனும் சால்வியஸ் என்பவனும் துணை சென்றனர்.

ரோமாபுரியின் அழகு மிக்க கண்களுக்கே இரு கண்களாக விளங்கியவர்கள் ஜூலியஸ் ஸீஸரும், பாம்பேயும்! இருவரிடையே அதிகார வெறி தலை நீட்டியதன் காரணமாக ஒருவரை ஒருவர் மாய்க்க முனைந்தனர். இதனால் ஏற்பட்ட போராட்டங்கள் பலப்பல. முடிவில் மாவீரனான பாம்பே வீழ்ச்சியடையலானான். அவனை உயிருடன் விட்டு வைப்

பதே தமக்கு ஆபத்து என்பதை உணர்ந்து படைகளுடன் துரத்தி வரலானார் ஸீஸர்!

வீரத்தின் தலையான பீடத்தைச் சரித்திரத்தில் ஏற்ற, பாம்பே எங்கெல்லாமோ ஓடி மறைய முனைந்தான். அவனுக்கு யாரும் தஞ்சம் அளிக்கவில்லை. காரணம் துரத்தி வருவது ரோமாபுரிச் சிங்கம் ஜூலியஸ் ஸீஸர்!

முடிவில் எகிப்திய நாட்டில் அடைக்கலம் கேட்டான் பாம்பே. அதன் பயன்—

தலை வேறு முண்டம் வேறாக ஆகியது. இந்தக் காரியத்தைச் செய்து முடித்தவன் செப்டிமியஸ்! ஒரு காலத்தில் இவன் பாம்பேவிடம் ஒரு சாதாரணப் போர்வீரனாகப் பணியாற்றியவன். சில பல சமயங்களில் துச்சமாக மதிக்கப் பெறும் சிறிய பொருள், ஒரு மதிக்கத் தக்க பெரிய பொருளையே வீழ்த்தி விடுகிறது என்பதற்கு இதைவிட ஓர் எடுத்துக் காட்டு தேவை இல்லையல்லவா?

பாம்பேயின் இறப்பைக் கண்டு அப்போதைக்கு அருகிலிருந்த அவனுடைய காதலி கார்னிலியா கண்ணீர் மல்கினாள். அவளென்ன? பிற்காலத்திலும் புவனமே அவனுடைய வீர வீழ்ச்சி கேட்டுத் துன்பக் கடலில் மிதந்தது என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

ஜூலியஸ் ஸீஸர் எகிப்தின் தலைநகரமான அலெக்ஸாண்டிரியாவை அடைந்தார். தஞ்சமளித்த தாலமியின் தலையைக் கிள்ளி, தம்முடைய மகனுக்குப் பந்து விளையாடத் தர நினைத்தார். ஆனால் அங்கே காத்திருந்தது—

“ரோம் நாட்டு வீரச் சிங்கம் ஸீஸர் அவர்களுக்குத் தலை வணக்கம்! தாங்கள் தேடி வந்த அரிய பொருளைத் தங்கள் பாதாரவிந்தத்துக்குக் காணிக்கையாக அனுப்பி வைத்திருக்கிறார் எங்கள் அரசர் தாலமி!”

“அப்படியா? அதை நான் அறியலாமே!” என்று கர்ஜித்தார் ஸீஸர்.

சேனாபதி அக்கில்லாஸ் தங்கப் பேழையைத் திறந்து பாம்பேயின் தலையை வெளியில் எடுத்தான்! “ஸீஸர், எம் பிரபோ! தாங்கள் செய்ய வேண்டிய இக் காரியத்தை, தங்கள் ஆதரவைப் பெற எங்கள் அரசர் தாலமி செய்து முடித்திருக்கிறார்!”

“.... பாம்பே!” என்று அலறிவிட்டார் ஸீஸர். “நான் செய்ய வேண்டிய இக் காரியத்தைத் தாலமி செய்யும்படி உத்தரவளித்தவர்கள் யார்? என்ன நெஞ்சழுத்தமடா உங்களுக்கு?”

துடித்தெழுந்த ஸீஸர், நெஞ்சு விம்ம, நினைவு தடுமாற, அஞ்சா நெஞ்சம் படைத்த அரிமாவான பாம்பேயின் வீர முகத்தைக் கூர்ந்து கவனித்து, 'கோ' வென்று அழுது புலம்பினார். வீரனின் அருமையை வீரன் தான் உணர்வான் என்பதை எடுத்துக் காட்ட அந்தக் காட்சி அமைந்து நின்றது.

“என் அருமை நண்பா, மருமகனே, பாம்பே! என்னுடைய வாளுக்கு இரையாகிச் சாவதை விட்டு இப்படிக் கோழைகள் கூட்டத்துள் தஞ்சமடைந்து தலைகொடுத்தாயே!” என்று ஸீஸரின் நாத் தழுதழுத்தது.

“ஒரு ரோமானியன் மீது வாளை ஓங்குமளவுக்கு எகிப்து தலையெடுத்து விட்டதா?” என்று கூறி வாளை உருவினான். அடுத்த கணமே—

அலெக்ஸாண்டிரியா குற்றுயிரும் குலையுயிருமாக வீழ்ச்சி கண்டது! வெறி கொண்ட சிங்கம் போலக் களத்திலிறங்கித் தலைநகரைச் சின்னபின்னமாக்கினார் ஸீஸர்.

ஆவேசம் தணிந்தது; அமைதி இடம் பெற்றது.

அரண்மனைக்குள் பிரவேசித்தார் ரோமாபுரிச் சக்கரவர்த்தி ஜூலியஸ் ஸீஸர்!

பொன்னாசனம் அவரை வரவேற்று அமரச் செய்தது. நகரில் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. எங்கும் வெற்றிக் குரல்கள்; ஸீஸருக்கான வாழ்த்துக் குரல்கள்!

அந்தச் சமயத்தில்—

கிளியோபாத்ராவின் அந்தரங்க ஆலோசகனான அப்போலோ டிராஸ் முன்வந்து, வணங்கி நின்றான்.

“யார் நீ?”

“பிரபோ! தங்கள் அடிமை! தங்கள் வெற்றிக்கு ஒரு பரிசைக் கொண்டு வந்திருக்கிறேன்!”

“என்ன பரிசு அது?”

அப்போலோ டிராஸ் பூ வேலைப்பாடுகளுடன் அமைந்த பெரிய மூட்டை ஒன்றைக் கொண்டு வந்து வைத்தான்.

“எவனையாவது மாய்த்த பரிசா?”

“இல்லை; எவரையும் மயக்கும் பரிசு!”

அப்போலோ டிராஸ் மூட்டையை அவிழ்த்தான். அதனுள்ளிருந்து பேசும் நீலச் சிலை போல வெளிப்பட்டாள் நைல் நதியின் ஒய்யக்காரி கிளியோபாத்ரா.

தேவதை போல் எழுந்து ஒயிலாக ஒசிந்து மயிலாக அசைந்த மான் விழியாள் தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டாள்: “ஸீஸர், என் பிரபோ! அடியாள் கிளியோபாத்ரா!”

“ஓ....” ஒரு கணம் வாய் பிளந்து அப்படியே சிலையாக நின்று விட்டார் ஸீஸர். மறு கணம் தன்னுணர்வு பெற்று, “கிளியோபாத்ரா! தாலமியின் சகோதரி! அலெக்ஸாண்டிரியாவின் அழகுப் பதுமை! எகிப்தின் எழிலோவியம்! நைல் நதியின் பௌர்ணமி மோகினி! உலகின் இதயத்து ஒவ்வொரு துடிப்பிலும் கலந்து விட்ட பேரழகு மகா காவியம்! ஸீஸர் படிக்க நினைத்த கவிதை வரிகள்! ஓ....” என்று அடுக்கினார்.

நாகத்தின் நெளிவைப் போல அதரங்கள் நெளிந்து புன்னகை பூக்க, மணக்க மணக்க விழிகள் அகன்று மோக நர்த்தனமிட, ஒலிக்க ஒலிக்கக் கால் தண்டை மனத்தை ஒன்றிடச் செய்ய—


அன்னமனைய நடை நடந்து நடந்து அருகே வந்தாள் உலகின் அழகுப் பதுமையெனப் புகழ் பெற்ற கிளியோபாத்ரா!

சுநாதமான சிரிப்பொலியுடன் ஜூலியஸ் ஸீஸர் வரவேற்றார்: “கிளியோ! ஸீஸர் கடைசியாக வென்ற அழகுப் பிரதேசம் நீ!”

'இஹும்' என்று கிளியோ சிரித்தாள்! அந்தச் சிரிப்பு—

வென்றவர் ஸீஸரா? — இல்லை; நான்தான் என்பது போலல்லவா இருக்கிறது! வென்றவர் யார் தோற்றவர் யார் என்பதைத்தான் எகிப்து நாட்டுச் சரித்திர ஏடுகள் சொல்லிக் கொண்டிருக்கின்றனவே.

மனமகிழும்
காலைப் புத்துணர்வு
மணிக்கணக்கில்
நிலைத்திருக்க...



குளித்த பிறகு பாண்ட்ஸ்
ட்ரீம்ஃபிளவர் டால்க்!
பாண்ட்ஸ் ட்ரீம்ஃபிளவர்
டால்க்கின் நீங்காத
நறுமணம்...ஈரத்தை இழுக்கும்
தன்மை...நாள் முழுவதும்
காலைப் புத்துணர்வின் சுகம்.
இவை யாவரையும் உங்களிடம்
ஈர்க்கும்.

கோடையானாலும் இறுக்க
மானாலும் நறுமணத்துடன்
புதுமைப் பொலிவில், குளுமை
உணர்வில் உங்களை திகழ
வைக்கும் எக்காலத்துக்கும்
ஏற்ற பாண்ட்ஸ்
ட்ரீம்ஃபிளவர் டால்க்
இந்தியாவிலேயே அதிக
விற்பனையாகும் டால்க்.

மூன்று அளவுகளில்
கிடைக்கிறது.
ஃபாமிலி, பெரியது,
மத்திமம்.

பாண்ட்ஸ்
ட்ரீம்ஃபிளவர் டால்க்

சொகுசான சுகமளிக்கும் மிருதுவான டால்க்
சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏயில்
இணைக்கப்பட்டது)

P/5483

குழப்ப நாயகர்கள்

சமீபத்தில் காரைக்குடியில் நடந்த கம்பன் விழாவில் பிரதான அம்சம் 'குழப்பம்'.

"ராமாயண காவியத்தில் குழப்பம் மிகுந்தவன் யார்?" என்ற தலைப்பு பட்டிமன்ற விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.




நல்லவேளையாகப் பேச்சாளர்களின் வாய்களில் அடிபடக் கும்பகர்ணன், சுக்ரீவன், லட்சுமணன், மேகநாதன் ஆகிய நான்கு பாத்திரங்களை மாத்திரமே தேர்ந்தெடுத்தார்கள்.

தங்களால் பாராட்டத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பற்றிப் பேசும்போது அவர்களுக்குப் புகழ் மாலை சூட்டி, அவர்களை இந்திரன், சந்திரன், அறிவின் சிகரம், சிந்தனைச் சிற்பி, ஞானக் கடல் என்று பேசியே பழக்கப்பட்டவர்களுக்கு, அன்று ஒரு மாபெரும் சோதனை! தங்கள் அபிமானப் பாத்திரங்களைக் குழப்பத்தின் சிகரம் என்று நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தம்!

பட்டிமன்றத் தலைவருக்கு லட்சுமணன் மீது அபிமானம் போலும்! தம்முடைய உரிமையைப் பிரயோகித்து, லட்சுமணனை இந்தக் குழப்பக் குழுவிலிருந்து வெளியேற்றி விட்டார். மீதியுள்ள மூவரில் ஒருவரை நீக்க ரசிகர்களுக்கு உரிமை உண்டு. அவர்கள் வோட்டு அளித்தார்கள்.

இன்றைய ஜனநாயகத்தில் அதிக வோட்டுக்கள் பெற்றவர்களால்தான் பதவியில் ஒட்டிக் கொள்ள முடியும். ஆனால் இங்கு மேகநாதன் அதிகப்படியான இருபத்தி ஆறு வோட்டுக்கள் வாங்கியதால் விவாதத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டான். மிஞ்சியவர்கள் சுக்ரீவனும் கும்பகர்ணனும்தான்!

மீண்டும் இந்தக் குழப்பநாயகர்களைப் பற்றி ஒரு ரவுண்டு பேச்சு. பிறகு இந்த இரண்டு பேரும் ரசிகப் பெருமக்கள் வாக்குகளை நம்பித் தேர்தல் களத்தில் குதித்தார்கள். முப்பத்தி ஒரு வோட்டுக்கள் பெற்றுக் கும்பகர்ணன் வெற்றி பெற்றுக் 'குழப்ப சிகரம்' என்ற விருதுக்குப் பாத்திரமானான்! இப்போது அதிகப்படி வாக்குகள் ஜெயிக்க உதவியது! திரு அ. சா. ஞானசம்பந்தம் அதிருஷ்டசாலி. கும்பகர்ணனின் அட்வகேட் அவரே!



கொறிக்கவும் சிரிக்கவும்!

— கோமதி ஸ்வாமிநாதன்

நிலையும் விலையும்

தனி வயலின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் கடைசி நேரத்தில் ஏதோ தவிர்க்க முடியாத காரணத்தால் வயலின் வித்வானால் வர இயலவில்லை. நிர்வாகிகள் கச்சேரி நேரத்தை ஒத்திப் போடத் தீர்மானித்தார்கள். அப்போது மிருதங்கக்காரர் முகத்தைச் சுளித்தார். தமக்குப் பேசிய சன்மானத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்றும் ஒத்திப் போடுவதற்குத் தாம் ஒப்புக் கொள்ள முடியாதென்றும் சொன்னார்.

நிர்வாகிகளில் ஒருவர் சில விநாடிகள் யோசித்தார். பிறகு, "ரொம்பச் சரி! உங்கள் சன்மானத்தைக் கொடுத்து விடுகிறோம். ஆனால் நீங்கள் இன்று மாலை தனிக் கச்சேரி நடத்தி ரசிகர்களைத் திருப்தி செய்ய வேண்டும்" என்றார். மிருதங்கக்காரர் பதில் பேசாமல் உறையைத் தேடினார்.

இதற்கு நேர்மாறான ஒரு சம்பவம்: சமீபத்தில் ஓர் இளம் வித்வான் கச்சேரிக்கு அழைக்கப்பட்டபோது அந்த வித்வானுடைய தந்தை ஒரு விநோதமான நிபந்தனையைப் போட்டார். "என் பையன் வருவான். அதற்காக நீங்கள் பணம் கொடுக்கக் கூடாது. வந்து போகும் செலவைக் கூட நாங்கள் வாங்கிக்கொள்ள மாட்டோம். அவன் கலை, கலைக்காகத்தான்; விலைக்காக இல்லை" என்றார்.

அப்படியே குடும்பத்துடன் அந்த இளம் வித்வான் ஹைதராபாத்திலிருந்து சென்னைக்குப் பறந்து வந்தான்.


பன்னிரண்டே வயதான பாலகன் கார்த்திக் சேஷாத்ரியின் அற்புதமான சித்தார் வாத்தியக்



கச்சேரியை ரசிகர்கள் இப்படித்தான் சமீபத்தில் மூன்று மணி நேரம் மெய்மறந்து ரசித்தார்கள். ஆரோஹியும் பைரவியும் அமர்க்களமாக இருந்தன. அந்தப் பிஞ்சு விரல்களில்தான் எத்தனை வேகம்!

சத்திய கிட்டங்கி

கறிகாய்கள், மளிகைச் சாமான் இவைகளை மொத்தமாகக் கொள்முதல் செய்ய வேண்டுமானால், கொத்தவால் சாவடிப் பகுதிக்குச் சென்னைவாசிகள் செல்வது சகஜம். இதே போல் சத்தியத்தையும் மொத்த பேரம் செய்ய முடியுமா என்று யாரும் யோசித்து இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மௌண்ட் ரோட் (மன்னிக்க வேண்டும் அண்ணா சாலை) 'பாட்டா' கம்பெனிக்கு அருகிலிருந்த சுவர்ப் பகுதி சிந்தனையைத் தூண்டிவிட உதவியது. சத்திய சோதனை, சத்தியமேவ ஜயதே, சத்திய தரிசனம் என்ற விளம்பரச் சுவரொட்டிகள் கொட்டை எழுத்துக்களில் ஒன்றன்பின் ஒன்றாக ஒட்டப்பட்டிருந்தன. மூன்றும் நகரத்தில் இப்போது நடந்து கொண்டிருக்கும் மூன்று மேடை நாடகங்களின் பெயர்கள். வரிசைக் கிரமம் கூடப் பொருத்தமாக இருந்தது.



பட்டு மாமா – சிட்டு மாமி

கணவன்: பதிமூணும் நம்பர் பஸ்ஸிலே மாம்பலம் போயிட்டு வரலாம்னு கிளம்பினேன், பாதியிலே 'பிரேக்டவுன்'. பேசாமே திரும்பி வந்துட்டேன்.

மனைவி: இன்னொரு பதிமூணும் நம்பர் பஸ்ஸைப் பிடிச்சு இத்தனை சீக்கிரம் திரும்பி வந்தது ஒரு அப்போலோ சாதனைக்கு நிகரானதுதான்!



சந்தோஷ நடை

நீ இப்போது நம் அறையைப் பார்த்தால் மூர்ச்சை போட்டு விடுவாய். அத்தனை காலண்டர்கள் சேகரித்து விட்டேன். வர்ணப் படங்கள் போட்டவை, மாசம் ஒரு தரம் கிழிப்பவை, அன்றாடம் கிழிப்பவை, தினமும் தேதி கிழமை மாற்றிவைப்பவை என்று மொத்தம் நாற்பது இருக்கின்றன. 'லட்டி'யில் சிறிய சைஸ் பன்னிரண்டு. பெரிய சைஸ் ஆறு. அநேகமாக இன்று நாலு இடத்துக்குப் போகிறேன். மேலும் நாலு சுற்றி வந்து விடுவேன். சுவரில்தான் இனி இடம் இல்லை.

என்னுடைய நாவலில் ஒன்பது அத்தியாயங்கள் எழுதி விட்டேன். ஓர் அத்தியாயம் எழுதி வாசித்து முடித்தவுடன் வாசகர் அடுத்த வாரம் வரையில் தூங்கக் கூடாது. என்ன நடக்குமோ என்று ஆச்சரியப்பட்டு ஆவலோடு காத்திருக்க வேண்டும். அதுதான் தொடர்கதை. நம்ப அக்ஷயம் கிட்டே இதைச் சொன்னவுடனே 'அடே! உன் நாவல் கிடக்கிறது. நீ வருகிறாய் என்றாலே தூக்கம் போய் விடுகிறது' என்றான். அன்றைப் பகல். ஐந்து ரூபாய் கேட்டதற்கு இரண்டு ரூபாய் கொடுத்து விட்டு வெட்க மில்லாமல் திருப்பியும் கேட்டான்!



- அமரர் தேவன்

(லக்ஷ்மி கடாக்ஷம்)



பால ராமாயணம்

தூது வந்த ஹனுமானை எப்படியாவது தீர்த்துக் கட்டுவது என்று ராவணன் தீர்மானித்து விட்டான். ஆனால் "அது தர்மம் இல்லே! உன் கோபம் அடங்கணும்னு அவனை நீ துன்புறுத்தலாம். க்ளோஸ் பண்ணிடக்கூடாது" என்று மந்திரி யோசனை சொன்னார். ராவணன் அதை ஏற்றுக் கொண்டு ஹனுமான் வாலில் துணியைச் சுற்றி நெருப்பு வைத்து விடும்படி கட்டளையிட்டு விட்டான்.

அவ்வளவுதான்; ஹனுமான் வாலிலே துணிகளைச் சுற்ற ஆரம்பித்து விட்டார்கள். லங்காபுரியில் உள்ள பொம்மனாட்டிகளெல்லாம் எவர்சில்வர் பாத்திரம் வாங்கணும், வாங்கணும்னு சேர்த்து வைத்திருந்த அத்தனை பழந் துணிகளையும் இதற்காகக் கொண்டு வந்து குவித்து விட்டார்கள்."

* * *

பத்து வயதுச் சிறுமி செல்வி பெருந்தேவி, தன் சகோதரர்களுடன் சேர்ந்து ராமாயணக் காலக்ஷேபம் செய்ததைச் சமீபத்தில் கேட்டு ரசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. சிறுமி காவிய பாத்திரத்தையும் எவர் சில்வர் பாத்திரத்தையும் இணைத்துச் சிரிப்பு அலைகளைத் தோற்றுவித்தாள்.



வட்ட மேஜை

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15 - பரிசு பெறுகிறது.

நான் சென்ற வாரம் சென்னை மவுண்ட் ரோட்டில் உள்ள மத்திய மாவட்ட நூலகத்துக்குச் சென்றேன். எனக்குத் தேவையான புத்தகங்களை எடுக்க அங்குள்ள சிப்பந்திகளைக் கேட்டபோது, அவர்கள் என்னையே எடுத்துக் கொள்ளும்படி கூறி விட்டார்கள். நான் எனக்குத் தேவையான புத்தக எண்களைக் கண்டுபிடித்தேன். ஆனால் அங்கு வழக்கம் போல் எல்லா நூலகங்களிலும் உள்ளபடி புத்தக எண்களைக் குறித்துக் கொள்ளப் பேப்பர் துண்டுகளும், நூலில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டிய பென்சிலும் இல்லை. இதனால் அங்கு வருபவர்கள் தங்களுக்குத் தேவையான புத்தக எண்களை மனத்தில் மனப்பாடம் செய்ய வேண்டிய நிலை. அந்தக் குறையை அங்குள்ள சிப்பந்தி ஒருவரிடம் தெரிவிக்க, 'அவர் அரசாங்கத்தில் பேப்பர் பஞ்சம்' என்று விடை அளித்தார். நான் புத்தக அறையை அடைந்து எனக்குத் தேவையான புத்தகத்தைத் தேடும் போது ஒரே குழப்பம் அடைந்தேன். சரித்திரப் புத்தகம் இருக்க வேண்டிய இடத்தில் மற்றப் புத்தகங்களும் கலந்திருந்தன. கதைப் புத்தகங்கள் இருக்க வேண்டிய இடத்தில் மற்றப் பாட புத்தகங்களும் காணப்பட்டன. இதனால் நான் தேடி வந்த புத்தகம் கிடைக்காமல் வேறு புத்தகம் எடுத்துச் செல்ல நேரிட்டது. மத்திய மாவட்ட நூலகத்துடன் அமெரிக்க நூலகம், பிரிட்டிஷ் நூலகம் ஆகியவற்றை ஒப்பிட்டு நோக்கினேன். எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. நமது அரசாங்கம் நூலகங்களுக்குப் பணம் செலவழிப்பதாகப் பெருமைப்படுவதுடன் சரி. அரசாங்க நூலகங்களின் மூலம் குறைந்தபட்சப் பயனைக்கூட நம்மால் அடைய முடிவதில்லை.

சென்னை–15
23–4–70 இரா. பரஞ்சோதி

இன்று விவசாயக் குடிமக்கள் 'பாலிடால்' போன்ற மருந்து வகைகளைத் தங்கள் நிலங்களுக்கு இடுகின்றனர். இதற்குத் தூண்டுகோல் போல் தமிழக விவசாயத் துறையினர் விளம்பரங்கள் செய்கின்றனர்; கடன் தருகின்றனர். எங்கள் ஊருக்கருகிலுள்ள ஒரு கிராமத்தில் விவசாயி ஒருவர் மாடுகளை அவிழ்ப்பதற்காகத் தொழுவம் நோக்கிச் சென்றார்.

அங்கே அவர் கண்ட காட்சி! ஏழு காளைகளும் உயிரிழந்திருந்தன. என்ன செய்வார், பாவம்! தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

ஊரார் தீர ஆராய்ந்தனர். 'பாலிடால்' இட்டு உலர்ந்த வைக்கோலில் விஷம் இருக்கிறது என்பதை உணர்ந்தனர். அதனால்தான் மாடுகள் பிணமாயின.

முன்பு ஒரு முறை 'பாலிடால்' அடித்த தொழிலாளி ஒருவரே இறந்தது நினைவிருக்கலாம். அரசினரின் விவசாயத் துறையினர் உரம் போடுவது பூச்சி மருந்து அடிப்பது முதலியவை பற்றிப் பிரசாரம் செய்கையில் அதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களையும் விவசாயிகளுக்கு உணர்த்திக் காப்பு நடவடிக்கைகள் பற்றி விவரமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

ஐங்குணம்
22–4–70 மு. இராமமூர்த்தி

"நோயாளிகள் பென்ஷன், முதியோர் பென்ஷன், மாணவர்களுக்கு 'ஸ்காலர்ஷிப்', தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு உதவித் தொகை — பலவிதமான சலுகைகள், அகதிகளுக்குப் புனர் வாழ்வு உதவிகள்" என்று இப்படியாக எல்லாச் சமூகத்தினருக்குமே உதவிகள் செய்து வரும் அரசாங்கம், அங்கஹீனர்களுக்கு என்று தனிப்பட்ட முறையில் எந்தவிதமான உதவியோ அல்லது கைத்தொழில் வேலை வாய்ப்புக்களுக்கென்று ஒரு ஸ்தாபனமோ ஏற்பாடு செய்யாதது பெரிதும் வருத்தத்துக்குரியதே.

மாநிலத்துக்கு ஒரு கைத்தொழில் ஸ்தாபனம் வீதம் ஏற்படுத்தி, அதில் ஆண்டுக்கு இருநூறு அங்கஹீனர்களுக்குப் பயிற்சி ஏற்படுத்திக் கொடுத்தால், அங்கஹீனர்களும் பிறர் தயவின் கீழ் வாழ நேரிடாமல், சுய சம்பாத்தியத்தில் வாழ முடியும்.

சொருப்பு
18–4–70 ந. சேதுராமன்

கல்கி ஏப்ரல் 12ந் தேதி 'கொரிக்கவும் சிரிக்கவும்' பகுதியில் ஒரு துணுக்கு பற்றி:

இலவம் பஞ்சுக் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் பெருமளவில் நல்ல எண்ணெயுடன் கலந்தாலும், அக்மார்க் பரிசோதனையில் இந்தக் கலப்படம் வெளியாவதில்லை என்று ஒருசில பத்திரிகைகளில் வெளிவந்துள்ள தகவல் தவறு. நல்லெண்ணெயுடன் பஞ்சுக் கொட்டை அல்லது இலவம் பஞ்சுக் கொட்டை எண்ணெய் கலப்பு இருப்பதை 'ஹால்பென்' என்று கூறப்படும் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கலாம். இந்தப் பரிசோதனை செய்த பிறகே நல்ல எண்ணெய்க்கு 'அக்மார்க்' முத்திரை அளிக்கப்படுகிறது. ஆகையால் 'அக்மார்க்' நல்ல எண்ணெயில் கலப்படம் ஏதும் கிடையாது.

சென்னை-34 எம். ராமநாதன்
(பத்திரிகைத் தகவல் அலுவலகம்
23–4–70 இந்திய அரசாங்கம்)



சுயம் வரம்

ஆர். சூடாமணி

பாத்திரங்கள் :

டிரான்ஸிஸ்டர் — விளம்பர விளம்பி
அண்ணாமலை — குடும்பத் தலைவர்
மங்களம் — அவர் மனைவி
சுமதி — அவர் மகள்
ஸ்ரீதர் — அவர் மகன்
ரமேஷ் — சுமதியின் காதலன்
நல்லசிவம் — சேல்ஸ் டாக்ஸ் இன்ஸ்பெக்டர்

(அழகாக அலங்கரிக்கப்பட்ட பெரிய அறை. மூலையில் ஒரு பீரோ. காற்றோட்டத்துக்காக நிறையத் துளைகள் உள்ள அமைப்புக் கொண்டதும் முன்புறம் கண்ணாடிக் கதவு உடையதுமான அந்தப் பீரோ பூட்டியிருக்கிறது. வர்த்தக ஒலிபரப்பின் அவ்வப்போது ஒலிக்கும் (நாடகத்தில் குறிப்பிட்டுள்ள) விளம்பரங்களைத் தவிர மற்ற சமயங்களில் அதில் இசைப்பா. இசைத் தட்டுகள் ஒலிபரப்பாகிக் கொண்டிருப்பதாக வைத்துக் கொள்ளலாம்.

ரமேஷும் சுமதியும் அறைக்குள் வருகிறார்கள். இருவரும் வாலிப வயதினர்கள். ரமேஷ் தன் கையில் ஒரு சிறிய தோல் பெட்டியைப் பிடித்துக் கொண்டிருக்கிறான். சுமதி சோபாவில் அமர்ந்ததும் அவனும் பெட்டியை அருகில் உள்ள மேஜை மேல் வைத்து விட்டு இன்னொரு சோபாவில் உட்காருகிறான்.)

சுமதி: நம்ம விஷயம் இப்படியே போய்க்கிட்டிருந்தால் எப்பத்தான் என் அப்பாகிட்ட சொல்றது ரமேஷ்?

ரமேஷ்: நான் எப்பவும் சொல்லத் தயார்தான். நீதான் கிட்டி முட்டி வந்தால் பயப்படறே.

சுமதி: பயப்படாமல் என்ன செய்யறது? அப்பா என்ன சொல்வாரோன்னு என்னால் நிச்சயிக்கவே முடியலே. வியாபாரத் துறையில் இருந்து இருந்து அவர் மூளையே வியாபார மூளையாயிடுச்சு. தொழில்முட்டமுள்ள ஒரு பையனைப் பார்த்து என்னைக் கட்டி வைக்கப் போறேன்னு அவர் சொல்றபோதெல்லாம் எனக்குத் தூக்கித் தூக்கிப்போடுது.



ரமேஷ்: ஏன் போடணும்? நானும் ஒரு தொழில் கம்பெனியில்தானே வேலை பார்க்கிறேன்? எனக்கு உன்னைக் கட்டி வைக்க அவர் ஏன் தயங்கப் போகிறார்?

சுமதி: அது எனக்குத் தெரியுதான். இருந்தாலும் அவர் மனசில் இப்போதெல்லாம் வர்த்தக நோக்கத்தைத் தவிர வேறொண்ணுமே இல்லே. இது விளம்பர யுகமாம். அவர் கம்பெனி சரக்குகளுக்குக்கூட எவ்வளவு கவர்ச்சிகரமான விளம்பரமெல்லாம் கண்டு பிடித்திருக்கிறார், தெரியுமா?

ரமேஷ்: அவருக்கு விளம்பரத்தில் உள்ள மோகத்தைப் பற்றி நீதான் எனக்கு நிறையச் சொல்லியிருக்கியே சுமதி.

சுமதி: ஆமாம். அதனாலே, நல்ல விளம்பரத் திறமையும் வியாபார அறிவும் உள்ள ஆளைத்தான் அவருக்குப் பிடித்திருக்கிறதில் சந்தேகமில்லே. ஒவ்வொரு சமயம் அவர் நம்ம கல்யாணத்துக்குச் சம்மதிப்பாரோ மாட்டாரோன்னு நினைக்கிறப்போ எனக்கு எத்தனை பயமாயிருக்கு தெரியுமா? விஷயத்தை எப்படி அவர் ஏத்துக்கிறமாதிரி சொல்லலாம்னு யோசிச்சு யோசிச்சு ராத்திரி யெல்லாம் தூக்கமே வரதில்லே.

டிரான்ஸிஸ்டர்: தூக்கம் வரவில்லையா? கவலை வேண்டாம். 'நீலாம்பரி மார்ட்' மெத்தையும் தலையணையும் உடனே வாங்குங்கள் ''கும்பகர்ணன்'' நாடகத்தில் கதாநாயகனாக நடித்துப் புகழ் பெற்றவர் அதைப் பற்றிக் கூறுவது என்னவென்றால்....

சுமதி: ...அப்படியெல்லாம் இருந்தாலும் அப்பாவிடம் நம்மைப் பற்றிச் சொல்லாமலேயே இருக்கிறதும் எனக்குப் பிடிக்கலே.

ரமேஷ்: இன்னிக்கு அவர்கிட்ட நம்மைப் பத்திச் சொல்லி உன்னே எனக்குக் கல்யாணம் செஞ்சு கொடுக்கும்படி கேட்டுடலாம்னுதான் வந்திருக்கேன் சுமதி.

சுமதி (அவரகுறைப் புன்னகையுடன்) : எனக்குச் சந்தோஷமாகவும் இருக்கு. அதே சமயம் கவலையாகவும் இருக்கு.

ரமேஷ்: கவலே எதுக்குச் சுமதி? இந்த விஷயத்தில் அவர் சம்மதம் கிடைக்கணும்னு எனக்கு மட்டும் அக்கறை இல்லையா? நம் காதல் நிறைவேறலேன்னு என் உள்ளம் தூள் தூளாய் உடைஞ்சு போயிடும்.....

டிரான்: உடைந்த பொருளைச் சிப்படுத்த எப்போதும் அட்டை மார்க் கோந்தையே உபயோகியுங்கள்......

ரமேஷ் (ஆத்திரத்துடன் சுற்றுமுற்றும் பார்த்து): இது என்ன தொந்தரவு? எங்கே யிருக்குது டிரான்ஸிஸ்டர்? (சுமதி பீரோவைச் சுட்டுகிறாள்.) சரியாய்ப் போச்சு ! பீரோவுக்குள் டிரான்ஸிஸ்டரா? அதைக்



கொஞ்சம் திருத்திடேன் சுமதி. பேசும்போது அது ஒண்ணு குறுக்கே....

சுமதி: அதை நாங்க யாரும் திருத்த முடியாது ரமேஷ். அப்பாவுக்கு வர்த்தக ஒலி பரப்புகள் ரொம்பப் பிடிக்கும். விளம்பரங்களே நாங்க எல்லாரும் கேட்டுக் கேட்டு ஒரு வியாபாரச் சூழ்நிலையை அப்படியே உணரணுமாம். அதனால் அவர் டிரான்ஸிஸ்டரை முடுக்கிப் பீரோவில் வைச்சுப் பூட்டிடுவார். கேட்க இஷ்டமில்லாதவங்க அறையை விட்டுப் போக வேண்டியதுதான்.

ரமேஷ்: அப்ப வா, போகலாம். இங்கே இது பெரிய தலை நோவாயிருக்குது...

(ரமேஷ் கிளம்பும்போது ஸ்ரீதர் வருகிறான்.)

ஸ்ரீதர்: ஓஹோஹோ, ஜோடிப் புறாவை நான் தொந்தரவு செஞ்சிட்டேனு ?

ரமேஷ்: இந்த டிரான்ஸிஸ்டர் செய்யற தொந்தரவை விடவா?

ஸ்ரீதர்: அதை ஏன் கேட்கிறீங்க, சார் ! எங்கப்பா சரியான விளம்பரப் பைத்தியம். ஆமாம், இது என்ன பெட்டி?

(அருகில் வந்து எடுக்கிறான்.)

சுமதி (அவன் கையிலிருந்து பெட்டியைப் பிடுங்கி வைத்து) : நல்லாயிருக்குடா மரியாதை ! இன்னொருவர் சாமானே அப்படித்தான் வெடுக்குன்னு எடுப்பாங்களா ?

ஸ்ரீதர்: உனக்கு ஏன் அத்தனை கோபம் வருது? உன் காதலர் ஏதாவதும் ஸ்பெஷலாய் உனக்காக வாங்கி வந்திருக்கிறாரா?

சுமதி: அதைப் பத்தி உனக்கென்ன ?

ரமேஷ்: சரி போதும். இரண்டு பேரும் சண்டை போட்டுக்காதிங்க. ஸ்ரீதர், உன் அக்காவுக்கே அந்தப் பெட்டியில் என்ன இருக்குதுன்னு இன்னும் தெரியாது.

ஸ்ரீதர்: மாமா ? போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் வந்து இறந்து பார்த் சொன்னலும் அப்ப என்ன செய்வீங்க?

சுமதி: ஸப் இன்ஸ்பெக்டரா?

ஸ்ரீதர்: ஆமாம் சுமதி, அதைச் சொல்லத் தான் நான் வந்தேன். ஸப் இன்ஸ்பெக்டர் இந்த வட்டாரத்தில் பல வீடுகளை நேரில் பார்வையிட்டு விசாரிக்கிறாராம்.

ரமேஷ்: என்ன விசேஷம்?

சுமதி: அந்தத் திருட்டுக்கள் சம்பந்தமாகவா ஸ்ரீதர்?

ஸ்ரீதர்: ஆமாம், அதாவது பூட்டுடைப்பு சம்பந்தமாய். திருட்டுன்னு எங்கே நடந்தது?

ரமேஷ்: எனக்கு ஒண்ணும் புரியலே.

ஸ்ரீதர்: எங்க வட்டாரத்தில் சமீப காலமாய் ஒரு விசித்திரமான சமாசாரம் நடந்துகிட்டு வருது மிஸ்டர் ரமேஷ். இதுவரை பல வீடுகளில் நடந்தாயிட்டுது. யாரோ ராத்திரி வேளைகளில் பூட்டை உடைச்சுகிட்டு வீட்டுக்குள் புகுந்துடறாங்க...

சுமதி: ஆனா என்ன நோக்கத்தோடு என்றுதான் புரியலே. ஏன்னு எந்த வீட்டிலும் இதுவரையில் ஒரு பொருளும் திருட்டுப் போகலே.

ரமேஷ்: ஏதோ ஸப் இன்ஸ்பெக்டர் வரப் போறார்னு சொன்னியே ஸ்ரீதர்?

ஸ்ரீதர்: ஆமாம் ஸார் ! பூட்டுடைப்பு நடந்த வீடுகளிலெல்லாம் போலீசுக்கு 'கம்ப்ளெயிண்ட்' கொடுத்தாங்க. ஸப் - இன்ஸ்பெக்டர் ஒவ்வொரு வீட்டிலும் நேரடி விசாரணை செய்துகிட்டு வாராராம். சூனும

வீட்டில் இப்ப இருக்காரு. அடுத்தது இங்கே தான்.

(மங்களம் வருகிறாள். ரமேஷ் மரியாதையாக எழுந்து நிற்கிறான்.)

மங்களம்: சுமதி, ஸ்ரீதர், நீங்க ரெண்டு பேரும் டிபன் சாப்பிட வரல்லே? எத்தனை நேர...

(ரமேஷைப் பார்த்ததும் 'யார்?' என்ற குறியோடு நிறுத்துகிறாள்.)

சுமதி (அசட்டுச் சிரிப்புடன்): ...ம்.... அம்மா! ஒரு விருந்தாளி வந்திருக்கார்... அதாவது... ஸ்ரீதருடைய நண்பர். ரமேஷ்னு பேர். — மிஸ்டர் ரமேஷ்! இவங்க என் அம்மா.

ரமேஷ்: வணக்கம்.


மங்களம்: வணக்கம் தம்பி, உட்காருங்க. (அவள் உட்கார ரமேஷும் உட்காருகிறான்.) டிபன் சாப்பிடறீங்களா? இன்னிக்கு வெங்காய வடை...

ரமேஷ்: வேணாங்க, தாங்க்ஸ். நான் வரப்பவே டிபன் சாப்பிட்டுத்தான் வந்தேன்.

(அண்ணாமலையும் ஸப் இன்ஸ்பெக்டரும் வருகிறார்கள். எல்லோரும் எழுந்து நிற்கின்றனர். மங்களம் சேலை முன்றானையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறாள்.)

அண்ணாமலை: இந்தா, மங்களம், விசாரணைக்குப் போலீஸ் அதிகாரி வந்திருக்கிறார். ஸப் இன்ஸ்பெக்டர் நல்லசிவம். மிஸ்டர் நல்லசிவம், இவங்க மூணு பேரும்தான் என் குடும்பம். என் மனைவி, மகள், மகன்.

(ரமேஷைப் பார்த்ததும் நிறுத்துகிறார்.)



மங்க: இந்தத் தம்பி நம்ம ஸ்ரீதருக்குத் தெரிஞ்ச பிள்ளையாம்.

ரமேஷ்: கொஞ்ச நேரம் பேசிட்டுப் போகலாம்னு வந்தேன்.

சுமதி: அவர் பேர் மிஸ்டர் ரமேஷ்.—இவர் தான் என் அப்பா மிஸ்டர் அண்ணாமலை.

ரமேஷ்: வணக்கம் ஸார்!

அண்ணா: வணக்கம். ஏம்மா சுமதி, நீ அறிமுகம் செய்திருவே, இவர் உனக்குத் தெரிஞ்சவரா, ஸ்ரீதருக்குத் தெரிஞ்சவரா?

சுமதி: அதாவது... வந்து...

(ஸ்ரீதரைப் பார்த்து, 'உதவிக்கு வாயேண்டா நடிப்பயலே' என்பது போல் முறைக்கிறாள். அவன் அசைந்து கொடுக்காமல் இளிக்கிறான்.)

எங்க ரெண்டு பேருக்குமே தெரிஞ்சவர் தான்.

அண்ணா: எல்லாரும் உட்காரலாமே!

(ரமேஷ் தான் கொண்டு வந்திருந்த பெட்டியை மேஜையின் மீதிருந்து எடுத்துத் தன் இருக்கையின் அருகில் வைத்துக் கொள்கிறான்.)

இது என்ன அதிசயமான 'ஹவுஸ் ப்ரேகிங்' பார்த்தீங்களா மிஸ்டர் நல்லசிவம்!

நல்லசிவம்: ஆமாம். எவனோ ஒருவன் பூட்டை உடைச்சுக்கிட்டு உள்ளே நுழையறான்; ஆனா எதையுமே திருடாமல் போறான்.

அண்ணா: திருடுகிற நோக்கமில்லேன்னு, எதுக்குக் கஷ்டப்பட்டுப் பூட்டை உடைச்சுக்கிட்டு வரணும்? யாராலும் கையும் மெய்யுமாய்ப் பிடிச்சுடலாங்கற ஆபத்தையும் பொருட்படுத்தாமல் அப்படி ஒருவன் சும்மா வாணும் செய்வானா?

ஸ்ரீதர்: 'பப்ளிக் நியூஸென்ஸ்'னு சொல்லி அபராதம் போட முடியாதா?

நல்ல: முடியும். அதுக்கு ஆள் முதல்லே அகப்படணுமில்லே! யார் அவன், எப்படி வரான், எப்படிப் போகிறான் என்கிறதெல்லாம் புரியாமல் மர்மமாயிருக்குதே!

அண்ணா: எந்த வீட்டிலேயும் எதுவும் திருட்டுப் போகல்லே!

நல்ல: ஆமாம். ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் முழுவதும் நான் போய்ப் பார்த்தேன். வாசக் கதவைத் தாண்டியிட்டு உள்ளே வருகிறவன் எடுக்கும்படியாய் எத்தனையோ பொருள்கள் இருக்குது. எதையும் அவன் தொடலே. எல்லார் மனசிலும் ஒரு பீதி மட்டும் ஏற்பட்டுப் போச்சு.

ரமேஷ்: ஏன் ஸப் இன்ஸ்பெக்டர் ஸார், இப்படி அர்த்தமில்லாம ஒரு வேலையைச் செய்யறானே, ஒருவேளை எவனாவது பைத்தியக்காரனு இருப்பானோ?

மங்க (வீறிட்டு): ஐயையோ! பைத்தியமா?

அண்ணா: எதுக்கு அப்படிக் கத்தறே மங்களம், தொண்டை கிழியறப்பலே?

ஸ்ரீதர்: தொண்டைப் புண்ணோ இல்லே தோஷமோ இருமலோ வந்தால் கழுத்திலும் மூக்கிலும் தேய்த்துக் கொள்ள இப்போதே...

அண்ணா: எனக்கும் அப்படி ஒரு சம்சயம் தோணினது உண்டு மிஸ்டர் நல்லசிவம்.

ஸ்ரீதர்: எப்படி அப்பா? கழுத்திலும் மூக்கிலும் அந்த மருந்தைத் தேய்க்கணும்னு?

அண்ணா: அந்த ஆள் ஒரு பைத்தியமா இருக்குமோன்னு. இல்லேன்னு இப்படிக் காரணமே இல்லாம வரிசையாய்ப் பல வீடுகளில் பூட்டை உடைச்சுக்கிட்டு உள்ளே நுழைஞ்சுட்டு அப்புறம் எதையுமே திருடாமல் போவானு?

மங்க: ஏதேது, இன்னும் கொஞ்ச நேரம் போனால் அவன் எதையும் திருடலையேன்னு அழுதுடுவீங்க போல் இருக்குதே!

ஸ்ரீதர்: அழ விடாதீர்கள் தாயே! உங்கள் குழந்தைக்கு எப்போதும் 'தேவாமிருதம்' மிட்டாய்களும், பிஸ்கெட்களுமே கொடுங்கள். பிறகு அவன் நிச்சயமாய் அழவேமாட்டான்...

நல்ல: இப்ப நாம் எதையும் நிச்சயமாய்ச் சொல்றதுக்கில்லே மிஸ்டர் அண்ணாமலை. பூட்டை உடைச்சவன் அதுக்கப்புறம் உள்ளே புகுந்து திருடாமலோ எந்த விதத் தவறான காரியமும் செய்யாமலோ போறான்னு... அதுக்கு ஏதோ தகுந்த காரணம் இல்லாம இருக்காது. ஆனால் அவனை ஒவ்வொருதரமும் தப்ப விட்டு விட்டால் நமக்கு எதுவுமே புலன் தெரியாமல் போயிடும். அவனைப் பிடிச்சே ஆகணும். இந்த வட்டாரத்தில் இரவில் போலீஸ் ரோந்து சுத்த நாங்க ஏற்பாடு செய்யப் போறோம். ஆனா நீங்கள் எல்லோரும் கூட ஒத்துழைக்கணும். சில நாட்கள்வரை எல்லாரும் கொஞ்சம் உஷாராய் முழிச்சுக்கிட்டிருங்க. அடுத்தது எந்த வீட்டில் பூட்டு உடைக்கிற சத்தம் வந்தாலும் பயப்படாம எல்லாருமாய்ச் சேர்ந்து அவனைப் பிடிக்கப் பாருங்க. போலீஸும் கிட்டத்திலேயே இருக்குமானதாலே உடனே

எச்சரிக்கை

நாள்தோறும் உங்கள் சருமத்தை வெப்பம் பாதிக்கிறது

எப்படிப் பாதிக்கிறது? ஆரோக்கியமற்ற எண்ணெய்ப் பசை சருமத்தின் மேற்பரப்பில் படிந்து, தூசி - அழுக்குகளை ஆகர்ஷித்து சருமத் துவாரங்களை அடைபடச் செய்கிறது. சருமம் வியர்வையை வெளியிடும் திறன் பாதிக்கப்படுகிறது. முகப் பருக்கள், கரும் புள்ளிகள், களங்கங்கள் ஏற்படுவது எளிதாகிறது.

நீங்கள் செய்ய வேண்டியதென்ன? இந்த அல்லல்களிடமிருந்து உங்கள் முகத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ல்யோர் ப்யூடி மாஸ்க் ரீபெளியல் உங்களுடைய வழக்கமாகட்டும். சருமத் துவாரத்தினுள் ஆழப் படிந்துள்ள அழுக்குகளை உறிஞ்சும் ல்யோர் ப்யூடி மாஸ்க், தூய மென்மையும் மேனியெழிலை உங்களுடையதாக்குகிறது.

ல்யோர் ப்யூடி மாஸ்க்

கோடையிலே] சருமத்தைக் குளுமையுடன் தூய்மையாக்குகிறது

ல்யோர் சேல்ஸ் கார்ப்பொரேஷன்
14, காத்ரக் ரோடு, பம்பாய் - 31





தென் இந்தியாவுக்கு
பூரண விநியோகஸ்தர்கள் :

லிப்ரா (ஏஜன்ஸீஸ்) பிரைவேட் லிட்.
36, B-, மவுண்ட் ரோடு, சென்னை - 2

பண்டிட்
D. கோபாலாசார்லுவின

பால ப்ராஸ

குழந்தைகளுக்கு ருசியான டானிக்

1898 ஆண்டிலிருந்து பிரசித்தி பெற்றது...


ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட்
100 ... சென்னை

மூல நோயை

முற்றவிடாமல் நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து நிவாரணம் அடையுங்கள்;
— ரண சிகிச்சையையும் தடுங்கள்


PORTLAND
CEMENT
ACC
நிலையான உறுதி
இலவச தொழில்நுட்ப உதவி வழங்குவோர்:
தி கான்க்ரீட் அஸோஸியேஷன் ஆஃப் இந்தியா,
66-ஏ, ராஷ்ட்ரபதி ரோடு, செகந்திராபாத்.
எஸிஸி
தி அஸோஸியேடட் சிமெண்ட் கம்பெனிஸ் லிமிடெட்.
தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்.

வந்துடும். அந்த ஆள் ஓடிப் போயிடாமல் பிடிச்சுசலாம். இதை தான் இந்த வட்டாரத்துக்கு ஒரு பொது அறிக்கையாகவே அப்புறம் தெரிவிக்கடறேன்.

அண்ணு: ரொம்ப தாங்க்ஸ் ஸப்-இன்ஸ்பெக்டர். ஆமாம். போலீஸ் உதவியோடு கூட இந்தப் பகுதிக்காரங்களான நாங்களும் கொஞ்சம் விழிப்பாய்த்தான் இருக்கணும். பங்களாம், இனிமேல் ராத்திரியில் நாம யாருமே தூங்கக் கூடாது. அதுக்கு...

டிரான்: ...உயர்தர தேநீர் பருகுங்கள். உங்கள் பணத்துக்குத் தகுந்த பொருள் கறுப்புப் பட்டை 'பிஸ்டர்' மதான். கோடிக் கணக்கான மக்கள் அன்றாடம் அருந்தி ஆனந்தம் பெறுவது மணத்திலும் சுவையிலும் சிறந்த கறுப்புப் பட்டை பிஸ்டர் ம.

கமதி: ஸப் இன்ஸ்பெக்டர் ஸார்! அப்பா சொன்னப்பலே எங்க வீட்டைப் பொறுத்த வரைக்குமாவது எல்லாரும் முழிச்சுக்கிட்டு ஜாக்கிரதையாய்க் கண்காணிக்கிறோம்.

நல்ல: அப்ப நான் வரட்டுமா மிஸ்டர் அண்ணுமலே? வரேம்மா. எல்லாருக்கும் வணக்கம்.

(மற்றவர்கள் பதில் வணக்கம் செலுத்த நல்லசிவம் போகிறார்.)

அண்ணு (திரும்பி நின்று, ரமேஷிடம் கடுமையாக): யாரப்பா நீ? ஏதுனும் மறுபடிக் கெதிரில் உன்னோடு விவாதம் வேணும்னுதான் சும்மா இருந்தேன். இப்ப சொல்லு, யார் நீ?

ரமேஷ்: நான்... நான்தான் ஸார்... நான்தான் ரமேஷ். அதாவது உங்க மகள் கமதியும் நானும்....

டிரான்: ..எப்போதும் விரும்பி உபயோகிப்பது 'அப்பாலோ' ஸ்கூட்டர்தான்.

கமதி: ஐயையோ, அப்பா, நான் அவரோடு ஸ்கூட்டரில் போனதே இல்லே!

அண்ணு: எனக்கு முதல்லேயே சந்தேகம். தட்டிச்சு. ஸ்ரீதரின் நண்பன்னு சொல்லியே தவிர நீதானே முந்திரிக் கொட்டையாட்டம் முன்னுக்கு நின்னு இவனே அறிமுகம் செஞ்சு வச்சே கமதி? அதுவே எனக்கு என்னமோ மாதிரி பட்டது. நிஜத்தைச் சொல்லு. இவன் உனக்குத்தான் நண்பனு?

ஸ்ரீதர்: ஆமாம்ப்பா, அவனுக்குத்தான்.

அண்ணு (உரக்க): என்ன?

ரமேஷ்: கோபப்படாதீங்க மிஸ்டர் அண்ணுமலே. எங்க நட்பில் தவறேதும் இல்லே. நான் கண்ணியமானவன்தான்.

மங்க: தம்பியின் முகத்தைப் பார்த்தாலே தெரியலீங்களா?

அண்ணு (ஆவேசமாய்): முகத்தைப் பார்த்தால் என்னடி தெரியும்?

டிரான்: அருணு ஸ்னே, அருணு பௌடர்...

அண்ணு: ஏ கமதி, என்ன இதெல்லாம்?

கமதி: வந்து... இதுவா...?

ரமேஷ்: நாங்க ரெண்டு பேரும் ஒருவரையொருவர் விரும்பறோம் மிஸ்டர் அண்ணுமலே! திருமணம் செய்துக்கணும்னு ஆசைப்படறோம். அதுக்கு உங்க சம்மதமும் ஆசியும் வேணும்னு கேட்கத்தான் நான் இன்னிக்கு இங்கே வந்தேன்.

அண்ணு: ஓ! (ஆத்திரமாய்) எத்தனை காலமாய் நடக்குது உங்க காதல் நாடகம்?



தமிழ் கணக்கு இலக்கணம்

எங்கள் பள்ளிக்கூடத்திலே ஒரு விஞ்ஞான ஆசிரியருக்குத் தமிழ் மொழியில் பேரன்பு. தமிழ்ப் பண்புநிறைந்தவர் கூட. அவர் பேசுவதெல்லாம் செந்தமிழில்தான். அவர் விஞ்ஞானம் கற்பித்ததும் தனித் தமிழில்தான். அவர்தாம் திருவாளர் மங்கலொழுந்து பிள்ளை.

அவருடைய நாவிறு தனிப்பட்டது. ஏதோ ஒரு சிறு பிழை செய்த மாணக்கனை, அவர் புன்சிரிப்புடன் நோக்கி, "புத்தியைப் புறத்தே செல்ல விட்ட கழுதாய்! கழுதை மூதாய்! பெருஞ்சாரோகணம் செய்வாயாக!" என்று கூறியது போன்ற அவர் சொற்கள் இன்றும் என் காதுகளில் தொனிக்கின்றன.

டாக்டர் கே.எஸ். கிருஷ்ணன் (கட்டுரை)

சின்ன வயதில் என்னைக் கவர்ந்த புத்தகங்களில் ஒன்று ராதாகிருஷ்ண அய்யரின் கணக்குப் புத்தகம். சாமர்த்தியமான வகை வகையான கணக்குகள் எல்லாம் எனக்குச் சவாலாக இருக்கும். அதிலுள்ள நூற்றுக் கணக்கான பயிற்சிகளில் ஒவ்வொரு கணக்காகப் போட்டுத் தீர்த்தேன்.

டாக்டர் கே.எஸ். கிருஷ்ணன் (ரேடியோ உரை)

"காந்த சக்தி பற்றிய உன் ஆராய்ச்சிக் கட்டுரைகளை இங்கிலாந்தில் விஞ்ஞானிகள் கூர்ந்து படித்தார்கள்" என்று என்னிடம் சொன்னார் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன். நான் மகிழ்ந்து போனேன்.

"ஆனால் என் சொந்த அபிப்பிராயத்தைச் சொல்கிறேன் கேள்" என்று மேலும் தொடர்ந்தார் கிருஷ்ணன். "எழுதும்போது பக்கத்திலே எப்போதும் ஓர் இலக்கணப் புத்தகத்தையும் வைத்திரு. நல்லது. என் வழக்கம் அது." இப்படி இதமான உபதேசமும் செய்தார்.

டாக்டர் ராமச்சந்திர ராவ் (கட்டுரை)

திரட்டியவர்: டி. எஸ். வி.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

டிரான்: ஐம்பது ஆண்டுகளாய்... (எல்லோரும் திடுக்கிடுகிறார்கள்)... பிரசித்தி பெற்ற மாடல். இப்போதே உங்கள் அண்மையில் உள்ள ஏஜண்டிடம் சொல்லி....

அண்ணு: ஏ கமதி!

மங்க: குழந்தையை ஏன் மிரட்டறீங்க? அவள் பிரியப்படறான்னு அதுக்கு மேலே நமக்கு என்ன? பையன் நல்லவன்னு தெரிஞ்சுக்கன்னு உடனே அவன் தாய் தகப்பனைப் போய்ப் பார்த்து முகூர்த்தம் நிச்சயிக்க வேண்டியதுதானே?

அண்ணு: ரொம்பச் சுலபமாய்ச் சொல்லிட்டியே. நான் சம்மதிக்கலேன்னு இந்தக் கல்யாணம் நடக்காது.

ரமேஷ்: நீங்க என்னைப் பத்தி யார் கிட்டே வேணும்னாலும் விசாரிச்சுப் பாருங்க ஸார் உத்தரவாதத்துக்கு....

அண்ணு: நீ ரொம்ப நல்லவனாகவே இருக்கலாம் தம்பி. ஆனால் எனக்கு மருமகனாய் வர வேண்டியவனுக்குச் சில தகுதிகள் வேணும்.

ரமேஷ்: தொழிலைப் பற்றித்தானே? நானும் ஒரு தொழில் துறையில் வேலை பார்க்கிறவன்தான்.

அண்ணு: அதுமட்டும் போதாது. நான் தேர்ந்தெடுக்கறவன் விளம்பரத்தின் பெருமையைத் தெரிஞ்சுக்கிட்டிருக்கிறவனாய் இருக்கணும். இதோ என் குடும்பத்தார் இருக்காங்களே, நான் வர்த்தக நிகழ்ச்சிகளை ரசிச்சால்கூடப் பரிகாசம் செய்துகிட்டு. அப்படி இருக்கக் கூடாது. எங்க வட்டாரத் திருடனைப் பிடிச்சுக் கொடுத்தப்புறம் என் முதல் வேலை என் மகளுக்கு நான் நினைக்கிற மாதிரி மாப்பிள்ளை தேடறதுதான்.

ரமேஷ்: உங்களுடைய அந்த ரெண்டு வேலையுமே பூர்த்தியாயிட்டதாக நினைச்சுக்குங்க.

(எல்லோரும் அவனை வியப்புடன் பார்க்கிறார்கள். ரமேஷ் பெருமையோடு சிரித்துக் கொள்கிறான்.)

அண்ணு: அப்படின்னு?

ரமேஷ்: அந்தத் திருடனைப் பிடிக்கிற வேலை இனிமேல் உங்களுக்குக் கிடையாது.

அண்ணு: ஏன்?

ரமேஷ் (பெருமிதத்துடன்): ஏன்னு அவன் இனிமேல் இந்த வட்டாரத்துக்கு மட்டுமில்லே எங்கேயுமே வரமாட்டான். (நிமிர்ந்து நிற்கிறான்) அவன் வந்த வேலை முடிஞ்சு போய்விட்டது.

(எல்லோரும் குழம்புகிறார்கள்.)

ஸ்ரீதர் (இடைமறித்து): புரிஞ்சு போச்சு மிஸ்டர் ரமேஷ்! நீங்கதான் அந்தத் திருடன் இல்லையா?

சுமதி: டே, ஸ்ரீதர், என்னடா அவரை அப்படிச் சொல்லறே? அறைவேன் பார்.

ரமேஷ்: திருடன் நான் இல்லே ஸ்ரீதர், எங்க கம்பெனியிலே பணியாளாக உள்ள ஒரு சிறுவன். அவனை நான்தான் இப்படிச் செய்ய அனுப்பி வச்சேன்.

மங்க: அடப் பாவி! நீயா?

சுமதி: ரமேஷ், என்ன சொல்றீங்க? நீங்களா? நீங்களா திருடச் சொன்னீங்க?

ரமேஷ்: திருடச் சொன்னேனா? சுமதி! என்னை என்னன்னு நெனைச்சு அப்படிக் கேட்டுட்டே? எந்த ஒரு வீட்டிலாவது திருட்டு நடந்ததா?

அண்ணு: உண்மைதான். பின்னே?

ரமேஷ்: ஒவ்வொரு வீட்டிலும் அவன் என்ன செஞ்சான்?

மங்க: பூட்டை உடைச்சான்.

ரமேஷ்: ஆமாம். உடைச்சவன் நிஜமான திருடனா இருந்தால் எவ்வளவு கொள்ளை அடிச்சிருக்கலாம்? அதாவது திருட்டுக் கொடுக்கக்கூடியது மாதிரிதானே இருந்திருக்கு. எல்லாரும் தங்கள் வீட்டைப் பாதுகாக்கிற லட்சணம்? அவன் பூட்டுகளை உடைச்சான்னு, உடைக்கக் கூடிய பூட்டுக்களை எல்லாரும் பூட்டியிருக்காங்கன்னுதானே அர்த்தம்? அவைகளை நம்பி மோசம் போகலாமா? திருடன் நுழையற மாதிரி வீட்டை வச்சுக்கலாமா? ஆகவே...

(தான் கொண்டு வந்திருந்த பெட்டியின் 'ஜிப்' பைச் சரென்று இழுத்து மூடியைத் திறந்து போட்டு, வெற்றி முழக்கமாக)

உறுதிக்கு நிகரற்றதும் யாராலும் உடைக்க முடியாததுமான எங்கள் கோட்டை மார்க் பூட்டையே எப்போதும் உபயோகியுங்கள்!

(சிறிது நேரம் ஒரே பரபரப்பு. எல்லோரும் நெளிப்பதும் விழிப்பதும் எட்டிப் பார்ப்பதும் ஒரே சமயத்தில் பேசுவதுமான கலவரம். திறந்த நேரம் பெட்டியினுள் பல நிறங்களிலும் அளவுகளிலும் பூட்டுகள் வரிசையாய் இணைக்கப்பட்டிருந்தன. சிறிது நேரத்தில் கலவரம் தணிகிறது.)

ரமேஷ்: நான் ஒரு பூட்டு உற்பத்திக் கம்பெனியைச் சேர்ந்த ஊழியன்னு பெருமையாய்ச் சொல்லிக்கிறேன் மிஸ்டர் அண்ணுமலே!

(நாடக பாணியில் தலைவணங்கி நிற்கிறான்.)

சுமதி: நீங்க இப்படிச் செய்யப் போறதாய் என்கிட்டக்கூடச் சொல்லலையே ரமேஷ்!

அண்ணு (அதிசயமும் பரவசமுமாக): ஆஹா... ஆஹா... நான் சொன்ன மாதிரியே புது விதமாய் மனசில் பதியற மாதிரி ஒரு விளம்பரம் செய்து காட்டிட்டியே தம்பி!

மங்க (புன்னகையோடு): என்னங்க! ஒற்றைப்படையில் கூப்பிட்டுக்கிட்டு, மருமகப் பிள்ளையை!

அண்ணு: ஆமாம் ஆமாம், நீ சொல்றது ரொம்ப சரி மங்களம்!

சுமதி (மகிழ்ச்சி தாளாமல்): ஓ அப்பா! என் கண்ணு அப்பா, என் செல்ல அப்பா!

அண்ணு (உல்லாசமாக): அட! நம்ம மகள் முகத்தைப் பார்த்தீங்களா மாப்பிள்ளை! எந்நேரத்திலே அத்தனை பல்லும் வெளியே தெரிஞ்சுடுச்சே! அதுவும் வெற்றிலைக் காவி தெரியறுப்பலே!

டிரான்: பற்கள் அதி வெண்மையாய் நட்சத்திரங்கள் போல் மின்ன வேண்டுமா?, 'ப்ரைட் ஸ்டார்' பற்பசையை இன்றே வாங்குங்கள். வைத்திய முறைப்படி தயார்..

ரமேஷ்: நான் முதலில் போய் போலீஸ் ஸ்டேஷனில் எல்லா விவரமும் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கணும்.

அண்ணு: ஆமாம் மாப்பிள்ளை... ஆஹா, என்ன வியாபார மூளை! எப்படிப்பட்ட விளம்பரம்!

(ரமேஷின் முதுகில் ஆசையாய்த் தட்டிக் கொடுக்கிறார்)

என் மகள் தகுதியில்லாத ஒருவனை விரும்புவான்னு நான் முதலில் நினைச்சுட்டேனே, என்ன அசட்டுத்தனம் பார்த்தீங்களா? என் புத்தியைச் செருப்பாலே அடிச்சுக்கணும்...

டிரான்: ...ஸலோரு காலணிகளையே உபயோகியுங்கள்.

—(திரை)—

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன்
ஒரு வேனிஷிங் க்ரீமா?
ஆமாம்!
ஒரு வேனிஷிங் க்ரீம் போல
க்ருக்ஸ் லாக்டோ-காலமைன் உங்கள் சருமத்தை
வெய்யில், காற்று, தூசி எதனின்றும் பாதுகாக்கிறது.
காலமைன், விட்ச் ஹேஸல் இரண்டும் இணைந்து,
ரசுமறுவின்றி உங்கள் சருமத்தைப் பாதுகாத்து,
பட்டுப் போன்ற மெருகை அளிக்கிறது.
லாக்டோ-காலமைன்
பரிபூரண
ஒப்பனை
சாதனம்
Lacto-Calamine
இப்போது சின்னஞ்சிறு
சைஸிலும் கிடைக்கிறது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon